ஓம் பரப்பிரம்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

COPY RIGHT] [REGISTERED

கமலம்-4. Vol. 4. | சென்னை : சுக்கில ௵ பங்குனி ௴ 1௳ 1930-ம் ௵ மார்ச்சு ௴ 14௳ | இதழ்-48. No. 48.

## ஆநந்த தரிசனம்



வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

"கிட்டினவர்க்கேது குறை? கேடில்(லை) நெஞ்சே" கடாக்ஷம் கிட்டுங் காலத்தில் எந்தக் கருமத்தின் வழியாகவும் அது கிடைக்கக்கூடும். வங்காளத்தில் பவாஹாரி பாபா என்ற பெரியார் முன்பு வாழ்ந்திருந்தனர். ஒரு நாள் ஸ்வாமிகள் தங்கியிருந்த தனியிடத்திற்கு வந்த கள்வன் ஒருவன் ஸ்வாமிகள் கண்மூடினாரெனக் கருதினான். அதுவே சமயம் என்று ஆங்குக் கிடந்த தட்டுமுட்டுகளைத் தட்டிக்கொண்டு பிடித்தனன் ஓட்டம். ஸமாதி கலைந்த ஸ்வாமிகள் திருடன் ஓடுவதைக் கண்டார். உடனே அன்று தம்மைக் காணவந்தவர்கள் அன்புடன் கொடுத்த காஸ்மீர ஜரிகைச் சால்வை யொன்று, வெள்ளிப் பாத்திரம், ஸ்வர்ண லிங்கம், முத்துக் கண்டிகை, தங்கங் கலந்த தாழ்வடம், பூங்காவி யேற்றிய பட்டும், பருத்தியும், பற்பல கொண்ட பெரு மூட்டை யொன்றைத் தூக்கிச் சென்றனர் கொலைஞன் பின்னே. பெருமுள் தைத்து இரத்தம் பெருக மூர்ச்சித்து விழுந்தனன் பாபித் திருடன். அவன் மீது ஸ்வாமிகளின் அஸ்தம்படவே மூர்ச்சை தெளிந்தான். அபயம் ஸ்வாமி ஆள்க என்றான். ஸ்வாமிகளோ தாம் கொண்டுவந்த மூட்டையை அவனிடம் வைத்து இதையும் அங்கீகரித்தருளுக என்று பிரார்த்தித்தார். கள்வன்

---

அவன் வேலையை இவன் பழிக்கிறான். ஆனால் அந்த வேலையைச் செய்ய இவனுக்கு இந்த ஜென்மத்தில் அவன் புத்தி வரப்போகிறதே யில்லை.

பிரமித்தான்! எழுந்தான், விழுந்தான், அலறினான், வெயர்த்தான், களைத்தான், மெய்யும் சிலிர்த்தனன். உள்ளம் வெதும்பினன். அபயம் அபயம் என்றான். என்றன் வாழ்வே! என்னை யாட்கொண்டு காத்தருளல் வேண்டுமென்று அடி பணிந்தான். ஸகல ஆசைகளும் துறந்து அது முதல் துறவியாக விளங்குவதானான். பெரியாரின் கடாக்ஷம் கிட்டினவர்க்கு ஏது குறை?

ஃ

"தெளிவதற்குச் சூட்சமிது தெளிவாய்ப் பாரு" என்பதுபோல, வானமும் வையமும் கூடுமோரிடம் அங்கோரிடத்தில் உள்ளதெனக் கண்டோம். எத்துணை யெத்துணை அதை நோக்கி நெருங்கிச் செல்லினும், அத்துணை யத்துணை நீண்டதே நெடுக அதுவும்! இஃதே எம்பிரான் ஆநந்த லீலையைக் காட்டும் சூட்சும திருஷ்டாந்தம் என்று தெளிந்தோம். எவ்வளவு நெருங்கிச் சென்ற காலத்தும் தூர தூரமாக ஐயனின் தரிசனம் அப்பால் எட்டிச் சென்றுவிடுவதும், தேடித்தேடி வாடி மூர்ச்சித்த காலையில் அத்தெரிசனம் கண்ணுக்கெதிரில் வெகு சமீபமாகப் புலப்படுவதும் அனுபவமாம்.

ஃ

"தேனூறுபாயுமடி திருவடி கண்டவர்க்கே" பக்குவமுள்ளவர்களுக்குப் பகவான் திருவுருக்கொண்டு பிரசாதித்தலும் உண்டு. எவ்விதம் கண்கட்குப் புலனாகாத நீராவியானது குளிர் காற்றின் சேர்க்கையால் ஜலமாகி அந்த ஜலமும் பனிக்கட்டியாய் இறுகுகின்றதோ, அதுபோல எம்பெருமான் அன்பர்களது அன்பு காரணமாக "அருவம்"—உருவமாய் மாறித் திருவுருக் கொண்டு பிரத்தியக்ஷமாதலும் உண்டு. பாகவதப் பெரியார் பகவானுக்கு அடிமைகள். பகவானே பாகவதர்க்கு அடிமைத்திறம் செய்தே சந்தோஷிப்பவனாம்.

ஃ

"நினைந்துநைந்து மடியாரை நையவைத்தா ரென்றதேனோ?" எவர்கள் பகவானிடத்தில் பக்தி பூண்டொழுகுகின்றனரோ அவர்கட்கே சோதனைகளும், வாழ்வின் விபத்துகளும் அதிகமாக நேரிடுகின்றன. பாபிகளோ பரம சுகபோகங்களில் ஆநந்தமாயுள்ளார். இந்த மாறுதல் எதற்கோ என்பது வினா? "தொண்டர் குடிகெடுக்கத் துவஜங்கட்டிக் கொண்ட மோரதுரு" என்ற அருட்பிரகாச வள்ளற்பெருமானது மெய்க்கூற்றே அதற்கு விடையாகும். பகவான் எவனுக்குத் தமது பரிபூரண கிருபையைப் பிரசாதிக்க நினைக்கின்றாரோ அவனது ஸர்வ சொத்துகளையும் அபகரித்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாகத் தம்மையே அவனுக்குக் கொடுக்கின்றார். இரும்பைப் பிடித்த துரு ஒழிந்தமாத்திரத்திலே காந்தம் அதைத் தன்னிடம் இழுப்பது பிரத்தியக்ஷம். இவ்வுலக வாழ்வில் மனிதன் இரும்புபோலவும், அவனது சுகசெல்வங்கள் இரும்பைப் பிடித்த துரு போலவும் நிற்க, அந்தத் துருப் பிடித்ததை நீக்கினதும் காந்தம் போன்று இலங்கும் கடவுள் அந்த இரும்பைத் தம்மிடத்திற்கு இழுத்துக் கொள்கின்றார்.

ஃ

---

நல்ல நடத்தையை உண்டாக்குவதற்கு வீட்டிலுள்ளவர்களது செல்வாக்கு திறமையாக இருக்கவேண்டும்.

**"வினைதான் ஒழிந்தாற் றினைப்போதளவும் நில்லாது தேகம்"** நிகழும் தேகபோகங்களுக்குக் காரணமான முன்வினை இத்தேகம் விழும்போது தானே விழுந்திடுமாம். பல ஜென்மங்களில் செய்த தீவினையை ஒரே ஜன்மத்திலேயே பகவான் விலக்குவாரென்று சாது ஜனங்கள் கூறுவர். கூறுவதற்கேற்ற பக்குவமும் வேண்டுமே. பக்குவமில்லாதவர்களுக்கு முன்வினையாகிய பெரிய மலை துண்டு துண்டாய் நெருங்கிவந்து விடைபெற்று ஒழியும். அதாவது சிறிது சிறிதாய் விலகவேண்டு மென்றபடி. எனெனில், தன்னூர் விட்டு வேற்றூர் செல்லத்துணிந்த ஒருவனைக் கடன்காரர் வழிமறித்து கடனையுடனே கொடுத்துவிட்டுச் செல் என்று கேட்பதுபோல, ஒருவன் பிரபஞ்ச ஆசைகளை விடுத்து பக்தி மார்க்கத்தில் புக எத்தனித்தாலும் பழய வினைக்கூட்டம் கும்பு கும்பாய் வந்தே வழிமறித்தலால், அவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் பக்குவப்பட வேண்டியவனும், அதற்கேற்றதுபோல் சிறிது சிறிதாகக் கடைத்தேறவேண்டியவனுகவும் இருக்கின்ருன்.

ஃ

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்பது சரிதான். நாம் காணப்பெற்ற பெரியவரொருவர் உண்மைச் சாதுவே எனத் தெரிந்துகொள்வது எவ்விதம்? நாம் இதுகாறும் அறியாத குதூகலம் அவரைத் தரிசித்தளவில் உண்டாகுமானுல் அதுவே முதல் அடையாளமாம். பிரியாதுபிரிந்த காதலன்றன்னை நினையாத சமயம் சந்தித்த காதலி எத்துணைச் சிறப்பினதாய ஆநந்தம் பூப்பளோ அத்துணைச் சுகமும் ஒரு பெரியாரின்—யோகியின்—சந்நிதியை நாம் அடைந்த காலத்தில் அடைவதும் சத்தியம்; சந்தேகமில்லை. ஒரு உதாரணம் கூறுவோம். அன்னத்தைப் பழித்தும், ஸ்வர்ணத்தை வென்றும், கிள்ளை நாணவும் விளங்கிய யுவதியை ஒருவன் அப்பொழுதுதான் முதலிற் கண்டானேனும், கண்ட அக்கணமே கண்ணனைய மொழியாளுக்குக் கண்ணையும் தன் மனத்தையும் காணிக்கையாகக் கொடுத்து உயிரற்ற உடலெனக் காதலன் உழல்வதுபோல், சாதுவின் தரிசனம் கண்ட அக்கணமே பரமானந்தமாய்த் திகழுமென்க. அன்பே வருவென ஒளிரும் ஞானியின் ஸமுகம் சேர்ந்தால் ஏன் நாம் அன்பைப் பெற முடியாது? நிச்சயமாய்ப் பெறமுடியும்

ஃ

**"நித்தனுய் நிர்மலனுய் நின்றுலகம் மூன்றினுக்கும் கர்த்தனுய்"** உள்ள பகவானை யடையப் பெற்ருேர், ஏனோ பிறவற்றை யொழித்தார் என்று கேட்கப்படின், அதற்கு விடை பின்வருவதே:—விளக்கை யடைந்த பூச்சிகள் மீண்டும் இருட்டை யடையக் காணேம் காணேம். சர்க்கரைப் பாகில் விழுந்த எறும்பும் சக்கரைதன்னிலேயே முடிந்தது கண்டீர்.

ஃ

**"மண்காட்டிப் பொன்காட்டி மாயவிருள்காட்டி"** மயக்கிடும் இவ் வுலகத்திலே சுகதேவர், நாரதர், சங்கராச்சாரியர், ஏசுநாதர் முதலிய மேன்மையாளர் பிறந்த பொழுதே துறந்தும், பக்தியிற் சிறந்தும், அசாத்தியமான குணனுபவங்களைப் பிரகாசிப்பித்தும் நின்றது யாங்ஙனம என்பது வினு?

---

மனதில் இருந்துவரக்கூடிய கசப்பானது பிறகு இருசாரத்தினரும் மனமொத்து வேலை செய்வதற்குப் பெரிதும் இடையூறை விளைவிக்கும். இக் கசப்பு மனைவிக்கும் கணவனுக்கும்,எஜமானனுக்கும் ஊழியனுக்கும் நேரினே?

அதற்கு விடை இது :—ஆகாசத்திலேயே ஸஞ்சரிக்கும் ஹேமா பக்ஷிகள் அவ்வாகாசத்திலேயே முட்டையிடுகின்றன. அம்முட்டைகள் பூமிக்கு வருமுன்னதாகவே குஞ்சுகள் வெளிப்பட, அவை கீழே பூமியினிடத்துச் செல்ல மனமற்று, இயற்கையறிவும் பூர்வ வாசனையும் தூண்ட மேல் நோக்கிப் பறந்து சென்றுவிடுமாம். பூமிக்கு அவை வாராதாம். அதுபோலவே மேற்கூறிய பெரியோரும் தத்தம் இளமைப் பருவத்திலும் இகலோக போக போக்யங்களை ஒரு பொருட்டாக மதித்து அவற்றில் இன்பம் துய்க்க எண்ணங் கொள்ளாமல், ஹேமா பக்ஷிகள்போல் இவ்வுலகத்துடன் சம்பந்தப் படாமலே ஞானோதயம் பெற்று பிரமாநுபூதிமான்களாய் வாழ்ந்தனர் போலும்.

ஃ

"மமல மிதுந்தொழுது கேணி" என்று பழித்த இத்தேகத்தைப் பெரியோர் தாமும் ஏனோ போற்றி வாழ்ந்தனர்? வெற்றுப் பெட்டியை எவரும் பத்திரப் படுத்தார். தங்க நாணயம், நவமணிக்குவியல் முதலிய பல பொருள் சேமிக்கப்பட்ட பெட்டியைக் காவாதார் யாரே? பகவான் மகிழ்ந்து கோயில் கொண்ட காரணமதனால், மனித வுடம்பை பகவத் க்ஷேத்திரமாகக் கொண்டு போற்றிப் பாதுகாத்தனர் புண்யர். சூர்யப் பிரகாஸமே நம் வாழ்நாள் என்று கொள்வோம். சூரியாஸ்தமனமே மரணவஸ்தையை யொக்கும்.

ஃ

"நிற்கின்ற வெல்லாம் நெடுமாலென்றோராதார் கற்கின்ற வெல்லாம் கடை" காண்பனவெல்லாம் கடவுளின் ஒளியெனக் கருதாதார்க்கு ஞான பக்குவம் வெகு தூரத்திலேயே கிடக்கும். சோதிமூலம் தம்முள்ளத்தே நின்றதைக் காணுதொழிந்தார் கண்ணிலாப் பேதைகள். எத்தனை யெத்தனையோ பேதை மாக்கள் சிவபரம்பொருளுக்காகவும், சைவம் தழைக்கவும் உயிரையே விடுவதாக வீரம் கூறுவர். எத்தனை யெத்தனையோ பாகவதர்கள் கண்ணன் தம் சொந்த சொத்தென்றே ஸ்தாபிப்பதற்கு எல்லாம் தத்தம் செய்யச் சித்தம் என்பார்கள். இங்ஙனம் கூறுமிவர்கள் ஹிருதய கமலத்திலே குடிகொண்டுள்ள ஹிருதய வாசனை—பரம்பொருளைக் காண முயலார்கள். கண்டவர்களுமல்ல. காண்பதற்குப் பக்குவமுமில்லை. பேச்சளவிலே பேசித் திருவாசகம் ஓதிக்கொண்டும், 'வண்ணமாடங்கள்' பாடிக்கொண்டும் வாழைப்பழத்தை யுறிப்பர். இதுவே இவர்கள் கண்ட முக்திப் பேறு.

ஃ

"அச்சாணி யில்லாத தேர் முச்சாணும் ஓடாது" அதுபோல், எந்த வித்தைக்கும் குரு ஒருவர் வேண்டும். குருவில்லா னொருவன் கண்ட ஆநந்தம் எத்துணை யோக்கியதை யுடையதோவெனில் :—

குருவிலான் பெற்றஞானம் குமரியைக் குமரிகூடி
மருவிய வின்பமொக்கும்; மண்ணிடை நம்போல்வந்த
குருவினாற் பெற்ற ஞானம் குமரியைக் குமரன்கூடி
மருவிய வின்பமொக்கு மென்பார்நன் மதியுளாரே.

---

ஓட்டுகள் தங்களுக்கே தரவேண்டுமென்று சட்டசபைக்குச் செல்பவர்களின் அறிக்கைகள் புறப்படுகின்றன. இந்த அறிக்கைகளைப் பார்த்து மனம் சலித்து மூலையிலும் ஒரு சிலர் எறிகிறார்கள்.

சற்குரு சந்நிதானத்திலே தன்னை யறியாதெழுந்த அடக்கம் உண்டாகும் சற்சீடனுக்கு. சற்குருவைக் கண்ட மாத்திரத்திலேயே சற்சீடனிடம் தன்னை யறியாது எழத்தக்க வைபவங்களாவன :—

ஆசானைக் காண்டோறும் அன்புருகும் கைகுவியும்
மாசாரு முடம்பு மயிர்க்குச் செரியும்
பேசாத வானந்த முள்ளூறும்—அக்கணமே
பாசங்கள் தாணந்து முத்தி தரும்.

ஆசானும் சீடனும் நாயகி நாயகன் சம்பந்தம் போன்றதாம். அன்பும் அறிவும் ஒன்றுவது போலவாம். வியவஹார உலகம் காணும்போது சீடன் பத்தினி யாயும், குரு பர்த்தாவாகவும் உலாவுவர். பத்நியைப் போற்றியே வாழ்வர் பர்த்தா. பர்த்தாவையே தெய்வமெனக் கொள்வாள் பத்நியும்.

ஃ

"இனம் இனத்தைச் சேரும்" என்பதுபோல் உண்மைச் சாதுக்கள் தம்மை யொத்த சாதுக்களையே நாடுவர். போலிச் சாதுக்கள் உண்மைச் சாதுக்களை யடுத்தபோதிலும் அந்த இடம் பிடிக்காது தூரச் சென்றுவிடுவர். உண்மைச் சாதுக்களும் அன்னோரை வெறுத்து ஒதுக்கித் தம்போல்வராயினோருடனேயே பழகி மகிழ்வர். உண்மைச் சாதுக்களை மஹா பதிவிரதைக்குச் சமமாகக்கொள்க. உத்தம ஸ்திரீயொருத்தி தனது பர்த்தாவைச் சேர்ந்து அடைந்த சுகங்களை வந்தவர் போனவர் யாவரிடத்தும் சொல்லாள் சொல்லாள். கற்பிழந்த காரிகையரையும் அருவருத்து ஒதுக்கிச் சீறுவாள். தன்னை நிகர்த்த தர்ம பத்தினி யொருத்தியைக் கண்டாளானல் கனிந்து கூறுவள் உள்ளத்திற் கொண்ட குதூகலத்தை யெல்லாம். அதுபோலவே, மெய்யான சாதுக்களும் தம்மை யொத்த மெய்ச் சாதுக்களுடன் மட்டுமே கூடுவார். நாமும் அத்தகைய உத்தம சாதுக்களின் தரிசனம்பெற்று உய்யக்கடவோம்.

உங்கள் குடும்பத்தின் பிற்கால
நிதியாய், உன்னத ஞானப் போக்கிஷமாய்
விளங்குவதற்கும், இனிவரும் உங்களின்
சந்ததியாருக்கு உபயோகமாய் இருப்பதற்கும்
"அமிர்த குணபோதினி"யை
ஐந்தாம் வருடத்திலும் பெற்று
ஒரு குடும்பஆஸ்திபோல் பத்திரப்படுத்துங்கள்.
சந்தா இந்தா என்று இன்றே தாருங்கள்.

அமிர்தகுணபோதினி
சுக்கிலஹூ பங்குனிமீ 1உ

# பிற்காலத்திய குடும்ப க்ஷேமம்.

## (ஆயுளை இன்ஷ்யூரன்ஸ் செய்தல்.)

ஆஸ்தி முதலில் அதிகம் செலவிடுவோர் எங்கோ ஆயிரத்திலொருவர். செய்யத்தகுஞ் செலவிற்குக் கூடச் செல்வம் கிடைக்கப் பெறுமீதார்தாம் எண்ணற்றவராவர். கைக்கெட்டும் சொற்பமும்—நடத்தும் குடித்தனத்திற்குப் போதாததாகி வறுமை காண்பவர்தம் தொகையே மிகுதி. வெளியிற் சென்று உழைத்து ஏதோ தேடி வீட்டிற்குக் கொண்டுவரும் ஆடவரின் காலத்திலேயே இந்த அவதியாயின், அன்னோர் தொழில் புரிய இயலாத வயோதிகத்திலும், அவர்கட்குப் பிறகுள்ள அரிவையரின் காலத்திலும் ஜீவனார்த்த மார்க்கம் எவ்வாறென்பது ஒரு சோதனையான வினா? அதன் நிமித்தமே முன்னெச்சரிக்கையுடன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி யொன்றில் சேர்ந்து, தன் விருத்தாப்பியத்திலோ, தன் காலத்திற்குப் பிறகோ உதவுமாறு சக்திக்குத் தகுந்தவண்ணம் ஒரு நிதி திரட்டிவைத்தல் பிந்திய நாட்களுக்கு எவ்வளவோ உபகாரந் தரும். அப்பொழுது அதன் மகிமை தெரியும். எதிலும் வருமுன் காத்தலே நன்று.

ஃ

ஆதரவற்றவர்களுக்கு லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் திக்கற்ற நிலைமையைத் தெளிவித்து ஒரு பெருந்தொகையை அவர்களின் கையிற் சேர்ப்பித்துத் தேற்றுவிக்கின்றது. இன்ஷ்யூரன்ஸ் என்பதே இன்னதென்று நம்மவர்களில் வெகுபேருக்குத் தெரியாது. ஏழையோ ஐச்வரிய ஸம்பன்னரோ—எவரும் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் சேருவது அத்தியாவசியகம். மற்ற எல்லா தேசத்தார்களைக் காட்டிலும் நம் ஹிந்துக்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் இன்னும்

---

☞ லைப் இன்ஷ்யூரென்ஸில் சேருவதற்கான ஸகல விவரங்களுக்கும், நூல் புஸ்தகத்திற்கும் திரிச்சினாப்பள்ளி தெப்பக்குளம் போஸ்ட் ஓரியண்டல் கவர்ன்மெண்ட் செக்யூரடி லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் கிளை ஆபீஸுக்கு எழுதிக்கொண்டால் அவர்கள் உடனே அறிவிப்பார்கள்.

அவசியம். ஏனெனில், ஹிந்து சட்டப்பிரகாரம் புத்திர சந்தான மில்லாத ஒரு விதவைக்கு ஜீவனாம்சத்தைத் தவிர குடும்ப ஆஸ்தி யில் வேறு உரிமை கிடையாது. ஒருவன் திடீரென்று சிறுவயதி லாவது, புத்திரபாக்கியமில்லாமலாவது இறக்க நேரிட்டால், அவன் மனைவி எவ்வளவு செல்வாக்கில் வளர்ந்தவளாயிருந்தாலும், எவ்வ ளவு உன்னத பதவியிலிருந்து தன் கீழ் பல ஆட்கள் வேலைசெய்யப் பெற்றவளா யிருந்தாலும், தன் உணவுக்கும், தன் மக்கள், (பெண் கள்) உணவுக்கும் தன் மாமனார்—மைத்துனன்—தகப்பன்—ஸகோ தரன் இவர்களில் எவர்களுடைய தயவையாவது எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. தன்னுடைய ஒரு சாண் வயிற்றுக்காகத் தன் உரிமை—தன் சுயேச்சை—தன் அதிகாரம்—தன் மானம் ஆதிய வற்றை இழந்து, வயிற்றையும் பல்லையும் காட்டி, அயலார் சொற்படி கேட்டு, அவர்களை யநுஸரித்து, அவர்களுக்கு இனிய வார்த்தைகள் கெஞ்சியபடி சொல்லி, அவர்கள் இட்ட வேலைகளைச் செய்து, வேலைக்காரியினும் வேலைக்காரியாகி, அடிமையிலும் அடிமையாய், நலம் குலைந்து, உடல் உருகி ஜீவனம் செய்யவேண்டிய கேவல ஸ்திதி பெண்மக்களுக்கு எதிர்பாராமலே திடீரென்று நேர்ந்துவிடுவது நாம் நித்தியானுபவத்தில் கண்டுவருவதே யொழிய கட்டுக்கதை யன்று.

ஃ

கொஞ்சநஞ்சம் உள்ள ஆஸ்திகளுக்கு மைத்துனனும், பங்கா ளிகளும், பிணத்தைச் சுற்றித்திரியும் கழுகுகளுக்கு ஒப்பவந்து சேர்வார்கள். இதனால் பலவித மனஸ்தாபங்களும், அடிதடிகளும், சச்சரவும், கொலைகளும், தற்கொலைகளுங்கூட ஏற்படுவதுண்டு. இறந்தவன் ஏதோ தன் சக்திக்கு எட்டியமட்டும் ஆயிரம் ரூபாய்க்கோ, இரண்டாயிரம் ரூபாய்க்கோ இன்ஷ்யூர் செய்திருப் பானேயாகில், மற்ற ஆஸ்திகள் எப்படி வந்தாலும், எப்படிப் போன லும், எப்படிப் பங்கிட்டாலும், எப்படிக் கொள்ளை கொண்டுபோன லும், இன்ஷ்யூர் செய்த தொகையைத் தன் குடும்ப ஸம்ரக்ஷணைக் காகச் செய்திருக்கும் பக்ஷத்தில் மற்ற பங்காளிகள் இதனைத் தொட முடியாது. இப்படித் தொடாதிருக்கும்படியாகத் தன்னுடைய (இன்ன) மனைவியின் உபயோகத்திற்காகவென்று பெயரைக் குறிப் பிட்டுத் தனக்குப்பிறகு அவளுக்குக் கொடுக்கவேண்டுமென்று விவர மாய்க் கண்டுவிடவேண்டும். அவ்விதம் ஆரம்பத்திலேயே கம்பெ னிக்குத் தெரிவித்திருப்பானாகில் கம்பெனியார் அந்த மனைவிக்கே கொடுத்துத் தீர்வார்கள். இவ்விதமே குமாரர்கள்பேருக்கும் அவர் களில் குறித்த ஒருவரின் பெயரைக்கண்டு தெரிவித்திருந்தால் அந்த ஒருவருக்கே தொகை கொடுக்கப்படும். இதனால் அறியவேண்டி

---

அவசரத்திற்கு நம்மிடம் இரவல் கேட்டு வாங்கிச்சென்ற சாமானைத் திரும்பப் பெறுவதற்கு அவர்களின் வீட்டுக்கு நாம் அலையவேண்டி வருகிறது.

யது யாதெனில், ஒரு லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் சேரும் பொழுதே அது இன்னருக்காகத்தான் ஏற்பாடு செய்வதாகவும், அது எவருக்கும் பாத்தியமில்லை யென்றும் தெரிவித்துவிட வேண்டு மென்பதாகும்.

ஃ

இவ்விதமாகத் தான் இறந்தபின் தன் குடும்ப ஆபத்து காலத்தில் மற்றவர்கள் கொள்ளையிட்டுக்கொள்ள முடியாத ஆஸ்தி நல்லதா; அல்லது தன்னுடையது தன்னுடையது என்று நினைத்துக்கொண்டிருக்க—தான் கண்மூடியபின் கதையில் குரங்கு அப்பம் பகிர்ந்தவண்ணமாகப் பங்கிட்டுப் போகக்கூடிய ஆஸ்தி சிலாக்கியமா? எப்படிப் பெண்மணி அணிந்திருக்கும் நகையை ஒருவன் பங்குக்குக் கொண்டுபோக முடியாதோ, அதேமாதிரி இன்ஷ்யூரன்ஸ் பத்திரத்தில் கண்ட தொகையையும் படுமோசக்காரப் பங்காளிகள் எவ்விதமும் அபகரிக்க முடியாது. நகையைக்கூட ஒரு திருடன் அபகரித்துக்கொண்டு போகக்கூடும். இன்ஷ்யூரன்ஸோ திருடன் கைக்கும், படுபாவி பங்காளியின் கைக்கும் எட்டாததாகும். கம்பெனியார் குறித்த பேர்வழியைத் தவிர்த்து மற்றெவருக்கும் கொடார். இவ்வாறாக, இன்ஷ்யூரன்ஸ் செய்தலானது எந்தத் தேசத்தானாலும், எந்த ஜாதியானாலும், என்ன அந்தஸ்துள்ளவனானாலும்—அவன் குடும்பம் அவன் இறந்த பிற்பாடு துன்பப்படாமலும், அயலாருடையவும்—பொதுஜனங்களுடையவும் ஒத்தாசை, தயை, காருண்யம், தர்மம் இவைகளை எதிர்பாராத வண்ணமும் தனியே செழிக்கச் செய்யும் ஒரு சிறந்த பலமான ஆயுதமாக இருக்கிறது.

ஃ

மேலும் ஸ்வல்ப வரும்படியுள்ள ஒருவனுக்குச் சிறுகச் சிறுகச் சேர்க்கும் ஒரு அப்பியாஸத்தை உண்டாக்கி, ஓர் பெரிய ஆஸ்தியை இன்ஷ்யூரன்ஸ் கொடுக்கிறது. இன்ஷ்யூரன்ஸ் செய்தலானது, பணக்காரனை, தான் உயிரோடிருக்கிற காலத்தில் பின்னுக்குக் கவலைப்படாமல் செலவுசெய்ய இடம்கொடுத்துப் பிறகு இறக்குங் காலத்தில் எவ்வளவு ஆஸ்தி வைக்க உத்தேசிக்கிறானோ அவ்வளவு ஆஸ்தியை—வைக்கவும் இடம் கொடுக்கிறது. மேலும், வியாபாரியொருவன் திடீரென்று நஷ்டமடைந்தாலும், கடன்காரர்கள் அவனுடைய ஆஸ்தியைத் தடைசெய்து கொண்டுபோய்ப் பங்கிடுவதுபோல் இந்த (மனைவி—குமாரர்களுக்காகச் செய்த) இன்ஷ்யூரன்ஸ் பத்திரத்தின் தொகையைத் தொடமுடியாது. இந்த இன்ஷ்யூரன்ஸ் தொகையை மனைவியின் ஆபரணத்துக்குச் சமானமாகச் சட்டம் கருதுகிறது.

ஃ

---

வாராத பணம் கோர்ட்டு மூலமாய் வந்ததென்று ஸந்தோஷிக்கும் பொழுது, அதை இன்னொருவர் கடன் வாங்கிச் சென்று ஏமாற்றிவிடுகிறார்!

நகை விஷயத்தில்கூட கடன்காரர்கள் இவன் மோச எண்ணத்துடன் திடீரென்று தன் மனைவிக்கு அனைத்தையும் நகைகளாகச் செய்து போட்டுவிட்டானென்று நியாயஸ்தலத்தில் ஆக்ஷேபிக்கக் கூடும். லைப் இன்ஷ்யூரன்ஸ் தொகையோ அத்தகையதன்று. நகையைப்போல் ஒரேநாளில் செய்யக்கூடியதன்று; நினைத்த வேளையில் பலன் பெறக்கூடியதுமன்று. இது ஒருவன் திடீரென்று இறக்கும் பக்ஷத்தில் மற்ற ஆஸ்திகளை நம்ப முடியாததினால், இவ்விதமான நம்பியிருக்கக்கூடிய ஓர் ஆஸ்தியை சிறுகச் சிறுகக் கூட்டி வெகு நாட்கழிந்து பெரிய ஆஸ்தியாகப் பெறக்கூடிய ஒரு பொறுப்புள்ள விஷயம். ஆகையால், ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் சேர்ப்பித்திருக்கும் தொகையை மோசமான துர்யோசனையுடன் செய்ததாகக் கடன்காரர்கள் எவ்விதமும் ஆக்ஷேபிக்க இயலா. பொது ஜனங்கள் இன்ஷ்யூரன்ஸ் செய்வதை ஆதரிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் கவர்ன்மெண்டார் இன்ஷ்யூரன்ஸுக்காகக் கட்டப்படும் தொகைகளுக்கு வருமானவரி போடுவதில்லை.

ஃ

இகபரம் இரண்டிலும் பாத்தியதையுள்ள மனைவியின் கதியே கணவனுக்குப்பின் பலவித பிடுங்குதல்களுடன் தத்தளிப்பானால், இன்னும் வெகு சிறிய ஆண்மக்களும் பெண்மக்களும் இருந்துவிட்டால் அவர்களின் கதி என்ன ஆவது? குழந்தைகளை வளர்க்கவும், அவர்களின் பாதுகாப்புக்கும், துணிமணி வைத்தியத்துக்கும் பணம் வேண்டுமே. படிப்புக்கும் கல்யாணத்துக்கும் பணம் தேவை. நிற்கதியாய் விட்டுவிட்டால் இவர்கள் பாவம் என்ன செய்வார்கள்? யார் ஆதரிப்பார்கள்? பந்துக்களின் சங்கதிதான் தெரியாதா? ஊர் நகைக்குமே. அவர்களைத் திண்டாடவிட்ட பழி இறந்தவனதன்றோ?

ஃ

ஒருவன் நல்ல தேகசௌக்கியமுள்ளவனும் திடகாத்திரமுள்ளவனும் இருக்கையில் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் சேருவது அவசியமில்லையென்றும், சற்று வயது ஆனபிறகு சேரலாமென்றும் சிலர் எண்ணங்கொள்ளலாம். இது அறியாமையேயாகும். எவ்வளவு வயது குறைகிறதோ அவ்வளவுக்கு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குத் தொடர்ந்து கட்டவேண்டிய தொகையும் குறைவுபடுகிறது. எவ்வளவுக்கு வயது அதிகப்படுகிறதோ அவ்வளவுக்குக் கட்டும் தொகையும் பெரிதாகிறது. ஆகவே, ஒருவன் தனது 18-வயது முதற்கொண்டே இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் சேர்ந்துகொள்வதுதான் பெரிய லாபமாக இருக்கும். போன வருஷங்களைத் திரும்பப்

---

அவனை எதிர்த்ததற்கு அவன் மவுனமாய்ச் சென்றுவிட்டானெனினும், அந்த மவுனம் வெறுமனே கிடக்கவில்லை. தனக்கு நீதி வழங்கும்படி ஸதா தெய்வத்தை வேண்டியபடியே இருக்கிறது. அது ஒருநாளும் வீணாகாது.

பெறுவது முடியாதாதலின், எவ்வளவு சீக்கிரம் சேருகிறார்களோ அவ்வளவுக்கும் நன்மை. மேலும், மானிட ஜீவியம் ஒரு நிலையுள்ள தல்ல. நேற்றிருந்தவர் இன்றில்லை. இன்றுள்ளவர் நாளையில்லை. நேற்றிரவு பேசிச்சென்றவர் இன்று காலையில் மார்படைப்பால் இறந்துவிட்டதாக ஆள் வந்து சொல்லுகிறான். அகாலமரணம் எத்தனை எத்தனையோ? மரணத்துக்குச் சிறிது பெரிது என்றில்லை.

ஃ

இந்தியாவில் மரணப்போக்கைக் கணக்கிட்டுப் பார்த்த சாஸ்திர நிபுணர்கள் அனுபோகத்தில் பின்வருமாறு கண்டிருக்கிறார்கள்:— நல்ல தேகசௌக்கியத்திலிருக்கும் 30-வயதுள்ள திடசாலிகள் 1000-பேர்களில் 99-பேர் 10-வருஷத்திற்குள் இறந்துவிடுகிறார்கள். 238-பேர் 20-வருஷத்திற்குள் இறந்துவிடுகிறார்கள். 452-பேர் 60-வது வயது காண்பதற்குமுன் காலமாகிவிடுகிறார்கள். அம்மாதிரியே 20-வயதுள்ள திடகாத்திரர்களான 1000-பேர்களில் 522-பேர் அதாவதுபாதிக்குமேலாக 60-வயதிற்குள் மரித்துவிடுகிறார்கள்.

20-வயதுள்ள 1000-பேர்களில் 1 வருஷத்திற்குள் 8-பேர் இறப்பது கூடும்.
30-வயதுள்ள 1000-பேர்களில் 1 வருஷத்திற்குள் 10-பேர் முடிவது கூடும்.
40-வயதுள்ள 1000-பேர்களில் 1 வருஷத்திற்குள் 13-பேர் மரிக்கலாம்.
50-வயதுள்ள 1000-பேர்களில் 1 வருஷத்திற்குள் 16-பேர் மறைந்துவிடலாம்.
60-வயதுள்ள 1000-பேர்களில் 1 வருஷத்திற்குள் 31-பேர் மரணமாகலாம்.

இவ்வாறே வயது ஆக ஆக மரணவிகிதமும் அதிகரிக்கிறது. தோட்டிமுதல் தொண்டமான் வரையிலும் நான் அடுத்த வருஷம்—அடுத்த மாதம்—அடுத்த வாரம் நிச்சயமாக இருப்பேன் என்று எவராவது சொல்லமுடியுமா? அவ்விதம் கூற இயலாத நிலையில் நம் வாணாள் உளது ஆதலின், வசதியான காலத்தில் இன்ஷ்யூரன்ஸ் செய்யலாமென்று நிமிஷங்களை, நாட்களை, வாரங்களை, மாதங்களை, வருஷங்களை வீணே போக்குதல் விவேகமாகமாட்டாது.

ஃ

மேலும், இன்ஷ்யூரன்ஸ் செய்வதில் அதன் பிரயோஜனம் தனக்குப் பிற்காலம்தான் என்று யோசிக்கவேண்டியதில்லை. ஒருவன் எந்த வயதில் வேண்டுமானாலும் தன் ஜீவியத்திலேயே அதன் பலனை அடையலாம். 20-வது வயதில் இன்ஸ்யூரன்ஸில் சேர்ந்தவன் 40, 45, 50, வயதில் அந்த இன்ஷ்யூரன்ஸ் தொகை முழுமையும் தானே கண்ணுக்கெதிராக நேரில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு நல்ல வாலிபமாக இருக்குங் காலத்திலேயே சேருவது அவசியம்.

---

**அமிர்த குணபோதினி**"யை என் குமார்த்தி வாசிக்கிறாள். என் மருமகள் அதைப் படித்ததும் தங்கக்கட்டிபோலானாள். என் குமாரன் குணசீலனானது "**அமிர்த குணபோதினி**"யால்தான். இந்தா ஐந்தாம் வருஷ சந்தா.

அப்படிச் சேருவதுதான் உத்தம மார்க்கம். முதிர்ந்த வயதுவரைக் கும் நாம் இருக்கமாட்டோமென்பது அநேகர் கொள்கை. சிலர் அல்பாயுசாக இறப்பது நிச்சயமேயானாலும், மற்றவர்கள் நெடுநாள் உயிரோடிருப்பதும் அவ்வளவு நிச்சயம். ஜீவனோடிருந்தால் நாம் நேரில் இன்ஷ்யூரன்ஸ் தொகையை அடைகிறோம். அதற்குள் கடவுளின் திருவடிநீழலைச் சேர்ந்தால் நம் மனைவி மக்கள் அத் தொகையைப் பெற்றுக்கொண்டு நம்மை வாழ்த்தி, அந்தப் பெரிய தொகையைத் தங்களின் ஜீவியத்துக்குத் துணையாக வைத்துக் கொள்கிறார்கள். எனவே, எவ்விதத்திலும் நலமே தென்படுகின்றது.

ஃ

இவ்வளவு அனுகூலங்கள் இன்ஷ்யூரன்ஸ் செய்வதிலிருக்கை யில் பின் ஏன் தங்களின் ஆயுளை இவ்வித கம்பெனிகளில் பதிவு செய்யாமல் இருக்கிறார்களோ? இந்த அசிரத்தையால் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தரித்திரத்தில் உழல நேரிடுகின்றன. தரித்தி ரம் என்பது எவ்வளவு தைரியசாலிக்கும் திடசாலிக்குங்கூட கொடுமை தரக்கூடியது. மற்றும் திக்கற்ற குழந்தையுடன் இருக் கும் ஒரு மெல்லியலுக்கோ தரித்திரம் கொடுமையினுங் கொடுமை. ஆகையால் நாளை நாளை என்பது மதியீனம். நாளைக்கு இதே மனதாக —இதே திடகாத்திரமாக இருப்போமென்பது என்ன நிச்சயம்? நாளாக ஆக வயதும் அதிகமாகி தேகவலுவும் குன்றி இன்ஷ்யூரன்ஸ் கட்டணங்களை உயர்ந்த விகிதமுள்ளதாக ஆக்கிவிடும். ஒருசமயம் தேகநிலை வைத்திய பரிசோதனைக்கே தகுதியில்லாமல் இன்ஷ்யூ ரன்ஸில் சேருவதற்கு யோக்கியதையற்றுப் போய்விடும். பிரதி வருஷத்திலும் இவ்விதம் தகுதியில்லாதவர்களின் விண்ணப்பங்களை ஏராளமாகத் தள்ளிவிடப்படுவதாகவும் தெரிகிறது. இவ்விதம் தள் ளப்பட்டோர் தாமதம் செய்யாமல் முன்னரே விண்ணப்பங்கள் கொடுத்திருந்தால் சேர்க்கப்பட்டிருப்பார்களன்றோ? ஆகவே, ஆலஸ் யம் சிறிதும் கூடாது. பிரமாண்டமான ஆஸ்தி சேர்க்காவிட்டா லும், மனைவிமக்களை அயலார் கையை எதிர்பார்த்துக் கேவலப்படா மல் மானத்துடன் பிழைக்கக்கூடிய ஏற்பாடாவது செய்யமுடியும்.

ஃ

ஆகவே, லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் ஒவ்வொருவரும் இந்த நிமிஷமுதலே சேரப் பிரயத்தனப்படவேண்டுமென்பதை நாம் வற்புறுத்திக் கூறுவோம். எவ்விதம் சேருவதென்பதற்கு அந்த விதிகள் அடங்கிய புஸ்தகத்தைப் பார்ப்பின் விவரமாகத் தெரிய வரும். எத்தனை ஆயிரம் ரூபாயைக் குறிப்பிட்டுச் சேருவதென்பது

---

என்னுடைய "அமிர்த குணபோதினி"யை என்றுமே நான் பெறுவேன் ஆதரிப்பேன். அது என் சொந்த சொத்து. என் மக்களுக்குநான் சேர்க்கும் நிதி. இன்றே ஐந்தாம் வருட சந்தாவை மணியாடர் செய்துவிடுகிறேன்.

ஒரு முக்கியமான கேள்வி. எவ்வளவு ஆயிரத்துக்கு வேண்டுமாஞ லும் சேரலாம். அந்தக் குறிப்பிட்ட தொகைக்குத் தக்கபடி ஆறு மாதம், மூன்று மாதங்கட்கு ஒருமுறை கட்டவேண்டிய விகிதம் இவ்வளவென்பது குறிப்பிடப்படும். அந்த விகிதத்தைத் தன் ஜீவ காலம்வரையிலும் விடாமல் தொடர்ந்து கட்டி வருவதற்கு முடியுமா?—அவ்வளவுக்குத் தனக்கு வருமானம் உண்டா?—இப்போதைய வருமானம் பிறகும் இதே விதமாய்த் தொடர்ந்து வந்துகொண்டிருக் குமா?—என்பதை ஆற அமர, நிதானமாய் யோசித்துப் பார்த்து ஆயி ரத்துக்கோ இரண்டாயிரத்துக்கோ பதிவு செய்துகொண்டு சேரலாம். ஐச்வரிய ஸம்பன்னர்களாய்த் தக்க வருமானமுள்ளவர்கள் நாலாயி ரம், ஐயாயிரத்துக்கும் கூடப் பதிவுசெய்துகொள்ளலாம். என்றைக் கும் தொடர்ந்து செலுத்தக்கூடிய சக்தியை முன்னதாகவே யோசித் துக்கொள்ளவேண்டும். ஏனெனில், இடையில் செலுத்த சக்தியற் றுப்போய் விட்டுவிட்டவர்களுமுண்டு. இது மரமேறிக் கைவிட்டது போலாம்; நடப்பவர் வழி மறந்ததுபோலாம். ஆதலின், தீர யோசித்து ஒரு குறித்த தொகைக்குப் பதிவுசெய்து லைப் இன்ஷ்யூ ரன்ஸில் சேர்ந்துகொண்டால் நமது ஜீவிய யாத்திரையில் நாம் ஒரு தைரியத்தோடும் உற்சாகத்தோடும் கவலையற்று இருப்பதுமாத்திர மன்றி நமது மனைவி மக்களுங்கூட, நமது காலத்திற்குப் பிறகும் செழிப்பாய் நல்ல நிலைமையில் வாழ்வார்கள். ஆதலின், இன்றே இன்ஷ்யூரன்ஸில் சேருங்கள். தன்னை இன்ஷ்யூரன்ஸ் செய்யாத ஒரு குடும்பஸ்தன் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றியவனாகான். இன்றே துணிக. துணியக்கடவாயாக. துணிந்தவர்க்கே சுகவாழ்வு.


## வீட்டுச் சமையல் ஆனபின்பு—

மத்தியான நேரங்களில் உங்கள் பெண்மணிகளை "அமிர்த குணபோதினி"யை வாசிக்கும்படி செய்யுங்கள். பெண் மணிகளுக்கு "அமிர்த குணபோதினி"யில் ருசி தோன்றி விட்டால், அவர்களுக்கு வேறு புத்திமதி ஏதும் நீங்கள் கற் பிக்கவேண்டியதில்லை. அவர்களை "அமிர்த குணபோதினி" மெஞ்ஞானக் களஞ்சியங்களாக்கிவிடும். பதிபாத சேவையே பரமபாக்கியமென்று அவர்களை நினைக்கச் செய்து திருத்தி விடும். உங்கள் வீட்டில் கலகம்—பிரிவு—கூச்சல்—கண் ணீர் போன்றவை எதுவுமே பிறகு இராது. யாவற்றையும் "அமிர்த குணபோதினி" குணப்படுத்தி அமிர்தகுணச் செல் விகளாக்கிவிடும். ஒரு முறை இதைத் தந்து பரீக்ஷியுங்கள்.

# நமது நான்காம் வருட பூர்த்தி.

## நமது சந்தாதாரர்களுக்கு விசேஷ அறிக்கை.

இந்தப் பங்குனி மாத ஸஞ்சிகையுடன் நமது "அமிர்த குணபோதினி"க்கு நான்கு வருடங்கள் ஸம்பூர்ணமாகின்றன. அடுத்த சித்திரை மாதத்திலிருந்தும் ஐந்தாம் ஆண்டு ஆரம்பமாகின்றது. சென்ற நான்கு வருடங்களாக "அமிர்த குண போதினி"யைத் தொடர்ந்து வாசித்துவரும் தமிழ்ச் செல்வர்கள் ஐந்தாம் வருடத்திலும் அன்புடன் வரவேற்று ஆநந்திக்குமாறு பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

"அமிர்த குண போதினி"யைத் தொடர்ச்சியாகப் பெற்று வாசிப்பதிலுள்ள அரும்பெரும் பயன்களைக் குறித்து நமது அன்பர்கள் தங்களின் அநுபவத்திலேயே நன்கு தெரிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு ருசியாயின், "அமிர்த குணபோதினி" எப்பத்திரிகையிலும் காணாத ஒரு தனி ருசிகாமுடையதென்பது நாம் சொல்லாமலே விளங்கும். ஆதலின், ஐந்தாம் வருட சந்தாவைச் செலுத்தி எப்போதும்போல் புதுவருடத்திலும் "அமிர்த குணபோதினி"யை ஆதரித்து வருமாறு வேண்டுகின்றோம்.

சென்ற ஸஞ்சிகையில் தெரிவித்ததுபோன்று புதி வருஷத்தில் "அமிர்த குணபோதினி" அதி யுன்னதமாயும் சிரேஷ்டமான வியாசங்களுடனும் சித்திரப் படங்களுடனும் விளங்கும். நமது நண்பர்கள் இதனினும் சிறந்த பத்திரிகை வேறில்லையென்று கொண்டாடும் வண்ணமாக அதி சிலாக்கியமான முறையில் நடத்திவரப்படும்.

நமது வேண்டுதலுக்கு இசைந்து நமது சந்தாதார்களில் அநேகர் இப்பொழுதே ஐந்தாம் வருட சந்தாவை நமக்கு அனுப்பிக்கொண் டிருக்கின்றனர். சிலர் இரண்டு மூன்று வருஷங்கட்குச் சேர்த்தும் அனுப்பியிருக்கிறார்கள். வெளி நாடுகளிலுள்ள சந்தா நேயர்களிட மிருந்தும் சந்தாத் தொகைகள் வந்து கொண்டிருக்கின்றன. மற்ற அன்பர்களும் இம்மாதம் 25-ம் தேதிக்குள் தங்களின் புது வருஷ சந்தாவை யனுப்பிவிடுதல் நன்றாகும்.

மணியாடர் செய்வதில் இருவகையான அநுகூலங்கள் உள்ளன. வி.பி.க்குச் செலுத்தவேண்டிய அணா ஐந்துக்குப் பதிலாக இரண்டணா மணியாடர் கமிஷன் செலவுடன் சுலபமாய் விடுகின்றது. அன்றியும், மணியாடரில் சந்தாவை யனுப்பிவிடுபவர்களுக்குப் புதிய ஐந்தாம் வருடத்தின் சித்திரை மாத ஸஞ்சிகையை முதல் தேதியிலேயே வழக்கம்போல் அவர்களுக்கு அனுப்பிவிடப் படுவதால், தாமதமின்றிப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சௌகரியமும் ஏற்படுகிறது. இதனை அன்பர்கள் கவனித்துத் தங்களின் சந்தாவை

---

"அமிர்த குணபோதினி"யைப் பெறுதல் ஒரு புதையல் கண்டெடுத்தது போலாம். 12-ஸஞ்சிகைகளையும் அட்டவணையுடன் சேர்த்துப் பைண்டு செய்து பார்க்கும்பொழுது தான் அதன் அருமை பெருமை தெரிகிறது.

மணியாடர் மூலமாகவே அனுப்பி வைத்தல் லாபமாகும். காலகாரண மின்றிச் சித்திரை மாத ஸஞ்சிகையும் அவர்களுக்குக் கிடைக்கும்.

சில சந்தாதார்களுக்கு வி.பி. யில் பெற்றுக்கொள்வதே சௌகரியமாய்த் தோற்றக்கூடும். மணியாடர் செய்ய அவர்களுக்கு அசந்தர்ப்பமாய் இருக்க லாம். அத்தகைய அன்பர்களுக் கெல் லாம் ஐந்தாம் வருடத்திய சித்திரை மாத முதல் ஸஞ்சிகையை வி. பி. யில் ரூ. 1-3-0க்கு அனுப்பி வைப்போம். அவர்கள் மணியார்டர் கமிஷன் இரண்டணு சேர்த்து ஆக ரூ. 1-5-0 க்கு வி.பி. யைப் பெற்றுக்கொள்ளு மாறு பிரார்த்திக்கின்றோம். தாங்கள் வெளியிற் செல்வதா யிருப்பினும், வீட்டில் ரூ. 1-5-0 கொடுத்துத் தபாற் சேவகர் வி. பி. கொணர்ந்த தும் செலுத்திப் பெற்றுக்கொள்ளு மாறு தெரிவித்துவிட்டுச் செல்லுதல் உத்தமமாகும்.

வி.பி.யில் புதுவருடப் பத்திரிகை யைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங் களுக்குச் சித்திரை மாத ஸஞ்சிகை குறித்த காலத்தில் கிடைக்கவில்லையே யென்று ஆயாஸப்படக்கூடாது. சித்திரை மாத ஸஞ்சிகை வி. பி. யில் வருகிறதென்றும், அதனுல்தான் வழக் கம்போல் முதல் தேதியிலேயே தங் கட்குக் கிடைக்கவில்லை யென்றும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

ஸமீபத்தில் சேர்ந்த சந்தாதாரர் களுக்கும் நான்காம் வருடத்திய ஸஞ் சிகைகளை முதலிலிருந்து தொடர்ச் சியாய் நாம் அனுப்பிக் கொடுத்திருக் கின்றோ மாதலின், அவர்களும் புது வருஷ சந்தாவை மணியாடர் மூல மாகவேனும், வி.பி. மூலமாகவேனும் செலுத்தி என்றைக்கும் சாஸ்வதமாய் "அமிர்த குணபோதினி''யை ஆதரிக் குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

☞ தபாலாபீஸில் பிரதிதினமும் ஒரு குறித்த அளவுக்கேதான் வி. பி. களைப் பெற்றுக்கொள்வார்க ளாதலின், சந்தாதார்களனைவருக்கும் ஏக காலத்தில் வி. பி. கள் அனுப்ப சாத் தியமில்லை. ஆயினும், சித்திரைமாதம் 20-ம் தேதிக்குள்ளாக அனைவருக்கும் வி.பி.களை அனுப்பிவிட முயலு வோம். அன்பர்கள் தங்கட்கு வி.பி. வந்தவுடன் பெற்றுக்கொண்டு ஆத ரித்து அமிர்தகுண ஸம்பன்னர்க ளாவார்களாக.

நான்கு வருடங்கள் இனிது நிறை வேறின. ஐந்தாம் வருடத்தை உ த்ஸாகமாய் நாம் எதிர்பார்ப்பதுபோல வே நமது அன்பிற்கினிய கையொப்ப நேயர்களும் ஆநந்தமாய் வரவேற்க எதிர்நோக்கி யிருக்கின்றனர். "அமிர்த குணபோதினி''யை ஆத ரித்துப் போற்றுவதும் உத்தம கைங் கரியம். அதனை அழகுபெற நடத்தி அன்பர்களின் மனத்தை ரஞ்சிப்பிக் கச் செய்வதும் எல்லாவற்றிலும் மேலான தர்மம். இந்த ஸத்கைங் கர்யத்தை என்றும் தொடர்ந்து நடத்தி வருவதற்கும், புதிய ஐந்தாம் வருடத்தைத் தொடங்குதற்கும் பக வானின் கருணையையும், நமது கை யொப்ப நேயர்களின் ஆசியையும் பிரார்த்தித்து எதிர்பார்க்கின்றோம்.

பத்திராசிரியர்.

---

சின்ன பத்திரிகை, சிறிய பத்திரிகை, நல்ல பத்திரிகை, ஞானப் பத்தி ரிகை, அனுபவப் பத்திரிகை, ஆராய்ச்சிப் பத்திரிகை, உலகவியல்புகளைத் தெரிவிக்கும் பத்திரிகை, விகடம் பேசும் பத்திரிகை, 64-பக்கப் பத்திரிகை, பழமொழிக் களஞ்சியப் பத்திரிகை——அமிர்த குணபோதினிப் பத்திரிகை. —ஐந்தாம் வருடந்தன்னிலும் அதை அவசியம் பெறுவேன்—பெறுவேன்.

# குழந்தைகள் பக்கம்

## மூன்று ராஜகுமாரர்கள்.

வஸந்த புரத்தின் அரசனுன கமலாகரனுக்கு மூன்று குமாரர்கள். மூத்த குமாரர்கள் இருவரும் வேட்டையாட வேண்டுமென்று விருப்பங் கொண்டு ஒருநாள் காட்டுக்குப் போனுர்கள். போனவர்கள் அங்கேயே விநோதமாய்த் திரிந்துகொண்டிருந்தார் கள். மறுபடி பட்டணத்திற்குத் திரும்பி வரவேயில்லை. அவர்கள் போனவழி தெரியாமற்போகவே, இளைய குமாரன் அவர்களைத் தேடிக்கொண்டு போனுன். அவன் எப்படியோ அவர்கள் இருக்கு மிடம் கண்டுபிடித்து அவ்விடத்துக்குச் சென்றுன்.

ஃ

இளையவன் தமயன்மார்களைப் போய்க் கண்டதும், அவர்களைத் தண்டனிட்டுப் பட்டணத்திற்குத் திரும்பிவரும்படி நயமாய்வேண்டி யழைத்தான். என்ன வேண்டியும் கேளாமல் மறுத்துவிட்டுத் தங் கள் மனம் போனபடியே வேறிடம் நோக்கிச் செல்லப் புறப்பட்ட னர். எங்கே போகிறுர்களோ பார்ப்போமென்று இளையவனும் அவர்களைப் பின்தொடர்ந்து போனுன்.

ஃ

வழியில் ஒரு எறும்புப் புற்றைக் கண்டு மூத்த குமாரர்கள் இருவரும், எறும்புகள் தம்மைக் கண்டு பயந்து நாலா மூலையிலும் முட்டைகொண்டு ஓடும் விதத்தைக் கண்டு களிப்படையும்படி அந்தப் புற்றை இடிக்க முயன்றுர்கள். அது தெரிந்து சிறுவன் ஐயோ பாவம்! இந்தப் பூச்சிகளை வருத்தி நமக்காவ தென்ன? நமது வழியே நாம் போவோம் என்று சொல்லி அவர்களைத் தடுத்தான். அதை அப்படியே அங்கீகரித்து அவர்கள் அப்புறம் போனுர்கள்.

ஃ

---

நினைவுகள் நிமிஷத்தில் தோன்றுகின்றன; நிமிஷத்தில் மறைகின்றன; பின் மறுகணத்தில் உதயமாகின்றன; மறுபடியும் ஞாபகத்தினின்றும் ஓடி விடுகின்றன. என்னே தவிப்பு!

அங்கிருந்து சிறிது தூரம் போகையில் வழியிலே ஒரு ஏரியில் அநேகம் வாத்துகள் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கக்கண்டு, மூத்தவர்களிருவரும் அவைகளுள் இரண்டைப் பிடித்துக்கொன்று துடி துடிப்பதை வேடிக்கை பார்க்கக் கருதினார்கள். அது தெரிந்து சிறுவன், இவைகளை நாம் பிடித்துக் கொல்ல வேண்டாம்; தண்ணீரில் விநோதமாய் நீந்தி விளையாடுகின்றவைகளை நாம் பிடித்து வதைப்பானேன் என்று சொல்லி மறுத்தான். அதையும் அவர்கள் அப்படியே விட்டு விட்டு அங்கிருந்து அப்புறம் போனார்கள்.

ஃ

போகையில் வழியில் பெரிய தேன்கூடொன்றைக் கண்டு மூத்தவர்கள் ஈக்களையெல்லாம் பிடித்து அடித்துத் தேனைக் குடிக்கும்படி அம்மரத்தின் கீழே உட்கார்ந்தது கண்டு, இளையவன், ஐயோ! இந்த எளிய ஈக்கள் இவ்வளவு தேன் சேர்ப்பதற்கு எத்தனை நாள் வருந்தினவோ! இது நமக்கு வேண்டாம். ஒருவர் தேடிய பொருளை ஒருவர் அபகரிப்பது நியாயமன்று என அவர்களுக்கு நல்ல வார்த்தையாய்ச் சொல்லி அந்தத் தேனீக்களையும் தப்புவித்தான்.

ஃ

அங்கிருந்து மூவரும் அப்புறம் போகையில் பொழுதுபோய் அருகிலிருந்த ஒரு பெரிய மாளிகையைப் போய்ச் சேர்ந்தார்கள். அதில் எங்கே பாத்தாலும் கற்குதிரைகளும் கல்யானைகளுமாய் அநேகங் கற்கள் காணப்பட்டனவே யொழிய மனித னொருவனும் தென்படவில்லை. முழுதும் சுற்றிப் பார்த்துக் கடைசியில் ஒரு மண்டபத்திற்குச் சென்றார்கள். அங்கு ஒரு மனிதனைக் கண்டார்கள். அவன் எழுந்து வந்து அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு போய், அவர்களுக்குப் பலவிதமாய் உபசாரங்கள் செய்து விருந்தளித்துச் சிறந்த ஒரு படுக்கையில் படுக்கச் செய்தான்.

ஃ

மறுநாள் காலையில் எழுந்து அவர்கள், இவ்விடமெங்கும் கற்கள் தவிர மற்றொன்றும் காணப்படவில்லையே, இதன் செய்தி என்னவென்று கேட்க, அந்த மனிதன் அவர்களை அழைத்துக்கொண்டு போய் அண்டையில் ஒரு சுற்சுவரில் எழுதியிருந்ததைக் காட்டினான். அதில் மூன்று செய்திகள் எழுதியிருந்தன. முதலாவது:— அடுத்த காட்டில் புற்றரையிலே ஒரு இராஜகுமார்த்தியின் முத்துக்கள் ஆயிரம் விழுந்துகிடக்கின்றன. அவற்றைக் கண்டெடுத்துக் கொடுப்பவனையே அந்த ராஜகுமார்த்தி கல்யாணம் செய்துகொள்ளத்

---

எப்படியோ காலைப்பொழுதுக்கு ஒரு வேலை ஏற்படுகிறது. பயனுள்ள வேலையாயின் சந்தோஷமே. சாவியைப் போக்கடித்து அதைத் தேடும் வேலையா யிருந்தாலோ? அல்லது வீட்டில் ஒரு கலகமானாலோ?

தீர்மானித்திருக்கிறாள். அவற்றைத் தேடப்போகிறவன பொழுது போவதற்கு முன்னமே ஆயிரம் முத்துக்களையும் பொறுக்கிக்கொண்டு வரவேண்டும். ஒன்று குறைந்தாலும் அதைத் தேடிப்போனவன் உடனே கல்லாய் மாறிப்போவான் என்றிருந்தது. அதைப் பார்த்து மூத்த குமாரன் நான் இக்காரியத்தை முடித்துக்கொண்டு வருகிறே னென்று சொல்லிப்போய்ப் பொழுது போவதற்குள் நூறே நூறு முத்துகளைப் பொறுக்கிப் பொழுது போனவுடன் கல்லாய்ப் போய் விட்டான். மூத்தவன் திரும்பி வராமற்போகவே, மறுநாள் இரண் டாங்குமாரன் நான் போய் இதைச் சாதித்துக்கொண்டு வருகிறே னென்று சென்றான். அவனும் இருநூறு முத்துக்களுக்குமேல் பொறுக்கமாட்டாமல் தமையனைப்போலவே கல்லானான்.

°°

இப்போது கடைசிக்குமாரனே போகவேண்டியதாயிற்று. அவன் அந்தப் புற்றரையில் போய்ப் பார்த்து இந்த ஆயிரம் முத் துக்களையும் எப்படிப் பொறுக்கி எடுக்கிறதென்று திகிலடைந்து கடவுளை உருக்கமாய்ப் பிரார்த்தித்தான். அவனுடைய தொனி யைக் கேட்டு, முன்பு இவனால் பிழைப்பூட்டப்பட்ட எறும்புகள் அநேகம் வந்து சில நிமிஷங்களில் ஆயிரம் முத்துக்களையும் பொறுக் கிக் கும்பலாய்ச் சேர்த்தன.

°°

அந்தக் கற்சுவரில் எழுதியிருந்த இரண்டாவது செய்தியா வது :—அந்த இராஜகன்னிகை படுத்திருக்கும் அறையின் திறவு கோலை, இவர்கள் வரும்போது வழியில் கண்ட ஏரியினின்றும் எடுத் துக்கொணடு வரவேண்டுமென்றிருந்தது. அதுகண்டு அந்த ராஜ குமாரன் அந்தத் தடாகத்திற்குச் சென்றான். அங்கே போய் இவன் அந்தத் திறவுகோலை எடுக்கவேண்டிய வழி தெரியாமல் தவித்ததைக் கண்டு, முன்பு இவனால் உயிர் மீட்கப்பெற்ற வாத்துகள் உடனே தண்ணீரில் மூழ்கி அந்தத் திறவுகோலைத் தேடிக்கொண்டு வந்து கொடுத்தன.

°°

அந்தச் சுவரில் எழுதியிருந்த மூன்றாவது செய்தியை நிறை வேற்றுவது மிகவும் வருத்தமானது. அழகிலும் சாயலிலும் உரு வத்திலும் நிறத்திலும் மிகவும் ஒத்தவர்களான மூன்று ராஜகுமார்த் திகளுள்ளும் மிகவும் ரூபவதியும் வித்தியாவந்தையுமான கடைசிப் பெண்ணைக் கண்டறிய வேண்டுமென்றிருந்தது. இந்த ராஜகுமாரன் திறவுகோலைக் கொண்டுபோய் ராஜகுமார்த்திக ளிருக்கும் அறை

---

இக்காலம் எப்படி யிருக்கிறதென்றால், இறந்தவனைக் கொண்டாடுவ தும், இருப்பவனைத் தூஷிப்பதுமா யிருக்கிறது.

யைத் திறந்து பார்த்தபோது அம்மூவரும் தூங்கிக்கொண்டிருக்கும் வண்ணமாய்க் காணப்பட்டார்கள். அவர்களுள் ஒருவிதமான பேதமும் தென்படவில்லை. அவர்கள் படுப்பதற்கு முன், மூத்தவள் ஒருகட்டி கற்கண்டும், நடுப்பெண் கொஞ்சம் பாலும், கடைப் பெண் கொஞ்சம் தேனும் புசித்துவிட்டுப் படுத்தார்களென்று மாத்திரம் எழுதியிருந்தது. அந்தப் பேதத்தை யார்தான் கண்டுபிடிக்கக் கூடும்? அதைக் கண்டறியமாட்டாமல் அவன் தடுமாறுகையில், முன்பு அவனால் காப்பாற்றப்பட்ட தேனீக்களுள் தலைமையான ஈ ஒன்று வந்து முதல் இரண்டு பெண்களுடைய வாயையும் மோந்து பார்த்து, கடைசியில் தேனுண்ட கடைப்பெண்ணின் வாயில் வந்து உட்கார்ந்தது. அதனால் கடைக்குமார்த்தி அவள்தானென்று ராஜகுமாரன் நன்றாய் அறிந்துகொண்டு அவளைத் தொட்டான். உடனே அவர்களைப் பிடித்திருந்த மாயை நீங்கிப் போயிற்று. அம்மூவரும் நித்திரைவிட்டு நீங்கினார்கள். அவ்விடத்தில் கல்லாய் மாறியிருந்தவர்களெல்லோரும் உடனே தூங்கி எழுந்தவர்போல் இயற்கை வடிவத்தோடும் எழுந்தார்கள்.

ஃ

இவ்வதிசயத்தைக்கண்டு அந்த சிறிய இராஜகுமாரன் அதன் விவரமென்னவென்று விசாரித்து, அவையெல்லாம் ஒரு மாயாவியின் செய்கையென்று தெரிந்துகொண்டு, தான் ஜெயம்பெற்றதனால் மிக்க வியப்படைந்தான். பின் தன் நகரம் போய்ச் சேர்ந்து அந்தக் கடைசிப் பெண்ணை விவாகம் செய்துகொண்டு, தந்தையின் காலத்திற்குப் பிறகு தானே அரசனாய் அரசாட்சி செய்துவந்தான். மூத்தகுமாரர் இருவரும் பூர்வ ஸ்திதிக்குக் குறைவில்லாமல் மற்ற இரண்டு ராஜகன்னிகைகளையும் முறையே கல்யாணம் செய்துகொண்டு அவ்வளவோடு திருப்தி யடைந்தார்கள். சில குடும்பங்களில் கடைசி குமாரன் புத்திசாலியாய் விளங்க, அவனுக்கு மூத்தவர்கள் 'குறிப்பறிய மாட்டாதவன் மரம்' என்றபடி இருப்பதுமுண்டு. மனிதர்களுக்கு இல்லாத சக்தி மற்ற பிராணிகளிடம் இருக்கக் காண்கிறோம்.

> நீ அதிக ஜெயத்திற்கோ, அதிக லாபத்திற்கோ ஆசைப்படாதே. சொற்ப ஜெயமும் லாபமும்எதிர் பார்த்து அதில் திருப்திபெறு. பிறகு மேன்மேலும் முயல்க. அது உன்னைக்குதூகல ஞக்கும்.

---

சிறிது படித்துவிட்டு நூலாசிரியர்களாகிவிடலாமென்று நினைப்பது காசிமா நகரைப் படத்தில் பார்த்துவிட்டுப் பிறருக்கு விவரிப்பதுபோலாம்.




1. ஏழைக் குழந்தை :—உத்ஸவத்திற்கு வந்த பணக்கார விருந்தாளிகள் தங்கள் குழந்தைகளுக்கு விலையுயர்ந்த விளையாட்டுச் சாமான்கள், தின்பண்டங்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். நமது ஏழைக் குழந்தை அதற்கு விருப்புற்றுக் கத்துகிறது. நாம் காசுக்கு எங்கே போவது? சுடச்சுட அடிதான் பலகாரம்.

2. அநுதாபக் கடிதங்கள் :—வீட்டில் ஒருவர் இறந்துபோனால் பலர் அநுதபித்துக் கடிதம்எழுதுகின்றனர். அவற்றில் சில உண்மையானவை. சில மரியாதைக்கு வரையப்பட்டவை. நாம் யாரிடத்து அபரிமிதமான பிரியம் வைத்திருக்கிறோமோ அவர்கள் கடிதம் அதிக ஆறுதலைக் கொடுக்கிறது. அதிலும் நமது காதலியின் கைப்பட எழுதிய கடிதமாயிருப்பினோ—?

3. தலை கிறுக்கு :—காலணா சம்பாதிக்க உனக்கு யோக்யதை உண்டா? நான் தலை எடுத்து இவ்வளவு சொத்தும் ஸம்பாதித்தேன். இப்பொழுதும் பத்து ஏக்கர் வாங்க உத்தேசம். ஒரே விஸ்தீரணமாகக் கிடைக்கவில்லை என்கிறார் அவர். அது அவரது கைராசி. காலணாவுக்குத் திண்டாடுவது இவன் கைராசி.

4. அதது பெரிது :—"வயிற்றுவலி வரக்கூடாது" என்கிறான் ஒருவன். "அது பாதகமில்லை; பல்வலி மகா கொடிது" என்கிறான் மற்றவன். "எனக்குக் காதுவலி வந்து பட்ட கஷ்டம் ஈச்வரா என்று பெருமூச்சு விட்டேன்" என்கிறான் ஒருவன். எதுவும் வந்துவிடும்போது சிரமமாகத்தான் இருக்கிறது. ஒன்றில் ஒன்று குறைந்ததாகக் காணோம்.

5 முன்னுக்கு வர முடியுமா? :—படிப்போ ரொம்ப குறைவு. உலக அனுபவமோ பூஜ்யம். பொறுமைக் குணமோ துரும்பளவும் இல்லை. அவன்தான் நன்றாகச் சம்பாதிக்கிறான். நல்ல குணமுள்ளவனோ எங்கும் பழிக்கப்பட்டு ஏங்குகிறான்.

6. பெண்கள் சலிப்பு! :—எதிர் வீட்டு லக்ஷ்மியின் புருஷன் தன் மனைவியின்மீது வைத்துள்ள பிரிமும் செய்துபோட்டுள்ள நகைகளு நமக்குத் தெரியும். அதிலும் மேலான நகைகளையும் பலவித சௌகரியங்களையும் நாம் செய்திருந்தும், "லக்ஷ்மியைப்போல் நான் பாக்கியம் செய்திருக்கிறேனா" என்று சொல்லிக் காட்டுகின்றனர். என்ன செலவிட்டுத் திருப்தி பண்ணினாலும் அதிருப்திதானா பெண்களின் குணம்?

7. அன்ன விசாரம் :—இறந்தவர்களை நினைத்துக்கொண்டு கண்ணீர்விட்டுக் கதறுவது ஒரு பக்கம். சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தாகிவிட்டதா? அந்த விஷயத்தை முதலில் கவனியுங்கள்; எல்லோரும் இருக்கட்டும்—என்பது மற்றொரு பக்கம்.

---

எந்தத் தப்பிதமும் ஒருவன்மீது சொல்வதற்கில்லாவிட்டால், சிறு தப்பிதமொன்றைத் தாங்களே யுண்டுபண்ணி ஆரவாரிக்க வருகிறார்கள்.

8. **மானங்கெட்ட செய்கை:**— வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லை. கௌரதையான பேச்சுகள் குறையவும் இல்லை. கேட்பினே இன்னும் பணம் வரவில்லை என்பது. புகையிலைக்கும் வாசனைக்கும் நாடகம் சினிமாவுக்கும் காசு எங்கிருந்து கிடைக்கிறது?

9. **முன்பு, பின்பு:**—கடன் வாங்கும்போது "நான் ஒருவரிடமும்கடன் வாங்குவது கிடையாது; இப்பொழுது சந்தர்ப்பம் அப்படி நேர்ந்துவிட்டது என்பது. பணம் பெற்றபின் தவணை கூறுவது. தொந்திரவு செய்திடிலோ "உங்கள் காசைத் தலையைச் சுத்தி நாளை எறிந்துவிடுகிறேன்" என்பது.

10. **திருட்டு நரிகள்:**—நாம் ஒரு சாமானைக் காணுது தேடி அலைந்து கொண்டிருக்கும் சமயம் அதை எடுத்து ஒளித்தவர்கள் நம்முடனே குலாவி உடனே "எங்கே போய்விடும்; நன்ருகத் தேடிப்பார்" என்று பதில் கூறிவிட்டுத் தாங்களும் தேடுவது போல் எல்லாவற்றையும் புரட்டித் தள்ளி "இதோ இருக்கிறதே" என்று வெகு சொந்தத்தோடும் எடுத்துக் கொடுக்கிருர்கள். எவ்வளவு தந்திரம்!

11. **புண்ணில் குத்தல்:**—அவர்கள் அந்தக் காரியம் செய்யாதே என்று முன்பு சொன்னது உண்மையே. ஏதோ நமது ஆசையினுல் நாம் அவற்றில் பிரவேசித்து நஷ்டமடைந்தோம். அதற்காக மிகவும் வருந்தி நொந்துபோயிருக்குங்கால் அந்த விஷயத்தைக் குத்திக் காட்டுவதில் வரும் புகழ் தான்என்னவோ?

12. **பழய கம்பீரம்:**—என்னைக் காட்டிலும் இவர்கள் போக்கிரிகளா? நானே அடங்கிப் போய்விட்டேனே; என்னைப்பற்றி அவனைக் கேள். இவனைக் கேள். நான் சொல்லிக்கொள்ளக்கூடாது. ஒரே அறையில் நாலு பல்லை உடைத்தும் இருக்கிறேன். இப்பொழுது கிழவனுகிவிட்டேன். சரியானபடி இருந்தால் இந்தப் பயல் எனக்கு எம்மாத்திரம் என்கிருர்கள்.

13. **விஷமக்காரர்:**—நாம் வீட்டிலில்லாத சமயம் பார்த்து ராமன் வருவது. எங்கே? என்பது. வீட்டிலுள்ளவர்கள் "சங்கீதக் கச்சேரி"க்குப் போயிருப்பதாகச் சொன்னல் 'என்ன பாட்டு வேண்டியிருக்கிறது' என்று சொல்லிப் போகிறது. வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து வெளிப் பகட்டுக்கு இரைந்து வாசிக்கிறது. நமது வீட்டார் "ராமனைப் பாரு; ஒரு இடத்திற்காவது உன்னைப்போல் போகிருனு? சதா அவனுக்கு வாசிப்பு தான்" என்று சொல்லிக் காட்டுவது. இதைக்கேட்டு ராமன் சந்தோஷப்படுவது. கடைசியில் பரீக்ஷையில் தவறுவதும் அந்த ராமனே. ஏன்?

பண்டிட் K. விஜயராகவ ஐயங்கார்.

---

ஐந்து வருஷமல்ல, ஐம்பதுவருஷங்கள்கூட நான் "அமிர்த குணபோதினி"யைத் தொடர்ந்து வாங்குவேன். ஐம்பதூ "அமிர்த குணபோதினி"யின் வால்யங்களைக் காண எனக்கு ஆசை. எனது ஆசை என் சந்ததியாரின் காலத்தில் அவசியம் நிறைவேறிவிடும். வி.பி. ஏதுக்கு? மூன்று அணு அதில் வீண் நஷ்டம்தான். மணியாடராகவே இன்று சந்தாவை அனுப்புகிறேன்.

இரண்டு ரூபாய்க்கு ஒரு அச்சுக்கோர்ப்போரும், ஒரு ரீம் காகிதம் ஒரு ரூபாய்க்கும் கிடைத்த பழைய நாளில் ஒரு ரூபாய் சந்தாவுள்ள பத்திரிகைக்குப் பக்கங்கள் 24-ஆகவே இருந்தன. அதுவும் கட்டவில்லை. இப்பொழுதோ 32-48-56-64-க்கு உயர்ந்துள்ளன. எப்படி வரவு செலவு கட்டுகிறதோ!

# பழய நாள் நினைவு.

(கேசவ சந்திர சேனரவர்களின் வாக்கு)

## தந்தையின் திதி நாளில் துதி.

ஓ எம் அன்புள்ள பிதாவே! அடியேனை அன்போடு பெற்றெடுத்துத் தாலாட்டிச் சீராட்டி உச்சி முகந்து, நாளொரு வண்ணமாகவும் பொழுதொரு மேனியாகவும் வளர்த்து, கல்வி யறிவை யூட்டி, இனிமையான இல்லறத்தைத் தழுவச் செய்தும், என்னை உலகத்தார் ஓர் மனுஷனாக மதிக்கச் செய்தும் வாழ்விக்க வைத்த பேருபகாரத்தையும், பெருங் கருணையையும் கருதி எனது ஹிருதய பூர்வகமான நன்றியறிந்த ஸ்தோத்திரத்துடன் இன்று எனது சிரத்தையைக் காட்ட வரமளிக்க வேண்டுகின்றனன். தயாள குணமே உருவாக வந்த எனது தந்தையே! தாங்கள் எனக்காகப்பட்ட கஷ்டத்தை என்னென்று எடுத்துக் காட்டக் கூடும்?

ஃ

அடியேனது சுகத்திலும் துக்கத்திலும் தாங்கள் எனக்காக எடுத்துக் கொண்ட சிரமத்திற்கு எத்தனையோ கோடி வருஷங்கள் வரையில் கண்ணீருடனே ஸ்தோத்திரங்கள் செய்த போதினும் தீராதே. எனக்காகத் தங்களுடைய சொந்த சுகங்களை விட்டொழித்தும், உலகத்தாருடைய தூஷணைகளுக்கெல்லாம் உட்பட்டும், மேலும் நான் அறியாமையினாலும் பாலிய இயற்கையினாலும், சோம்பலினாலும், முரட்டுத்தனத்தினாலும், தங்களுக்கு அடிக்கடி பலவித வருத்தங்களை யுண்டாக்கியும் அவைகளை யெல்லாம் பொருட் செய்யாமல், பெற்ற பாசத்தினால் என்னை மார்போடணைத்து முத்தமிட்டுச் சீராட்டிப் பாராட்டி வந்த பெரிய நன்றிக்கு யான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகின்றேன்?

ஃ

யான் வயதிலும் அநுபவத்திலும் இவ்வளவு முதிர்ந்தவனாய்க் காணப்படினும் தங்களுடைய ஸ்வயரூபத்தின் சாயையும், குணாதிசயங்களின் பெருமையையும், எனக்காகப்பட்ட தங்கள் கஷ்ட நிஷ்டூரங்களின் கொடுமையையும் இன்று நினைத்தபோதிலும் கண்ணீர் ஆறாகப்பெருகி அழச் செய்கின்றது. தங்களைப்போல தந்தையை இனி எந்தக் காலத்தில் காணப்போகின்றேன்? இனி எந்த லோகத்தில் கொஞ்சிக் குலாவித் தங்கள் கண்குளிர எதிர்வந்து நிற்பேன்? இனி எந்தக் காலத்தில் என்னை அன்போடு நோக்கி "அடா கண்மணியே"

---

எவன் உண்மையாய் உழைக்கிறானோ அவனுக்கு நல்ல பேர் இல்லை. எவன் சோம்பேரியோ கோட் சொல்லியோ அவனுக்கே வெகு நல்ல பேர்!

என்று அமுதவாயால் அழைத்து முத்தமிடப் போகிறீர்கள் ?

ஃ

இனி எந்தக் காலத்தில் எனது இகலோக பரலோக சுகத்தைக் கருதி புத்திமதிகளை நயபயத்தால் சொல்லப் போகிறீர்கள்? அது எப்போதோவென்று ஏங்கி நிற்கின்றேன். என் பாலிய இயற்கையினால் தாங்கள் சொன்ன திருமொழிகளின்படி நான் நடவாத தப்பிதத்தைக் கருதியோ, மற்றும் இந்த உலகப் பிரயாணத்தில் வெறுப்புற்றோ மற்றெந்த ஏதுவினாலோ, சம்சாரத் தொல்லையாகிய குடும்பப் பளுவை என் மீது சுமத்திவிட்டுத் தாங்கள் விடுதலை பெற்றுக்கொண்டீர்கள். இப்பொழுது அந்த சுமையின் பாரத்தை யுணருகின்றேன்.

ஃ

இந்த உலக வியாபாரம் மஹா கஷ்டமானது. சிட்டுக்குருவியின் தலைமேல் பனங்காயை வைப்பதைப் போல என்மீது சுமத்திய ஸம்சாரப் பளுவு கொஞ்சநஞ்சமல்ல. யானை உலாவுங் காட்டில் பூனை உலாவத் துணிவதைப்போல் அடியேன் தமது குடும்ப காரியங்களைத் தங்களைப் போல் சீராக நடத்தி மேன்மையுறச் சக்தியற்றவனாகித் தவிக்கிறேன். ஆயினும், இனி எத்தனை காலம்தான் எனக்காகத் தாங்கள் பாடுபட்டு வருந்த முடியும்? இந்த எனது தேகமும், இதைச் சேர்ந்த இரத்தம், நரம்பு, எலும்பு முதலானதுகளும் தங்களுடையவையேயாம். தங்களுடைய இரத்த அணுரூபமே நானாகவிருக்கிறேன். தங்களுடைய பெயரையும் தங்கள்பாட்டன் முப்பாட்டன் முதலான பாரம்பரிய சந்ததியின் பெயரையும் நான் வகித்துக்கொண்டு தங்களுடைய குடும்பத்தை நான் நடத்தி வருகின்றேன். அப்படி நடத்தி வருவதில் எனது அஜாக்கிரதையினாலாகிலும், சோம்பலினாலாகிலும், தங்களுடைய குடும்பத்தை அதன் பூர்வ கௌரவத்திற்கேற்ப நடத்தி வரப் பிசகிப்போவதும் அடிக்கடி சம்பவிக்கிறது. அப்படிப் பிசகிப் போவதில் தங்[illegible] பெயருக்கும், தங்கள் முன்னோர்களுடைய மகிமைக்கான பெயருக்கும் குறைவுகள் நேரிடக்கூடும். நான் பிறந்து தங்கள் பெயருக்கும் தங்கள் சந்ததியார் பெயருக்கும் குறைவுகள் வந்தால் என்ன செய்கிறதென்று பயத்தினால் பிரமித்து நிற்கின்ற எனக்கு திடசித்தத்தையும் புத்திமதிகளையும் போதித்தருள்வீராக. உங்களின் ஆசீர்வாதம் இகத்துக்கும் பரத்துக்கும் இன்றியமையாததாதலால் அருள் மழை பொழிந்து அடியேனை ஆசீர்வதிப்பீர்களாக.

நமது கஷ்டத்தைத் தமது கஷ்டமாக நினைத்து உதவி புரிவோர் அரிதாயினர். ஒரு காலத்தில் எவ்வளவோ நமக்குச் செய்த நண்பர்கள் இப்பொழுது பராமுகமாய் விட்டனர். அன்பு வைத்த இடம் பகையானது. நம்பிய கிளை முறிந்தது. எதிர்பார்த்த இடம் ஏமாறிப்போனது. ஆசைப்பட்டது கிட்டவில்லை. அந்த ஒருவனால் தான் அக்குடும்பமானாலும் அவனைப் படுத்துகிறபாடு தெய்வமே அறியும்.

# தைரியக் குறைவு



தைரியக் குறைவினால் ஒருவன் எவ்வளவோ கேவலப்பட்டு விடுகிறான். இருக்கும் சிறிது தைரியத்தைக்கூட அவன் இழந்துவிடுகிறான். தைரியக்குறைவு பல காரணங்களினால் உண்டாகிறதென்றாலும், முக்கியமாய் அவற்றையெல்லாம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) சிலர் இயற்கையில் திடனற்றிருக்கிறார்கள். இத்தன்மையானவர்கள் தங்கள் ஆற்றலைப்பற்றித் தாங்களே அறியாதவர்களாய்ச் சந்தேகப்பட்டுக்கொண்டு, தாங்கள் ஆரம்பித்த காரியம் எவ்வாறு இனிது முடியப் போகிறதோவென்று கலங்கி மயங்குகிறார்கள். இவர்களுக்குத் தாங்கள் செய்யத் தொடங்கிய காரியம் கைகூடாதென்று ஆரம்பத்தில்தானே அஸாத்தியமாகத் தோன்றிவிடுகிறது. அதனால் நேரும் பலஹீனம் கொஞ்சமா?

(2) சிலர் தாங்கள் செய்யப் புகுகின்ற கருமம் கருதியவாறே தப்பாது கைகூடுமென்று நினைத்து, முதலில் மட்டும் ஆரம்ப சூரத்தனமாய்ச் செய்யத் தொடங்கி, அது முற்றுப்பெறு முன்னரேயே பொறுமை யின்றி இடையிற் சோர்ந்து போகிறார்கள். நடுவே தளர்ந்துவிடுதல் பெரிய பிழை செய்ததாகும். அது மரம் ஏறிக் கைவிட்டதுபோலாகும்.

(3) அநேகர் எல்லாம் அறிந்து தாங்கள் நல்ல மார்க்கத்தை அநுசரித்து வந்துகொண்டிருக்கையில் மற்றவர்களுடைய உபத்திரவத்திற்கோ, துர்ப்போதனைக்கோ உட்பட்டு அஞ்சி அந்த நல்லதைத் தொடர்ந்து செய்யாமல் இடையில் விட்டுவிடுகிறார்கள்.

எவ்வளவேனும் பிரயாசமேயின்றி எளிதில் முடிக்கத்தக்க அற்ப காரியங்களையும்கூடச் செய்ய முடியாமற்போவதானது தன்னுடைய வல்லமையை அறியாமையினால்தான். அநேகர் நல்ல கர்மங்களைச் செய்ய ஆரம்பித்து அவற்றை நன்றாய் முடிக்கப் பாராமல் சோர்ந்துபோவதும் இத்துர்க்குணத்தால்தான். வீண் பயமும் சந்தேகமும் யாருக்கும் கூடாது.

அஞ்சத்தக்கனவற்றிற்கு மட்டும் அஞ்சவேண்டியது அறிவுடைமையேயன்றி, அஞ்சத் தகாதனவற்றிற்கு அஞ்சுவதன்று. ஒருவன் தன்னிடத்திலுள்ள பேராற்றலை யிழந்து, அற்ப காரியத்தையும் செய்ய அஞ்சுவானேயாயின், நாளடைவில் இந்த வாடிக்கையே முற்றி, முடிவில் அவன் ஒன்றையுஞ் செய்ய வல்லவனாகான்.

எவரும் மனோதைரியத்தைக் கைவிடவொண்ணாது. காற்றுக்குப் பயப்படுகிறவன் விதை விதைக்க மாட்டான்; மேகத்தைக் கண்டஞ்சுகிறவன் அறுக்கமாட்டான். மனவலிமையுடையவனே செய்யத்தக்கனவற்றையெல்லாம் அஞ்சாது செய்துமுடிக்க வல்லவனாவான். ஒருவன் என்னதான் பலனற்றவனாயிருந்தாலும் தன்மேல் வஞ்சனையில்லாமல், கடவுள் தனக்கு அளித்திருக்கிற முழுச் சக்தியோடும்

---

வீட்டிற் குடியிருப்போர் வீட்டுக்காரர் இல்லாத சமயத்தில் சில சாமான்களை எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். 'பார்த்தீர்களா' என்றாலோ சண்டை!

தான் முயன்று முன்னுக்கு வரும்படியான மார்க்கத்தைத் தேடுவானேயாயின், அவன் எப்படியும் க்ஷேமமடையாமற் போகான்.

முதலில் ஆவலோடு தொடங்கி, பின்பு வரவர இடையே சோர்ந்துவிட்டுவிடுவது சரியா? மனோதைரியக் குறைவினால் முயற்சியை யிழந்த ஒருவன் செய்யப் புகுந்த கருமங்களைச் செய்யாது கைசோர்ந்து விடுவதிலும் பேதமை வேறில்லை. சிலர் தங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லையென்கிறார்கள். அவ்விதம் சொல்பவர்கள் சொற்ப முதல் வைத்துத் தொழில் செய்து முயன்று பார்க்கட்டும். ஏராளமான முதல் வைத்து நஷ்டப்பட்டு அதிர்ஷ்டமில்லை யென்பதைவிட சொற்ப முதல் வைத்துப் பார்த்து அதிர்ஷ்டத்தை யறிந்துகொள்வது மேல். எதிலும் நிதானச் செலவும் முக்கியம். செய்யும் தொழிலில் அநுபவம் பெற்றிருப்பது எல்லாவற்றிலும் முக்கியம். முதலில் ஆரம்பிப்பது சொற்பமாகவே இருக்கவேண்டும். பிறகே அதைப் பெருக்கவேண்டும். "சிறுகக்கட்டிப் பெருகவாழ்" என்பர்.

வருத்தத்தைப் பாராமல் அஞ்சாமை, ஊக்கம், அறிவுடைமை முதலிய குணங்களைப் பெற்றுக் காரியத்தின்மேற் கண்ணாயிருப்பதே நன்று. இப்படிக்கு இருந்தால்தான் எந்தக் காரியத்தையும் பழுதின்றி நன்றாய்ச் செய்து முடிக்கலாம். மற்றவர்களைக் கண்டு அவர்களுக்காகப் பயந்து நல்ல காரியங்களைச் செய்யாதிருந்து விடுபவர்களே அதிகம். வெகுகாலம் சிரமப்பட்டு, காரியம் கைகூடிவருகிற சமயத்தில் அதைவிட்டுவிட்டால், அது கைக்கு எட்டினது வாய்க்கெட்டவில்லை என்ற வண்ணமாய் முடியுமேயன்றி வேறில்லை. தீயதான வழக்கம் என்று தாங்கள் பிரத்தியக்ஷமாகக் கண்டறிந்திருந்தும், அவற்றை யெல்லாம் பிறாது பழிப்புக்குப் பாத்திராராகாமலிருக்கவேண்டி அவர்களுக்காகப் பயந்து அதை அனுஷ்டிக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மனவலிமை இல்லாமையே முக்கிய காரணம். தைரியக் குறைவானது கேட்டிற்கெல்லாம் மூலமாகையால், யாரும் மனோதைரியத்தைக் கைவிடாமல் விவேகமாய் நடந்து நற்பெயர் கொள்ளவேண்டும்.

## வீட்டு விசேஷ உபசரிப்பு

வீட்டு விசேஷங்கட்கு வருகிற பந்துக்கள் ஏற்கெனவே அழைக்கப்பட்டு அதன் பின்னர் வந்தவரேயன்றி, அவர்கள் வீட்டில் புசிப்புக்குக் கதியின்றி வலியத் தாங்களாகவே வரவில்லை. ஆதலின் ஒரு அகப்பை சாம்பாரும், ஒரு அகப்பை ரஸமும், ஒரு அகப்பை பாயஸமும், அரையணா அளவில் ஒரு வடையும் இடாமல், ஒரு பதார்த்தம் வேண்டுமென்று எவ்வளவோ கூவி அழைத்தும் ஜாடையாகப் போய் விடாமல், வீடுதேடி வந்து காத்துக் கிடந்தவர்களுக்குத் தாராளமாக வயிறு குளிர இட்டு உபசரித்து அனுப்புங்கள்.

# அவமரியாதை.

வித்தியாப்பியாஸம் செய்துவரும் சிறுவர்களிடத்திலும், சரீரம் குழைய வருந்தி வேலை செய்து ஜீவனம் பண்ணுகிறவர்களிடத்திலுந்தான் அவமரியாதை என்னும் (குற்றம்) தோஷம் விசேஷமாய்க் காணப்படுகிறது. இதற்குக் காரணம் கண்டறிவது சுலபம். உலக வியாபாரத்தில்இறங்கி யுக்தாயுக்தங்களை அறிந்து இசைந்து ஒழுகும் உபாயத்தை அறிவதற்கான வயது சிறுவர்களுக்கு இல்லாமையால், அவர்களுக்கு மரியாதையின் காரியம் தெரியாமலிருக்கிறது. கல்வி, நாகரீகம் முதலியவற்றால் உண்டாகும் திருத்தங்களைப் பெறாத இழிஜனங்களுக்குச் சீர்மை என்பது இன்னதென்றே விளங்காததுபற்றி, அவர்களிடத்தில் மரியாதை என்பதில்லை. ஆகவே, வயது பேதத்தினால் ஒரு வகுப்பாரும், தொழில் பேதத்தினால் ஒரு வகுப்பாரும்-ஆகிய இரண்டு வகுப்பார் மரியாதைக் குறைவு உள்ளவர்கள். இவர்கள் சாந்தமாயும் மிருதுவாயும் பேசவும் இருக்கவும் கற்றுக் கொள்வது மிகவும் அவசியம். அன்றியும், இவர்களிடம் பழகுவதில் மானஸ்தர்கள் சற்று எச்சரிக்கையாகவே நடந்துகொண்டால்தான் அவர்கள் அவமானப்படாதிருக்க முடியும்.

முரட்டுத்தனமானது ஆண்மைக்கு அடையாளமல்லவென்று பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டியது. சாந்த குணமுள்ளவனே தைரியஸ்தன்; முரட்டுக் குணமுள்ளவன் மூட்டாள்; அவனுக்குக் கோபம் வெகு சீக்கிரம் உண்டாகும். அன்றியும், பிறருக்கு மரியாதைக் குறைவு பண்ணினால், நம்மிடத்துள்ள மரியாதை அழிந்துவிடுமென்றும், அதனால் மனஸ்தாபம் நேர்ந்து நன்மைகளுக்கு இடையூறு உண்டாகுமென்றும் தெளிவாய்ச்சொல்லிச் சிறுவர்களுக்கு மரியாதையைக் கற்பிக்கவேண்டும்.

கஷ்டப்பட்டுக் கைவேலை செய்பவர்களிடத்தில் மட்டிப் பேச்சும் முரட்டு நடத்தையும் இருக்கவேண்டியதென்ன? அவர்கள் கல்வியறிவு சரிவரப் பெறுதற்கு முன்னரே தரித்திரக் கொடுமையால் கைவேலைசெய்து பிழைக்கச் சென்றவர்கள்; சென்ற இடத்தில் அற்ப சகவாசமே அதிகமாகி முரட்டுத்தனமும் அதையொட்டிய வேறு பல துர்க்குணங்களும் வளரத் தலைப்பட்டு அவர்களுடைய சன்மார்க்கம் நசிப்பதாயிற்று. இத்தகையோருக்கு மெல்லிய இருதயம் எவ்வாறு உண்டாகும்? மெல்லிய இருதயம் இருக்குமானால் மெல்லிய வார்த்தையும் மிருதுவான செயலும் கூட இருக்குமன்றோ? நல்ல எண்ணம் நல்ல இனிய பேச்சுகளால் தான் வெளிப்படவேண்டி வரும். கெட்ட எண்ணத்திற்குக் கொடிய பேச்சுகளே தகுதியாயிருக்கும். மரியாதையின் பயனை அறிந்து மரியாதையாய் நடந்துகொள்வதே மரியாதை. முரட்டுத் தொழிலில் பழகியவர்களிலும் உத்தமர்கள் பலர் உண்டு. அது அவர்களுக்கு இயற்கையாயமைந்து

---

சிலாது அன்னத்தின் விசேஷம்—அதைப் புசிப்பவர்களெல்லாம் அவர்களுக்குப் பரம துரோகிகளாகவும் நயவஞ்சகர்களாகவுமே முடிகிறார்கள்,

தொடர்ந்த நரகுணமாகும். அதனல் அவர்கள் தீயவற்றை ஆதிமுதற் கொண்டே வெறுத்து நல்வழியில் நடக்க விருப்புற்று முயன்ருேராவர்.

ஃ

இன்னெருவித அவமரியாதை யுண்டு. அவர்கள் தொடங்குங் காரியங்களை யெல்லாம் கொத்துங் குறையுமாகவே செய்து தொலைப்பார்கள். மரியாதையான ஓரிடத்தில் போஜனத்திற்குப் போய் எல்லோரும் சாப்பிடுவதற்கு உட்கார இருக்கும் சமயத்தில் இதோ சற்று வீட்டுக்குப் போய் வருகிறேன் என்று சொல்லி அங்கு இருக்கிறவர்களை யெல்லாம் காக்கவைத்துப் போய்விடுவார்கள். நாளையதினம் உம்மைக் கண்டு அவசியம் ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது; ஆகையால் பகல் இரண்டு மணிக்கு எந்தக் காரியம் இருந்தாலும் வந்துவிட்டுப் போகவேண்டியது என்று இரண்டு மூன்று மைல் தூரத்திலிருக்கும் ஒரு சிநேகிதனுக்குச் சொல்லியனுப்பி, அவர் என்னவோ, என்ன விசேஷமோ என்று ஓடிவர, தாங்கள் அந்த சமயம் வீட்டிலிராமல் வேருேர் வேலையை நினைத்துக் கொண்டு எங்கேயாகிலும் போய்விடுவார்கள். இப்படி ஸ்திரமில்லாத புத்தியை உடையவர்களால் விளையும் அநர்த்தங்கள் எண்ணித் தொலையா. ஆகையால் அப்படிப்பட்டவர்கள் கூடுமானவரையிலும் தாங்கள் ஒரு வேலையைக் கருதி அதிற் பிரவேசிக்கத் தொடங்கினபின், அதைப் பூர்த்தி பண்ணுமல் வேருென்றையும் தாங்கள் சிந்தனையில் ஏற்றுக்கொள்ளாமலிருக்கும்படி ஒரு உறுதித் தீர்மானம் செய்துகொள்வது கௌரவமாம்.

## விஷமத் தேள்களின் வேலை.

இவர்களுக்கு சும்மா பொழுது போவது வெகு கஷ்டம். ஏதாகிலும் ஒரு சண்டையை மூட்டுவர். இருவருக்கும் இடையில் கலக யாகம் வளர்ப்பர். அவர்கள்பிரிந்து விடினுே தூரநின்று வேடிக்கை காண்பர். பிரியாராயின் ஒருவனிடம் சென்று, "உன்னைப்பற்றி அவன் அப்படிச் சொன்னுன், இப்படிச் சொன்னுன், அதனுல் நான் அவனிடம் பேசுவது கிடையாது" என்பர். இவ்விதமே மற்றவனிடமும் கூறி உறவாடுவர். இன்னும் வேலைசெய்து உழைக்கிறவர்களிடம் வெட்டிப் பேச்சுகள் பேசி அவர்களின் மனத்தையும் அருமையான நேரத்தையும் கெடுப்பர். இவர்களைப் பகைக்கவும் முடியவில்லை. நேசிப்பதும் கஷ்டம். இவர்கள் தொலைகிறவர்களாகவும் இல்லை. இவர்களிடம் சிக்கவேண்டாம்.

மறுபடியும் ஏமாறிச் சிறைக்குப் போகாத வழியைத் தேடிக்கொள்வதில் சில தேசபக்தர்கள் வெகு ஜாக்கிரதையாக உள்ளுக்குள் நடந்துகொள்கிருர்கள். அவர்கள் சிறையில் நசுங்கிப்பட்ட கஷ்டம் அப்படிச் செய்கிறதாக்கும்!

# தீக்குணத்தை விலக்கும் வழி.



ஸகல சக்தியும் தன்னிடமே இருக்கிறது. தான் நினைத்தால் எந்தத் தீய குணத்தினின்றும் விடுதலைகொள்ளலாம். திடமான மனோவுறுதி மட்டுமே இங்கு தேவை. எந்தத் தீயகுணத்தை நீக்குதற்கு விரதங்கொள்ள விருப்பமோ அந்தத் தீக்குணத்தின் பெயரைச் சொல்லிப் பின்வருமாறு கூறவேண்டும்.

ஃ

ஓ! தீயகுணமே! நீ என் ஹிருதயத்தை அசுத்தப்படுத்தி அதை ஓர் நரகக்குழிபோலாக்கிவிட்டாய். உன்னால் எனது நிர்மலமான தேகமும் கறுத்து, இரத்தமுங் கெட்டு, என் சுவாசமும் துர்க்கந்தமடைந்துவிட்டது. எனது ஆத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் பகைவனாயுள்ள கொடிய நினைவே! நீ எனது மனஸாக்ஷியை அப்புறப்படுத்திவிட்டு என்னிடம் வலிய வந்து குடிகொண்டும், எனக்குத் தலைவனுமாகி என்னைப் பலவித கெட்ட எண்ணங்களுக்குத் தூண்டுதல் செய்தும் வருத்துகின்றாய். நான் பகவானைப் பணிந்து பரிசுத்தனாகப் பிரயத்தனப்பட்டால், என்னை அப்படிச் செய்யாதபடி தடுத்து எனக்கு ஸாந்தமும் சுகமும் உண்டாகாதபடி கெட்டவழியி லிழுக்கிறாய். ஆகையால் ஸர்வ சக்தியுமுள்ள ஸர்வேச்வரனது அருளால் இன்று உன்னை எதிர்த்து வதைத்து ஓட்டிவிடத் துணிந்துவிட்டேன். இன்றோடு நான் பரிசுத்தத்தில் காலம்போக்க இதோ (ஸாந்த) விரதம் பூண்டேன். இதை ஆண்டவரும் அடியார்களும் அறிய ஆணையிடுகின்றேன். இவ்விதம் பரிசுத்தம் அடைய விரும்புகின்ற என்மீது இந்த நிமிஷமே பகவானுடைய அருளும் வீசப் பெறுவதாக.

ஃ

பாவிகளைப் பாதுகாக்கும் ஓ பரம புருஷா! என் ஆத்மா பாவ எண்ணங்களாகிய மிருகங்களிடம் சிக்கித் தத்தளிக்காமல் வன்மையும் உறுதியுமான திடதாருட்டியத்தைப் பெறப் பிரஸாதிப்பாய். இன்று முதற்கொண்டு என் ஆத்மா அடையும் ஜெயமானது மறுபடியும் அந்தகாரத்தை யடையாமல் பரிசுத்தமும் தெளிவுமான நிலைமையைக் கொண்டு மகிமையும் மேன்மையும் பெறுமாறு செய்யக்கடவீர். என்னை எதிர்த்து நிற்பவர்களை நான் எனது ஸாந்தமான தன்மையால் மிருதுபடுத்தக்கூடாமற் போகும் நிலையில் என் ஐயனே! தேவரீர் அதனை ஏற்று என்னிடத்திலிருந்தும் அத்தீயவர்கள் விலகும்படி செய்து உதவுவீராக. என் ஹிருதயம் பாவதோஷங்களில் ஸம்பந்தப்படாதிருக்க ஆசிக்கின்றேன். நான் உண்மையாக நடந்திருக்க, என்னை வஞ்சித்துத் துவேஷிப்பவர்களின்மீது, நான் ஆத்திரப்படுவதைத் தடுத்துக்கொள்வதற்காக அவர்களின் ஈனச் செயல்களைத் தேவரீரிடம் அறிக்கையிட்டுக் கொண்டு அம்மட்டில் நான் விலகிக்கொள்கின்றேன். என் ஐயனே! உமது பரிசுத்த நாமம் ஸதா ஜெயம் பெற்றுப் பிரகாசிப்பதாக. ஓம் தத்ஸத்.

அமிர்த குணபோதினி

# வாழ்த்துப்பா

செந்தமிழ் நாட்டிற் சீரிதாய் நிலவும்
எந்தன் அமிர்த எழிற்குண நங்காய் !
அந்தநாள் அமரர் ஆர்கலி கடந்தே
சந்ததம் வாழ சாவா மருந்தை
உந்துநற் பேற்றால் உவப்புடன் பெற்றார்
அந்தநாள் யாமும் ஆங்கில எனவே
சிந்தனை யற்று செய்வகை மறந்தோம்
மந்தரம் மத்தாம் வாசுகி நாணும்
எந்தவிடம் யாம் இதனைப் பெறுவேம்
கந்தனைப் பயின்றக் கண்ணுதல் அருள்வரோ ?
எனயாம் எண்ணி ஏங்கித் தவித்தேம்
குணவதீ ! நீயும் குறிப்பினை யுணர்ந்தே
அஞ்சன்மின் உலகீர் ! ஆநந்தம் தருவம் !
நஞ்சிலா அமிர்தம் நல்குவ முமக்கே
என்றே இசைத்து எங்கணும் விளங்கும்
குன்றே யனைய குணமுள அமிர்தமே !
பாற்கடல் போன்ற நூற்கடல் தன்னில்
அநுபவம் நிறைந்த அறிவை மத்தாய்
அணுவையுஞ் சரியா ஆய்தலே நாணாய்
தமக்கேன் வாழா தகவுசாற் பெரியரும்
இன்புற உலகம் இன்புறு பெரியரும்
ஆன்றவ ரோடுபல சான்றவர் துணையால்
கடைந்திடும் அமிர்தம் மடையெனப் பொழிந்தே
அமரர் கடைந்த அமிர்தம் எனது
சமமே இல்லாச் சார்வே பெற்று
சொற்சுவை பழுத்த தோகைத்தமிழ் கவியுங்
கற்றவர் வியக்குங் காவியப் பொலிவுஞ்
செவிதோறுஞ் செவிதோறுந் தெள்ளமு தூட்டி
கவிஞர் தம்வயிறு கனிவாய் நிரம்ப

---

அரசனின் ஆணையை மீறலாம். வைத்தியரின் உத்தரவை மீற முடியுமோ? அவர்தான் ஏகசக்ராதிபதி.

நினைதோறும் நினைதோறும் நெஞ்சமுதூகக
புனைபவர் தமது புந்தி மகிழ
நவநவ தலைப்புடன் நண்ணுமெம் போதினீ
கவிதா விலாசமுங் கதாப்பிர சங்கமும்
பழமொழி பலவும் பலசரக்கடையும்
குழந்தைகள் பக்கமும் கோதையர் பகுதியும்
அறிஞர் மொழியும் அகட விகடமும்
பிரபஞ் சமோடா நந்த தெரிசனம்
அநுபவ மொழிகளும் ஆய்ந்தபே ருரையும்
எனுமிவை தாங்கி எளியவர் செல்வர்
அனைவரும் எளிதாய் அடைகவே அறிவை
இனிமைப் பதத்தில் நனிமிகு சுவையாம்
திராட்சையை நிகர்த்துத் தெவிட்டா அமுதென
திராவிட நல்லுயர் திங்கட் புனிதமாய்த்
திகழும் எம் அமிர் தகுணபோ தினியே!
புகழுடம் போடு பொலிந்திடுஞ் செல்வீ!
கழிந்தநா லாண்டினுங் கழிபேர் நிலையுடன்
கற்றவர் மற்றவர் களித்தின் புறவே
உற்றவோர் புதினம் ஈதலால் வேறிலை
எனவிசைத் துலகம் இனிமையாய் வாழ்த்த
வாழ்க! நீயும் வளமாய்
ஆழ்கடற் புவியில் வாழ்க! பெரிதே!

மு. துரைப் பிள்ளை.

## செல்லாக் காசின் சுமை!

சிலர் தங்கள் பெண்களை எவருடைய கழுத்திலாவது கட்டித் தொலைத்துவிட்டு ஒரு பெரிய சுமை தீர்ந்ததுபோல் கடன் கழித்துக்கொண்டு விலகுகிறார்கள். செல்லாக்காசு வைத்துள்ளோரும் அச்சுமையைப் பிறர் ஏமாறுகிற தருணம்கண்டு அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு அப்பாடாவென்று இளைப்பாறுகிறார்கள். இந்த இரு வியாபாரமும் மிக்க நேசமும் அன்னியோன்னியமுமான இடத்திலேயே நடந்து முடிகின்றன. இந்த வியாபாரம் நடந்தபிறகு சந்திப்பு அபூர்வம்!




# பொறுமை நலன் தருமா?

இன்று கூடிய நமது கடையில் மிராஸ்தாரரான ஒரு நண்பர் பின்வருமாறு தமது அநுபவங்களை விவரித்தார்:—

"**என்னுடைய மனைவி, என்னுடைய மக்கள்** என்று நான் கூறுவதெல்லாம் எனக்கு அவர்கள் உதவிபுரிந்து இன்பமளிப்பார்கள்; என் துயரை அவர்களும் பகிர்ந்து கொள்வார்கள் என்ற எண்ணத்தினால்தான். என்னைப்பற்றி அவர்கள் நினைக்காவிட்டால், நானும் அவர்களை யெண்ணமாட்டேன். சில சமயங்களில் நான் அனுபவிக்கும் இன்பம் மற்றவர் அனுபவிக்க இடமில்லாமற் போயினும், நான் படும் துன்பத்தைப் பிறரும் பகிர்ந்துகொள்ளாவிட்டால் என் மனம் சமாதானம் அடையாது. சகிக்க முடியாத துன்பம் ஏற்படும் பொழுதெல்லாம், அதனை யெனது நெருங்கிய நண்பர்களிடம் கூறி, இதனின்றுந் தப்ப வழி யென்ன என்பேன். அதற்கவர்கள் "பொறு, பொறு, பொறுமை வீண் போகாது; பொறுத்தவர் நாடாள்வார் பொங்கினவர் காடாள்வார்; இதற்குப் பாரதக்கதையே சாட்சி" என்று உபமான உபமேயங்களோடும் கூறுவர். நானும் அதனை நம்பி நாள் பல,— இல்லை, வருடங்கள் பல கழித்துவிட்டேன். "அன்று கண்ட மேனிக்கு அழிவில்லை" என்றபடி என் துன்பம் எள்ளளவுங் குறைந்தபாடில்லை. ஆகவே, என் பொறுமை வறுமையாகத்தான் ஆகுமோ என்ற ஐயம் பிறந்தது. அந்த ஐயம் தோன்றும்பொழுதெல்லாம் "சே! பொறுமை வீண் போகாது; பொறுமையிற் சிறந்த தருமர் கடைசியில் நாடாளவில்லையா?" என்று நானே சமாதானம் சொல்லிக்கொள்ள முயல்வேன். "எல்லோரையும் பறிகொடுத்த பிறகு அவர் நாடு ஆண்டுதான் என்ன சுகம் கண்டார்? பொறுமையே வடிவான ஸ்ரீராமரும் தன்னுடைய பொறுமையைக் கைவிட்டுக் கொஞ்சம் கோபங் காட்டத் தொடங்கவுந்தான் வருணனும் வழிக்கு வந்தான்" என்று அதற்கு மேலும் ஒரு ஐயத்தை யெனது பாழ் மனம் கிளப்பிவிடும். இந்த விதமாக நானும் என் மனதும் பலநாள் போராடி "பொறுமையைக் கொள்வதா, விடுவதா" என்ற நிலையில் உங்கள் முன்பு தோன்றியுள்ளேன். உங்களிற் சிலர் "நீர் என்ன துன்பமடைந்தீர்? அதற்கு நீர் பொறுமையைக் கையாண்டது எவ்வாறு?" என்று அறிய வினவலாம். இது முக்கியமானது அல்லவாயினும், எனது நிலையை யறிந்தால்தான் "பொறுமை

---

அக்கிரமக்காரனுக்கும் அடங்குகிற ஒருநாள் வரும். அவன் புறப்பட்டுச் சென்ற தனது ஊரைக் காண்பது அதுவே கடைசி தடவையாகவும் இருக்கலாம். திரும்பிவாரதவாறும் நேர்ந்துவிடலாம். நேர்ந்தும் இருக்கிறது.

யைக் கொள்'' அல்லது ''விடு'' என்று கூற உங்களுக்கு இலகுவா யிருக்கும். ஆதலின் எனது நிலையைச் சுருக்கமாக உங்கள் முன்னிலையில் கூறிவிடுகின்றேன்.

ஃ

நல்லவன் என்ற பெயர் வந்தாலும், கெட்டவன் என்ற பெயர் வந்தாலும் எனக்கு இப்பொழுது அதைப் பற்றிக் கவலையில்லை. நாம் இவ்வுலகில் பிறந்தது இன்பவாழ்க்கை நடத்துதற்காகவன்றோ? அங்ஙனமாக, ''பொறுமை, பொறுமை'' என்று வாணாளிற் பெரும்பகுதி துன்ப வாழ்க்கையாகவே கழியின், பொறுமையால் வரும் பயன் என்ன என்பதே எனக்கு இப்பொழுது பெருங்கவலையாக வுளது. என் மனைவி என்னிடத்தில் பலமுறை தவறு புரிபவளாக இருப்பினும் அது எனக்குப் பெரிதாகத் தோற்றுவதில்லை. ஏனெனில் அவள் எனது ஆருயிர்க் காதலி, நான் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை அவளும் அநுபவித்தற் குரியவள். மற்றபடி, தன் கணவனை இளமையிலேயே பறிகொடுத்து, பிறந்த வீடே கதியென்று வாழும் எனது அக்காளோ உடன்பிறப்பென்பது ஒன்றுதவிர, மற்றெவ்வகையிலும் எனக்குத் தீமையே வடிவாகத் தோற்றுபவள். என்னைக் குறித்தும் என் மனைவியைக் குறித்தும் ஒன்றிற்கு நூறாகக் கோள் சொல்லி யென் மீது எனது தந்தைக்கு வெறுப்புண்டாகுமாறு செய்வதே அவள் வேலை. எனது அப்பனுக்கும் மகள் பேச்சென்றால் வேதவாக்கு. தந்தையின் நிலையே இவ்வாறானால் தாயைப்பற்றி யான் கூறல் மிகை. தாயும் மகளும் வடிவில் இருவரேயன்றி செயலில் ஒருவர் தான். கரைகடந்த துயர் இடையிடையே என் மனதை வாட்டினும், எனது அக்காளை நான் நினைத்த வளவில் என் துயர் மறைந்து மிக்க வியப்பு எனக்குண்டாகிவிடும்! ஆ! இவ்வுலகில் எவ்வளவு விசித்திரமான மக்களை யெல்லாம் ஆண்டவன் படைத்தருளுகிறான்! எப்பொழுதும் மலர்ந்த முகம், புன்சிரிப்பு, அன்பான பணிவான பேச்சுகள்! ஆனால் உள்ளே தீய எண்ணமும், பொறாமைப்பேயும் இடம் பெற்றுப் பொலிவதை என் போன்றார் எளிதில் அறிவதற்கில்லை. பலமுறை ஏமாறிய பிறகே அறிய நேர்கின்றது. எனது தமக்கையும் அந்த இனத்தில் சேர்ந்தவள்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து வெறுப்படைந்த பின்புதான் அறையிலிருந்து அம்பலத்திற்கு வந்திருக்கின்றேனாதலின் எனது உடன் பிறந்தவளைப்பற்றி இவ்விதம் கூறுவதால் என்னைத் தவறாக நினைக்கவேண்டாம்.

ஃ

நான் இளமையிலிருந்தே தாய் தந்தையர்க்கு அஞ்சி அடங்கி ஒடுங்கி நடப்பவன். இப்பொழுது எனக்கு வயது 35. முப்பத்தைந்து ஆனால் தான் என்ன? இன்றும் சிறுவனைப் போல்தான் எனது நிலை! ஏதாவது செலவுக்குப் பணம் வேண்டுமென்றால் பெற்றோரைக் கேட்டுத்தான் ஆக வேண்டும். சிறுவர்கள் நிலை அப்படித் தானே! ஆனால், அவ்வப்பொழுது நேரும் செலவுக்குக் கேட்டு வாங்குவது என்பது என் மனதுக்கு அச்சமாகவே யிருக்கும். எங்கே ஒருக்கால் இல்லையென்று கூறிவிடுவார்களோ என்றுதான். அதனால் அவர்கள் பணம்

---

நமக்கு அவசரமாக வேண்டிய மனிதர் ரயில்வே ஸ்டேஷனிலேயே மூன்றுமணிநேரம் இருந்திருக்கிறார். அவர் வந்திருந்தது நமக்குத் தெரியவில்லை.

வைக்குமிடத்தைப் பார்த்திருந்து கேட்காமலே எடுத்துவிடுவேன். மறு நாள் வீட்டில் பணம் காணவில்லை யென்று "அமளி குமளி"யாக இருக்கும். எனது தமக்கை யென்னிடம் வந்து "நீ பெட்டியிலிருந்த ரூபா எடுத்தாயா?" என்று கேட்பாள். நான் 'திருடவில்லை யென்றும். எனக்குமட்டும் செலவுசெய்ய உரிமை யில்லையா' என்றும் கூறுபவன் போல, மனதிற்குள் அச்சம் மிகினும் அதனை வெளியே காட்டாது "நான் தான் எடுத்தேன்" என்பேன். "தம்பி தான் எடுத்தானும்" என்று தந்தை யிடம் சொல்வாள். "எதற்காக எடுத்தான்? குடும்பச் செலவுக்கே போதாமல் நான் படுங் கஷ்டநஷ்டங்களை அவன் அறியானு? வேண்டுமென்ருல் என்னிடம் கேட்கிறது தானே. கோபாலன் [எனது அண்ணன்] இவனுக்குப் பெரியவனு யிருந்தும் என்னைக் கேட்காமல் ஒன்றுந் தொடுவதில்லையே" என்று தன் மனம் போனபடி பேசுவார். உங்களுக்கு எப்பொழுதுதான் செலவு இருக்காது; ஆனுல் அவன் கேட்டு எடுத்திருக்க வேண்டும்". என்று மெதுவாக ஒத்துப்பாடுவாள் எனது தமக்கை. அணையும் நெருப்பை ஊதிவிடும் காற்றை நிகர்க்கும் அப்பொழுது பேசும் பேச்சு! நான் ஏதாவது பதில் கூறலாமா வேண்டாமா என்று யோசித்து யோசித்துப் பார்த்து அடங்கிவிடுவேன். எனது அண்ணன் ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கியவன். அவன் வேண்டும்பொழுதெல்லாம் பணத்தட்டே யிருக்காது. கேட்காமல் எடுத்தாலும் ஏனென்று கேட்பதில்லை.

ஃ

தோட்டத்திற்குக் குறித்த நேரத்தில் யான் போகாவிட்டால், எனது தாயிடம் "எப்பொழுதும் வீட்டிலேயே குந்திக்கொண்டிருக்கிருனே; பிழைப்பு இருப்பைப்பற்றிய கவலையே அவனுக்கில்லை" என்று மெதுவாகப் பற்றவைத்துவிடுவாள் எனது மூத்தாள். என்னைப் பெற்று வளர்த்த தாய்தான்! ஆனுலென்ன? எனது அண்ணனிடத்தும் அக்காளிடத்துங் காட்டும் அன்பு என்பால் காட்டுவதில்லை. எனது அண்ணன் மனைவி என் தாய்வழியிற் பிறந்தவள்! என் மனைவி அயலாரொருவரின் மகள்! இதுதான் அன்புக் குறைவிற்குக் காரணம். எனது தாய் நான் சரியாக பண்ணையைக் கவனிக்கிறதில்லை யென்று எனது தந்தையிடம் மந்திரோபதேசஞ் செய்துவிடுவாள். அவ்வளவுதான், எனது தந்தை நாட்டியம் ஆடத் தொடங்கிவிடுவார். நான் எழுதும் முறை மிகக் கடுமையானதாக உங்களுக்குத் தோற்றலாம். எனது உழைப்பைத் தெய்வம் அறியும். எத்தனையோ பாடுபட்டுள்ளேன். அத்தகையவனுக்கு இவ்வித சன்மானங் கிடைப்பின் என் மனம் எவ்வாறிருக்கும்? "உங்களுக்கு வயதோ 35 தாண்டிவிட்டது! கலியாணம் நடந்தும் பல வருஷமாகிவிட்டன! இப்படி பயந்து பயந்து இருந்தால் என்றுதான் நீங்கள் சுகப்படுவது?" என்று என் மனைவி யொருபக்கம் என்னை யரித்துவிடுவாள். "பொறு; பொறு; பொறுமை வீண் போகாது" என்று கூறி நான் அவளை யடக்கிவிடுவேன்.

இவ்விதத் தொல்லைகளால் மனம் அலுத்து, என்ருவது ஒருநாள் மாலை, எனது நண்பனைச் சந்தித்துப் பேசி

---

பள்ளிக்கூடம் முடிந்து சிறுமிகள் கூட்டம் கூட்டமாக வீட்டிற்குச் செல்லும் அழகும், சிறுவர்கள் செல்லும் அழகும் தனித்தனியான ஒவ்வொரு ருசியைக் கொண்டவைகள்.

மனம் ஆறுவோம் என்று போய்விடுவேன். அன்றிரவு யான் வீட்டிற்கு வருவதற்குள், எனது அண்ணன், அப்பன், தாய் மூவரும் தனித்தனியே மூன்று புராணங்கள் பாடி, என்னை எதிர்பார்த்திருப்பர் என்முன் அரங்கேற்றுவதற்கு; அந்த புராணங்கள் மூன்றும் "வசைபுராணங்கள்" என்று உங்களிடம் கூறல் மிகை. நான் வீட்டிற்கு வந்தேனே இல்லையோ எனது அக்காள் என்னிடம் வந்து "மத்தியானத்திற்குமேல் எங்கே போயிருந்தாய்? வயலிற்குப் போகவில்லையென்று ஐயா சண்டை போடுகிறார்" என்று பின்னால் அரங்கேற்றப்படும் வசைபுராணங்களுக்கு முன்னால் முகவுரை கூறிவிடுவாள். பின்பு புராணங்களின் அரங்கேற்றம் தொடங்கிவிடும்! ஒருவருடைய புராணம் முடிந்ததும், மற்றவர்கள் தம்முடையதைத் தொடங்கலாம் என்ற பொறுமை அவர்களுக்கு இருப்பதில்லை. ஒருவர்க்குமுன் ஒருவர் முந்துவதால் மூன்று புராணங்களும் நான் முன்—நீ முன் என்ற போட்டியோடு வெளிப்படும். அந்த மூன்றிலும் என்னுடைய தந்தையின் புராணந்தான் கொஞ்சம் பெரியது! அவற்றின் அழகையெல்லாம் வருணிக்க எனக்குத் திறனுமில்லை, இடமுமில்லை. எனது வீட்டிற்குத்தலைவர் எனது தந்தையே யாதலின் அவருடைய புராணத்தின் சாரத்தை மட்டும் மிகச் சுருக்கமாகச் சில மொழிகளில் கூறிவிடுகிறேன். "நீ இப்படியெல்லாம் திரிவதா யிருந்தால், உன்னுடைய பாகத்தைத் தனியே பிரித்துக்கொண்டு உன் இஷ்டம்போல் நட." இதுதான் எனது தந்தை பாடிய புராணசார சங்கிரகம்! "பொறுமை, பொறுமை" என்று பேசிக்கொண்டிருந்த நான் வெறுப்படைந்து "சரி! அப்படியே பிரித்துவிடுங்கள்" என்று கூறிவிடுவோமா என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது, எனது மனம் "பதறாதே! இப்பொழுது ஏற்படும் பிரிவினை உனக்கு நன்மை பயவாது. உனக்கு ஒரு பங்கைக் கொடுத்துவிட்டு, இரண்டு பங்கை உனது அப்பனும் அண்ணனும் ஏற்றுக்கொள்வர். பின்பு உனது தந்தை தன் பங்கை மூத்தவனுக்கே உரிமையாக்கிவிடுவர். ஆதலின் சிலநாள் பொறுத்து நீயும் மூத்தவனும் ஒற்றுமையாகப்பிரிவினை செய்துகொண்டால், இருப்பதைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு, பெற்றோர்க்கு உணவிற்குமட்டும் சிறிது அளிக்கலாம்" என்று கூறித் தடுத்துவிடும்! நான் இப்பொழுது உங்களுக்குக் கூறக்கூடியவை இவ்வளவுதான். முன்னே யான் பொறுமையாற் பயனுண்டு என்று நினைத்தபொழுது, என் மனம் "இல்லை" என உபமானத்தோடு கூறி மறுத்தது. இப்பொழுது பொறுமையால் நன்மையொன்றும் இல்லையென நான் தீர்மானிக்கும் பொழுது அதே மனம் "உண்டு" என்று வாதிக்கிறது. இதனால் என் மனம் குழம்பியிருக்கிறது. இதற்கு வழிஎன்ன என்றார். அதற்கு வழியை ஐந்தாம் வருடத்திய அமிர்த குண போதினிப் பத்திரிகையில் காணலாமென்றார் அல்லாபிச்சை. இத்துடன்—"நமது கடை"யும் பூர்த்திபெற்றது.

பெ. இராமாநுஜ ரெட்டியார்.
('பஹதூர்' பொன்வண்டு செட்டியார் அவர்கள் ரஜாவில் இருக்கிறார்.)

---

குடும்பத்தில், வாழ்வில் ஆநந்தம் விரும்பினால் "அமிர்த குணபோதினி"யை வாசியுங்கள். அது இகபரம் இரண்டிற்கும் பெருந்துணையாக உதவுகின்றமெஞ்ஞானத் திறவுகோலாகும். ஒரு ஊன்றுகோலுமாகும். நல்ல விஷயங்களில் மனதை ஏவச் செய்வதற்குப் பக்குவமான ஒரு தூண்டுகோலுமாகும்.

# கவிதா விலாஸம்

# ஏ க நா த ன்.

## II

முன்குறிப்பு:—கடவுள் எவ்வுருவிலும் வருவார்; உலகில் தோன்றுவன யாவும் அவர் உருவே; எல்லா உருவிலும் அவரைக் காண்பதே ஞானபக்குவம்; ஆதலின் மதபேதம், ஜாதிபேதம் பாராட்டி எவ்வுருவையும் இகழ்ந்து தள்ளற்க; எங்கணும் நிறைந்துள்ள இறைவனை எங்கெங்கும் கண்டு துதிபுரிக என்று குருவாகிய ஜனார்த்தனர் ஏகநாதனுக்குப் போதித்தனர். அவனும் அதைப் பணிந்து ஏற்றனன். பின்னர் குரு அதோ எவரோ வருகின்றனர் பார் என்று கூற, ஏகநாதன் ஒரு பெண்ணும் ஓர் பக்கிரியும் அவர்களைத் தொடர்ந்து ஒரு நாயும் வரக் காண்கின்றான். கடவுளே இவ்வுருவில் வருவதால் வெளித் தோற்றத்தைக் கண்டு அலக்ஷியம் செய்யாமல் அவர்களிடத்தில் இறைவனைக் கண்டு வணங்குக என்கிறார் குரு.

பக்கிரி தன் மனைவியுடனும் நாயுடனும் வர, குரு வணங்குகின்றார், ஏகநாதனும் போற்றுகின்றான். பக்கிரி தனது மனைவியைப் பார்த்து நாயினிட மிருந்து பாலைக் கறக்கச் சொல்லிவிட்டு, ஏகநாதன் உயர்ந்த ஞானியாக விளங்குவான் என்று குருவுக்குச் சொல்கிறார். பின்பு, கறந்த பாலை மனைவி பக்கிரியிடம் தர, அதைப் பக்கிரி ஜனார்த்தனரிடம் கொடுத்து அருந்துமாறு வேண்டுகின்றார். பின் பக்கிரியும் அவர் மனைவியும் நாயும் திடீரென்று மறைந்துவிட, ஏகநாதன் அதைக்கண்டு வியப்புறுகின்றான்.

பின், குரு அந்த நாய்ப்பாலைத் தாம் பக்தியுடன் அருந்தி ஏகநாதனுக்கும் தர, அவன் அதைத் தொடேன் என்றும், நாய் நக்கியதைத் தொடுபவருண்டா, நாயின் பாலை எவர் பருகுவார் என்றும், மறுத்து விடுகிறான். குரு அவனது அஞ்ஞானத்தைப் போக்கி, மூடா ஓர் துளியாயினும் பருகு என்று வற்புறுத்தி, அருந்தச் செய்விக்கின்றார். ஏகநாதன் அப்பாலை யருந்தியதும் ஞானஒளி பெற்றோனாகி அற்புதம்! அற்புதம்! என்னே கடவுளின் கருணையென்று ஆனந்தக் கூத்தாடுகின்றான்.

☞ இதுவரையுமுள்ள விஷயங்களைப் பாக்களாக இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. மற்றவை அடுத்த ஸஞ்சிகையில் தோன்றும்.

# ஏகநாதன்

(முன் தொடர்ச்சி.)

ஏகநாதன்:—அடிகாள்! உய்ந்தேன்.

ஜனார்த்தனர்:———————————அவ்விடம் நோக்குதி;
நெடுந் தோலை மூவரு நேரிதா—————————?

ஏகநாதன்:————————————————ஆம் ஆம்;
யாரோ? ஆடவன்—அரிவை—ஒளிநாய்—
யாராய் இருக்கலாம்?

ஜனார்த்தனர்:——————————யாரோ அறிவர்?
முதல்வனே இவ்வழி மூவ்வுரு அடைந்தனன்
புதல்வ! வீணே புறப்போருள் மயக்கால்
சாற்றுமிச் சமயம் பற்றுதிராதே!

(ஓர் பக்கிரி தன் மனைவியோடு ஓர் நாய் பின்தோடர முனிவர் ஆச்சிரமம் அணுகுதல்.)

ஜனார்த்தனர்:—போற்றி—நின் சீரடி போருளாக் கோண்டமைப்
போந்தமும் மூர்த்தமே போற்றுவம் நின்னையே!

ஏகநாதன்:—வந்தனம் உமக்கும் வந்துள உமது
மனைக்கும் நாய்க்கும் வந்தனம் ஐயனே!

(தன் மனைவியைப் பார்த்துப் பக்கிரி)

பக்கிரி:—ஈவாய் செல்லுமுன் ஈதோ இருக்குமிக்
கலசம் நிறைநுரை பாலைக் கறந்தே!

(பக்கிரியின் மனைவி நாயினைக் கறத்தல்.)

ஏகநாதன்:—ஓ! ஓ! அற்புதம் உதுவே! ஆங்கவள்
வெண்ணிலா போதுளிய இந்நாயதனைக்
கறந்திடத் தொடங்கினள் காண்மின் காண்மின்!

பக்கிரி:—உமதிளஞ் சீடன் உயர்நிலை அடைவன்
அக்காலத்தே அடைகுவர் மாந்தர்
எக்கால முணரா இனிமையாம் வாழ்வை
சமரசம் பரவி சாந்தம் நிலவும்
அறியாச் செய்கையும் அகந்தையும் ஒழியும்
ஆண்டவன் ஒருவன் அவன்தான் பேரியன்
இயற்கை யேன்பதும் இலையேன ஆகும்
இயற்கையின் இயலை இயல்பா நடத்தும்
இயற்கையுணரா இருபேருஞ் சக்தியை

---

மனதில் அன்பில்லாமலே ஒப்புக்கு ஒரு கடிதம் எழுதுவோமென்று எழுதி அழுகுகிறவர்களுக்கு மற்றவர்களும் அவ்விதமேதான் எழுதுகிறார்கள்.

நயமா அறிவர் ஞானில மாந்தர்—
திறமுடைச் செல்வன் செய்பெருந் தொழிலால்—
அறவழி கொண்டுள அருமை மகனே
அடிமைக் கடிமையாம் அடியேன் யானும்
படிமிசைப் பெரியனுய்ப் பண்ணுவன் இனிதே!

(என ஆசி கூறுகிறர் பக்கிரி. பால்நிரம்பிய
கலசத்தை நாயகனிடம் தந்து,—)

*பக்கிரி மனைவி:*—ஆண்டவ னுக்களி அன்பென இப்பால்
தோன்றலைக் காணீர் தலைவ!
ஈண்டு புதிதாய் இன்சுவை பெற்றே!

(ஜனார்த்தனரிடம் பாற்கலசத்தைத் தந்து,—)

*பக்கிரி:*—ஏற்பவன் பரிசை ஏற்பீர் பரிந்தே
நீரும் எங்களை நினைமின், தொழுமின்;
வேண்டுதல் ஒன்றால் யாண்டும் உலகு
காண்டகு காரியம் கணக்கின் முடிக்கலாம்
(எனவே,) பரவுந் தோத்திரம் பக்தியால் நிரம்பி
இரவும் பகலும் எண்ணுமேவ் வேளையும்
எம்பொருட் டிருத்தல் ஏற்புடைத் தாகும்
தம்பொருட் டாகிலும் தம்மவர்க் காகிலும்
நாடி ஒன்றையும் நோற்பதே இலையெனும்
ஆடினும் மாடினும் ஆவரோ உயர்வா
வேண்டுதல் இலையேல் மக்கள் தாமே!
வேண்டுவீர் ஆதலால் வேண்டிய ஆங்கே!

(மூவரும் திடீரென மறைகின்றனர்.—)

*ஏகநாதன்:*—ஈதோ மாயமாய் மறைந்தனர் இயல்பில்
மனிதர்க் கப்பால் மண்சுழல் கால்போல்!

(தான் சிறிது உண்டு பாலை ஏகநாதனுக்கு அளித்து—)

*ஜனார்த்தனர்:*—தூயவமிர்தம்!

*ஏகநாதன்:*—..............தொடேன் அதை: என்றும்
நாய்ப் பால் யானும் நாடிப் பருகேன்
மாயமா மறையும் நாயெனின் என்னும்?
பிச்சை யெடுத்துணும் இச்சகம் பேசுவோன்
தீண்டலும் மிகமிக ஈண்டிதில் அடிகாள்
உண்டு—

---

மாமியும் மருமகளும் ஒன்றுசேர்ந்து காபிபலகாரம் புசிக்கும் காட்சியிலும், பழய சாதம் புசிக்கும் காட்சி குடித்தனத்தைச் சிக்கனமுள்ளதாகத் தெரிவிக்கும். அதுவே கடன்படாத குடித்தனம். என்னும் சுலப ஜீவனமே மேல்.

ஜனார்த்தனர்:—...............மூட! ஓர்துளி பருகு—
விண்டிடும் உந்தன் விகாரம் அனைத்தும்
கண்டிடு வாயுன் காரிருள் கழிவதை!

(என ஏகநாதனைப் பாலருந்தக் கட்டாயப்
படுத்தல்—அருந்திய பின்—)

ஏகநாதன்:—அற்புதத்திலுமிது அற்புதமாமே!
நற்பயன் அடைந்தேன் நயமா இன்றே
மாசுள காவாம் மனமெனும் இடத்தில்
தேசுறு மலரெனத் திகழ்வது லகேன
உணரப் பெற்றேன்! ஓர்வழி தனியே!
கண்ணுதற் கடவுளும் கருணை யுருவும்
பெண்ணுரு வோடு பிறகே தண்ணிய
குணமுள காமதேன் குக்கலா
செல்வதை அறிந்தேன் சிறியேன் யானே.

(மற்றவை மற்றதில்)

டி. துரைப் பிள்ளை.

5821


# 31000—பேர்கள்.

ஆடவர்—மகளீர்—பாலர்—பாலகிகள்—யாவரும் அகமகிழ்ந்து வாசிக்கின்றனர். பல பத்திரிகைகள் வீட்டிற்கு வரினும் அவர்கள் முதலில் பார்ப்பது எது? அது அநுபவ ஞானக்களஞ்சியமாகிய "அமிர்த குணபோதினி"யைத் தான்.

இது 64-பக்கங்களுடன் கூடிய உயரிய விநோத விசித்திரப் பத்திரிகையன்றே?

ஐந்தாம் வருஷத்திலும் அன்புகூர்ந்து

"அமிர்த குணபோதினி"யை

ஆதரியுங்கள்.

ஐந்தாம் வருட சந்தாவை இன்றே அனுப்புங்கள்.



# ஹாஸ்ய சஞ்சீவினி

**வைத்தியரின் பிழைப்பு :—**

**நண்பர் :—**அந்த நோயாளியிடமிருந்து வாங்கிவந்த பத்து ரூபாய்க்கு நீங்கள் அங்கு சொன்னபடி கஸ்தூரி கோரோஜனை கலந்த மருந்து செய்யப் போகிறீர்போலும். அப்படியாயின் இன்று நீர் என்னுடன் வரமுடியாதா?

**வைத்தியர் :—**வருவதற்கென்ன தடை? அந்த ரோகஸ்தனுக்கு இனி மருந்து வேண்டியதில்லை. இன்னும் ஒரு மணி நேரத்தில் அவன் இறந்து விடலாம். அதைச் சொன்னால் பணம் தருவார்களா? வைத்தியர் குடும்பம் பிழைப்பதெப்படி? அவனவனுக்கு அவதி வந்தால்தானே பணம்கொடுக்கிறான்.

ஃ

**பிரியமான க்ஷேம விசாரிப்பு :—**

**அவன் :—**உனக்குத் தகப்பனார்தான் இல்லையோ?

**இவன் :—**அவர் சுகமேயிருக்கிறார். ஏன் சாகச் சொல்லுகிறாய்?

**அவன் :—**தாயார்தான் போய்விட்டார்களோ? அடபாவமே!

**இவன் :—**அப்படிச் சொல்லாதீர்கள். தாயாரும் சுகமே. உள்ளார்.

**அவன் :—**மறந்துவிட்டேன், தம்பிதான் இறந்ததுபோலும்! பாவம்!

**இவன் :—**இல்லை, தம்பியும் சுகமே. என்ன இப்படிப் பேசுகிறீர்களே!

**அவன் :—**அப்படியானால், அண்ணன்தான் போனானோ? அடடா!

**இவன் :—**இல்லை இல்லை. அவரும் சுகம்தான். விசாரித்ததுபோதும்.

**அவன் :—**அப்படியா சங்கதி; பின் யாரோ இறந்ததற்கு நீ வெகுவாகத் துக்கப்பட்டதாகக் கேட்டேன். எவருக்காகப் பாவம் நீ வருந்தினாய்?

**இவன் :—**ஆம், உங்கள் மனைவி மக்கள் சீக்கிரம் இறக்கப்போவதாய் ஜோஸ்யர் சொன்னார். அதற்காகத்தான் அங்கலாய்த்துத் துக்கப்பட்டேன்.

ஃ

**முன்னும் பின்னும் :—**

**விவாகத்திற்கு முன் தாய் :—**நான் இருக்கும்பொழுதே உனக்கு ஒரு விவாகம் நடந்துவிட்டால் என் கவலை தீர்ந்துவிடும். எப்படியாவது காரியம் ஆகவேணும்.

**குமாரன் :—**விவாகத்திற்கு முன் நாம் இருவரும் எவ்வளவோ ஒற்றுமையாயிருக்கிறோம். இந்த ஒற்றுமையை இனி இங்குவருகிறவள் கெடுக்காமலிருக்கவேண்டுமே. இப்போது வீட்டில் கலகமில்லை. இனி விவாகமானதும் கலகமானால் அதைவிட இப்போதுள்ள நிலைமையே மேல். நன்றாக யோசித்துச்செய்யம்மா.



விவாகத்திற்கு முன். விவாகத்திற்குப் பின்.

[விவாகம் நடந்துவிடுகிறது. பிறகு தொடங்கவேண்டிய மாமி மருகிச் சண்டையும் வந்துவிடுகிறது. "ஏண்டி சிறுக்கி உனக்கு இவ்வளவு ஆடமா" என்று மருகியை அடித்து அவள் கூந்தலைப் பிடித்து ஆட்டு ஆட்டு என்று ஆட்டுகிருள். அதைக் கண்டு தாளாமல் குமாரன் ஓடி வந்து விடுவிக்க முயல, அவனைப் பார்த்துத் தாய் ஏசுகிருள்.]

**விவாகத்திற்குப் பின் தாய் :—** அட பாவி! நேற்று வந்த சிறுக்கிக்குச் சிபாரிசு பேச வந்தாயே! அவள் வார்த்தை உனக்குச் சக்கரைக் கட்டியாய்ப் போச்சுதே! அவள் என்னை எவ்வளவு பேசினுள்? நீ கொடுத்த தைரியத்தாலல்லவா அவள் குதிக்கிருள்? அவள் பேசியதற்கு நீ ஏதுமே கண்டிக்கக் காணுேமே! முழுதும் அன்னிய மனிதனுய்ப் போய்விட்டாயே! அவளுக்கு உன்னைத் தாரை வார்த்து விடும்படி யாச்சுதே! அவளுக்கு அத்தனை வாய்த் திமிரா? என் வயிறு இப்படிக் கொதிக்கிறதற்குத்தானுடா உன்னைப்பெற்றேன்?

[என்று குமாரனின் முகத்திற்கு எதிரே கையைக் காட்டி இடித்துப் பேசுகிருள். அவனே இதென்ன கல்யாண சுகமா வென்று கன்னத்தில் கைவைத்தபடி கலங்கி நிற்கிருன்.

ஃ

**நாகரீகத்திற்கு உதாரணம் :—**

**வரதன் :—**நாகரீகம் என்ருல் என்னடா அப்பா?

**சுப்பன் :—**அதை ஒரு தளுக்கு, மயக்கு, ஒரு காசுக்கு உதவாத சங்கதி, மற்றவர் பிழைக்கும் வித்தை, ஏமாற்றுகிற ஜாலம், பொய் மூட்டை, புளுகுக் கட்டி, அடிமைத்தனம், பகல்வேஷம், சாமர்த்திய மோசடி, லாபம் ஸம்பாதிக்கிற தினுசு, சரக்கை விலையாக்குகிற மாதிரி, உள்ளுக்குள் பெரிய ஓட்டை, நாஜுக்கான நல்ல சரக்கு—என்று இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

**வரதன் :—** அதை ஒரு உதாரணத்தால் கொஞ்சம் விளக்கிக் காட்டு.

**சுப்பன் :—** இதோ பார் நாகரீக பல்பொடி. இதில் சீமைச் சுண்ணும்பும், அதில் கலந்த ஒரு வர்ணப் பவுடரும், ஒரு வாசனையுமே தவிர வேறேதுமில்லை. பழய காலத்துப் பற்பொடியோ 18, 19-கடைச் சரக்குகள் மருந்துகள் சேர்த்திடித்து, பழச் சாற்றிலும் புடத்திலும் வைத்துத் தயார் செய்யப்படுபவை. அதில் உள்ள நன்மை இதில் உண்டா? இவ்விதமே ஒவ்வொன்றும் இருக்கும். எல்லாம் மயக்கு. சாஸ்திர ஸயன்ஸ் ஆராய்ச்சி என்பது அது வேறு விஷயம். அது மோசக்காரர்களின் சங்கதியல்ல; மூளையின் ஓயாத கனத்த வேலை!

ஃ

**மாற்ருந்தாயின் அதிகாரம் :—**

**ராமன் :—**உன் வீட்டுச் சங்கதி எப்படியிருக்கிறது? மாற்ருந்தாய் முன்னைப்போலவே தானு? இப்போதாவது மாறிப் பிரியமாயிருக்கிருரா?

**சோமன்:—**தகப்பனுருடைய சொத்துக்களெல்லாம் கடனில் போய் விடவே, அந்த அம்மையும் சம்பாதிக்கிற என் கையை எதிர்பார்க்க வேண்டிய தாய்விட்டது. ஆண் குழந்தைகளின்றிப் பிறந்தது ஐந்தும் பெண் குழந்தைகளாய் விட்டதில் புலிபோலிருந்த அம்மா பூனைபோல் அடங்கி விட்டார்!

"அமிர்த குணபோதினி"யின்

# ஐந்தாம் பருவம்.

தமிழ்த்திருநாட்டின் தவப்பயனென்ன
அமிர்தச் சுவையுடன் ஆனந்தமூட்டி

நன்னய அனுபவ ஞானம் பெருக,
சொன்னயம் பொருணயம் துலங்கிட, சென்னையில்

அட்சய சித்திரை யதனிற் றேன்றி
பட்சமோ டெவரும் பாராட்டிடவே

சஞ்சரித்திடுமெம் சற்குண செல்வி
பஞ்சமப் பருவம் பலரும் வாழ்த்த

எய்துவள் அடுத்த இனிய சித்திரையில் :
மைதவி(ர்) அவளின் மாண்பை என்னென்கோ !

உலகவாழ்க்கையில் உற்றிடும் துன்பம்
பலபல அவற்றில் படுகின்ற பாடு

சொல்லுந் தகைத்தோ ? சோர்வை ஒழித்து
அல்ல(ல்) அகற்றிடும் அமிர்தச் சுவைமிகும்

குணபோதினி எரி கோடைப் பருவத்
தனல் வெயி(ல்) தனக்குத் தண்தென்ற(ல்) ஒக்தும் ;

இன்ப(ம்) மிகுந்திடும் இனியதோர் காலத்(து)
அன்பர் தமக்கு ஆனந்தம் ஊட்டும்

தண்ணிலவொளியில் சஞ்சல(ம்) அகற்றும்
பண்ணிசை கலந்த பண்பெனத் திகழும் :

இற்றை நாளளவும் எவரும் நடத்தாப்
பெற்றியோ(டு) இலங்கும் பெருமையும் உடைத்தே.

" அமிர்தினி " தனக்கு ஆண்டுக்கொருமுறை
தமிழரே ! நீவிர் தரு(ம்) ஒரு ரூபாய்

அனுபவ ஞான அரும் செல்வம் தரும் ;
தினசரி வாழ்வில் சிறந்ததோர் துணையாய்

உதவிடும் ; என்றும் உவகையைப் பெருக்கும் ,
புதுப்புது பொருள்கள் புகட்டிடும் ; உங்கள்

சிறுவரைச் செவ்விதில் திருத்தி நடத்தும் ;
குறுநகை மகளிரைக் குடும்ப வாழ்வதனில்

---

உத்தமர்களை எதிர்ப்பவர்களுக்கு நாசகாலம் வெகு ஸமீபத்தில் நெருங்கிக்கொண்டிருக்கும். ஆனல் அவர்கள் அதை அந்த சமயம் அறிவதில்லை,

சிறந்தவராகத் திகழ்வித்திடுமே !
திறந்து பக்கங்களைத் திருப்புந் தோறும்

பெருகிச் சென்று பேரின்ப(ம்) ஊட்டும்
அருமை உடையது "அமிர்தினி" தானே.

சொல்லிச் சொல்லிச் சோர்வை விளைக்கும்
புல்லிய இயல்(பு)எம் போதினிக்(கு) இலையே!

படிக்கப் படிக்கப் பகர் கனிச்சாறு
வடித்ததோ ? தேனே ? வண் கரும்பதுவோ ?

கண்டோ ? சீனியோ ? காமர் முக்கனியைக்
கொண்டு பிழிந்த குளிர் சா(று) அதுவோ ?

என்னத் திகட்டா இன்ப(ம்) அளித்திடும்
நன்னய(ம்) உடையள் நம் போதினியே!

பத்தியைப் பெருக்கிப் பகவனிடத்தில்
சித்தம் செலுத்தச் செய்வள் போதினியே!

அன்னவ(ள்) தன்னை அன்போடு(ம்) ஆதரித்(து)
உன்னத(ம்) உறுவித்(து) உயர்த்திய அன்பர்க்(கு)

என்இனிப் புகல்வ(து) ஏழையேன் பின்னும் ?
அன்னவ(ள்) ஐந்தாம் ஆண்டிலு(ம்) அவளை

பேரன்போடு பேணுத(ல்) அவர்க்குச்
சீரிய கடனெனச் செப்பவும் வேண்டுமோ ?

அவ்வளவோ(டு) அகம் அமையா(து) அனைவரும்
ஒவ்வொரு புதிய உத்தம நண்பரை

ஆர்வத்துடன் நம் அரிய பத்திரிகைக்குச்
சேர்விப்ப(து)அவர்க்குச் சீரிய தொண்டே!

தமிழ்ச்சுவை விரும்பும் தன்மையீ(ர்) எவரும்
"அமிர்தினி" தன்னை ஆதரிப்பீரே.

ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை.

---

ஒரு மருந்தைக் குறிப்பிட்டு அதையே தருமாறு வைத்தியரைக் கட்டாயம் செய்கையில், அவரும் ஒப்பித் தந்தால்தான் உண்ணலாம். அந்த ஔஷதம் அந்த ரோகத்திற்குத் தரும் வழக்கமில்லை யென்று கூறிவிட்டு உன் இஷ்டம் என்று அந்த மருந்தைத் தந்தால்—மருந்து நமது கைக்குக் கிடைத்துவிடினுங்கூட அதை யுண்ண மனம் ஒப்புமோ ?

ஏதோ வீட்டில் உள்ளதை யுண்டுசெல்பவர் எத்தனைமுறை வரினும் அது ஒரு சிரமமாகப்படுவதில்லை. ஒரு தனியான விசேஷித்த உபசரிப்பு செய்யவேண்டியவர்கள் வரின் அப்போதுதான் கஷ்டமாகிறது. அந்த ஒருவருக்காக வீடு முழுதுக்கும் செலவிட்டுச் செய்ய, அந்த ஒருவரோ இலையில் வைத்ததை அப்படியப்படியே விட்டுவிட்டு உண்ணாது எழுந்துவிடுகிறார்!

# ஜெயகல்யாணி

(முன்பக்கம் 579-லிருந்து.)

ஜெயகல்யாணியைக் கண்டதும் நாணுசாஸ்திரி "வா அம்மா வா, உன் கல்யாணத்தைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். எப்படியாவது இந்தப் பங்குனியில் நடத்திப்போடவேணும். இல்லாவிடில் ஊர் நகைக்கும். சாரதா சட்டம் வந்துவிடும். பொட்டபாளையம் விசுவநாதய்யரின் குமாரன் நல்ல குணசாலி. நீ என்ன அம்மா சொல்லுகிறாய்" என்றார்.

ஜெயகல்யாணி :—அது கிடக்கட்டுமப்பா. எப்பொழுது பார்த்தாலும் உங்களுக்கு இதுவே பேச்சு ! வேறு பேச்சு இல்லையா ? இனி அ[illegible]யாவின் கூட்டத்திலோ இதைத்தவிர வேறு சங்கதியே யில்லை. அவள் திரண்டாள்—இவளுக்கு சாந்தியாச்சு— அந்த மீனா முழுகாதிருக்கிறாள்—ஆ[illegible]தம்—என்கிற சமாசாரங்கள் தான். எனக்குப் பசிக்கிறது, பிறகு பேசலாம்.

ஃ

ஜெயகல்யாணி தன் தந்தையுடன் உட்கார்ந்து புசித்து, அவர் இலையைவிட்டு எழுந்திருக்குமுன்னம் தான் எழுந்து கை கழுவிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு ஓடிவிட்டாள். நாணுசாஸ்திரியும் பிறகு பேசிக்கொள்ளலாமென்று தமது வைதீக காரியங்கள் சம்பந்தமாக வெளியிற் சென்றார். தை மாதத்தில் ஊர் எங்கும் கல்யாணங்கள் நடந்தன. ஒரே முகூர்த்தத்தில் ஏழெட்டு கல்யாணங்கள் ஒரே வீட்டில் நடப்பதாகவுமாயின. சாஸ்திரியாருக்கு நல்ல வரும்படி. அவர்தான் கல்யாணத்துக்கு முதல் புரோகிதர். அத்துடன் ஒவ்வொரு விவாகத்தின்போதும்—"உமது பெண்ணுக்கு எப்பொழுது விவாகம் ?" என்று பலர் அவரைக் கேட்பதும், அதற்குப் பதிலாக அவர் "பங்குனியில் கட்டாயம் முடிந்துவிடும்" என்பதுமாக இருந்தார்.

ஃ

தையும் சென்றது மாசியும் வந்தது. பங்குனிக்கு ஆறுநாட்களே இருந்தன. ஊரில் சாஸ்திரியாருக்கு உண்டான அவமானம் பொறுக்க முடியவில்லை. "அவர் ஏப்பிரல் மாதம் முதல் தேதியை மெதுவாக எதிர் நோக்கித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார் ; பக்கா ஆசாமி" என்கிற பேச்சுகள் அதிகரித்துவிட்டன. இரண்டு கல்யாணங்களில் அவருடைய புரோகிதமே வேண்டாமென்று தள்ளிவிட்டு வேறொருவரைக் கொண்டு நடத்

---

ஒருவனைச் சென்றால் எவரும் அவனது ஒரு பெட்டியை வைத்துக் கொள்ள இடம் தந்து, அவன் உண்ணவும் உறங்கவும் இடம் தருகின்றனர். மனைவிமக்களுடன் செல்லினோ வாடகைக்குக் குடி வருகிறீர்களா என்கின்றனர்.

தியதில் இன்னும் அதிகத் தலையிறக்கமாய்ப் போய்வி... ருக்குக் கிடைத்த சவுக்கடிகள் சொல்லி முடியாது. ஆத்திரத்து... க்கு வந்தார். அன்று சனிக்கிழமையானதால் ஜெயகல்யாணியும் வீட்டி... ந்தாள்.

நாணு சாஸ்திரி:—ஊரெங்கும் என்னைப்பற்றிக் கொல்லென்றாய்விட்டது. குத்து வார்த்தைகள் சகிக்கத் தாளவில்லை. தொந்தி தீக்ஷிதர் பலருக்கு முன்பு என்னை வைத்துக்கொண்டு, "ஓய் நாணு! நீ இந்தப் பங்குனியில் உமது பெண்ணுக்கு நடத்தாவிட்டால் உமது ஆத்தில் ஜலபானம்கூடச் செய்ய மாட்டேன்" என்று பேசிக் கேவலப்படுத்தினார். அந்தப் பொட்டபாளயத்தை விட்டால் வேறு வழியில்லை. வரதக்ஷிணைக்குப் பத்திரம் எழுதிக்கொடுத்து விடலாம். (இந்த சமயம் தொந்தி தீக்ஷிதரும் அங்கு வந்துசேர்ந்தார்.)

ஜெயகல்யாணி:—இன்றைக்குப் பத்துமணிவரையில் பள்ளிக்கூடமிருந்தது. தலைமை உபாத்தியாயனி அம்மாள் தங்களை அவாள் ஆத்துக்கு வரச்சொன்னார்கள். நாளைக்குத் திதியாம். கோதானம் பண்ண உங்களுக்கென்று நல்ல பசுவொன்று உயர்ந்த விலையில் வாங்கியிருக்கிறார்களாம்.

நாணு சாஸ்திரி:—என்ன அம்மா, நான் கல்யாண சங்கதியைச் சொல்ல வரும்போதெல்லாம் நீ வேறு சங்கதியை ஆரம்பித்துவிடுகிறாயே. உபாத்தினியம்மாள் மிக்க தயாளு. அந்த மகராசிக்கு என்ன குறைவு?—புருஷனே டிப்டிகலெக்டர். எவ்வளவோ பணம் குவிந்துகிடக்கிறது.

தொந்தி தீக்ஷிதர்:—ஓய் நாணு! உமது பாடு யோகம்தான் காணும்; வீட்டிற்குப் பசுவும் வரப்போகிறது. ஓயாத இருமல் எனக்கு. என்னையும் கொஞ்சம் பார்த்துக்கொள்ளு. உன் புண்ணியத்தால் போனமாதம் அவர்கள் வீட்டில் நடந்த திதியில் நல்ல போஜனம் ஏற்பட்டது. ஆஹா! என்ன உயர்தரமான சமையல், எவ்வளவு பக்ஷணங்கள்! தக்ஷிணையும் ஆளுக்குப் பத்துரூபா நோட்டாகவே கிடைத்தது. நாளைக்கு என்னையும் கவனித்துக்கொள்ளு.

நாணு சாஸ்திரி:—ஆகா! நீங்கள் வருவதற்கு என்ன தடையா? சென்ற ஒரு வருஷகாலமாக நமது குழந்தைமூலம் பரிச்சயமாகி அந்த அம்மாள் வீட்டில் நல்ல புசிப்பு. நல்ல தக்ஷிணை. நானும் என் மனைவியும், கல்யாணியும் கட்டிக்கொண்டிருப்பவைகளும் அந்த அம்மாளின் தானம்தான்.

விசாலாக்ஷி:—தக்ஷிணைகளும், புசித்த புசிப்புகளும் பிறகு இருக்கட்டும். நாளைக்கு யாருக்குத் திதி என்று உங்கள் பெண்ணைக் கேளுங்கள்.

ஜெயகல்யாணி:—அம்மாவுக்கு வாய் சும்மா இருக்கிறதில்லை. யாருக்குத் திதியானாலென்ன? தக்ஷிணையும் போஜனமும் சரிவரக் கிடைத்தால் அதுதான் லாபம். மற்றது எப்படியானாலென்ன? நமது இஷ்டத்துக்குத் தகுந்தபடி ஒரு ஸ்மிருதியை அதற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாம்.

தொந்தி தீக்ஷிதர்:—நமது கல்யாணிக்குப் பிராயம் கொஞ்சமானாலும் நல்ல புத்திசாலி. அவள் சொன்னது ரொம்பவும் சரி. திதியைப்பற்றி நமக்கு என்ன கவலை? அது எவருடையதானாலென்ன? தக்ஷிணையே முக்கியம்.

---

அவ்விடத்தில் பெண் எடுத்த பிறகு இனி யார் இனியார்? யாவரும் ஆரம்பத்தில் இனிப்பவர்களாகவே தோற்றுவர். பிறகோ——?

[illegible]திரி :—திதி சங்கதி இருக்கட்டும். நமது கல்யாணியின் விவாக[illegible]யை இந்தப் பங்குனியிலேயே முடிக்கவேணும்.

[illegible]லாக்ஷி :—பொட்டபாளையம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. எனக்கு ஒரு திதி செய்துவிட்டு ஹாயியாக மனம்போல் நடத்திக்கொள்ளுங்கள். என் நகைகளையெல்லாம் விற்றாகிலும் தக்க இடமாகப் பாருங்கள்.

ஜெயகல்யாணி :—நாளைசாயந்திரம் அண்ணாதான் வருகிறாரே, எல்லாம் அவரை வைத்துக்கொண்டு பேசுவோமே. அதற்குள் என்ன அவசரம்? நாளைக்குக் கோதானம் கிடைத்துப் பசு வருமே, எந்த இடத்தில் கட்டுகிறது? தாதாவுக்கு இருமல் என்று சொன்னார். ஒரு வாரம் வரைக்காவது கால்படி பால் அவருக்கு சும்மா கொடுக்கவேணும். அதில் ஜலம் சேர்க்கவேகூடாது.

நாணு சாஸ்திரி :—நான் விவாக சங்கதியையெடுத்ததும் கல்யாணி கோதானக்கதையை மறுபடியும் ஆரம்பித்துவிட்டாள். சரி, நாளைக்கு அவன் வந்ததும் எப்படியாவது பேசி முடிவாகிவிடவேண்டும். பங்குனிமாதம் 18-ம் தேதிக்குள் முடியவேண்டும். அடுத்த நாள் ஏப்பிரல் மாதம் பிறந்துவிடுகிறது. சட்டமும் ஜெயிலும் வந்துவிடுகிறது. பெரிய தர்ம சங்கடம்.

விசாலாக்ஷி :—ஏப்பிரல் மாதம் பிறந்ததும் கல்யாணங்களே இனி நடக்கமாட்டாது. அப்படித்தானே?

ஃ

இந்த ஸம்பாஷணைக்கு மறுநாள் நாணுசாஸ்திரியாரும் தொந்தி தீக்ஷிதரும் உபாத்தினி அம்மாள் வீட்டிற்குச் சென்றார்கள். டிப்டிகலெக்டருடைய பந்துவுக்குத் திதி நடந்தது. நாணு சாஸ்திரிக்கு நல்ல ஜாதி பசுமாடு தானமாகக் கிடைத்தது. கல்யாணி, விசாலாக்ஷி எல்லோரும் வந்திருந்து திருப்தியாகப் போஜனமுண்டனர். எல்லோரும் தாம்பூலம் தரித்துக்கொண்டிருக்கையில், டிப்டிகலெக்டர் உமது பெண்ணுக்கு எப்போது விவாகம் என்று நாணு சாஸ்திரிகளை வினவினர்.

நாணு சாஸ்திரி :—இம்மாதம் 18-ம் தேதிக்குள் ஆகவேண்டும். இல்லாவிட்டால் என் ஆத்தில் எவரும் ஜலபானம்கூடச் செய்யமாட்டார்கள்.

டிப்டி கலெக்டர் :—என்ன குற்றத்திற்காக இந்தத் தண்டனை?

நாணு சாஸ்திரி :—18-ம்தேதி கடந்தால் பிறகு விவாகசட்டம் வந்துவிடுகிறது. ஜெயிலுக்கு யார் போகிறது? பெண்ணும் 14-வயதுக்குமுன் பெரியவளாய் ஜாதிப்பிரஷ்டையாகிவிடுவாள். குடும்பம் குட்டிச்சுவராய் விடுமே. பிறகு வீட்டிற்கு எவருமே வரமாட்டார்களே!

தொந்தி தீக்ஷிதர் :—ஜாதிப்பிரஷ்டாள் வீட்டில் நான் ஜலபானமும் செய்யமாட்டேன். அவர்களின் மூச்சே என்மேல் படக்கூடாது.

டிப்டி கலெக்டர் :—இவ்வளவு வைதீகமாய்ப் பேசுகிறீர்களே! இன்று திதி எவருக்கு நடந்தது தெரியுமா?

---

தங்களின் சரித்திரத்தைத் தாங்களே எழுதத் தொடங்குகின்றனர் சிலர். அவர்களுக்கு அது ருசிக்கிறது; மற்றவர்களுக்கு அது அத்தனை ருசிக்கிறதில்லை.

**நாணு சாஸ்திரி** :—தங்கள் பந்துவுக்குத்தான்.

**டிப்டி கலேக்டர்**:—இல்லை, என் மனைவியாகிய உ... முதல் பர்த்தாவுக்கு! உபாத்தினி என் தமக்கையின் பெண். அவளுக்கு ... வயதில் விவாகம் நடந்து ஒன்பதாவது வயதில் கணவனை இழந்துவிட்டாள். என் தமக்கையின் துயரத்தைப் பார்க்கச் சகியாமல் அவளை விதவாவிவாகம் செய்து கொள்ள ஒப்பினேன். ராஜமகேந்திரவரத்தில் எங்கள் விவாகத்தை ராய்பகதூர் வீரேசலிங்கம் பந்துலுகாருவின் மாளிகையில் நடத்தினர்கள். பந்துலுகாரு எவ்வளவோ விவாகங்களை இதைப்போல் நடத்திப் பால்ய விதவைகளுக்கு மீண்டும் மஞ்சள் குங்குமம் புஷ்பம் கிடைக்கச் செய்தாராம். விதவா விவாகத்தைவிட ருதுவான பின்பு செய்யும் விவாகம் தாழ்ந்ததல்ல. பிராமணரல்லாதார் ருதுமதி விவாகம் செய்துகொண்டு வாழவில்லையா? விதவாவிவாகம் செய்துகொண்ட என் இல்லத்திலேயே நீங்களும் இன்னும் அநேக வைதீகர்களும் போஜனமும் தக்ஷிணைகளும் பெறவில்லையா? தாசி வீட்டுக்குப் போக—பொய் சாக்ஷி சொல்ல—ஸ்வாமி சொத்துக்களை யுண்டு ஜீரணம் செய்ய—மற்றொருவரின் குடிகெடுக்க—புகையிலை மது இவற்றை உபயோகிக்க—இவற்றிற்கெல்லாம் சாஸ்திர ஆதார மிருக்கும்போது ருதுமதியானதற்குப் பிறகு விவாகம் செய்யமட்டும் சாஸ்திரமில்லையா?

ஃ

டிப்டிகலெக்டரின் வார்த்தைகளைக் கேட்டதும் நாணுசாஸ்திரிகளின் வயிற்றில் இடி விழுந்தது. தொந்தி தீக்ஷிதர் அடடா இந்தப் பிரஷ்டன் வீட்டில் புசித்தோமே என்று நாணினர். மௌனமாக விடைபெற்றுத் திரும்பினர். நாணு சாஸ்திரி பசுவை விட்டுவிடவில்லை. அது 150-ரூபா பெறக்கூடிய உயர்ந்த ஜாதிப் பசு. எங்கேயாவது விட்டுவிட மனம் வருமா? பசு லக்ஷ்மிக்கு சமமாயிற்றே. வலியவந்த சீதேவியை வேண்டாமென்பார்களா?

ஃ

வீட்டிற்கு வந்ததும் நாணுசாஸ்திரிகள் எப்படி இதை நீ சொல்லாமலிருந்துவிட்டாய் என்று விசாலாக்ஷியை வைதார். ஜெயகல்யாணி எத்தனையோமுறை சாப்பிட்டதுதானேயப்பா என்றாள். இரு உன் ஆனுவத்திறகு அந்தப் பொட்டபாளையத்தையே முடிக்கிறேன் என்று சாஸ்திரிகள் குதித்தார். பசுதானம் மட்டும் பெற்றுக்கொள்ளலாமாம்; சாப்பிடக்கூடாதாம் என்றாள் விசாலாக்ஷி. சாஸ்திரிகளுக்கு இன்னும் அதிக ஆத்திரமாயிற்று. அப்பொழுதே வேஷ்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு தொந்தி தீக்ஷிதருடன் பொட்டபாளயத்துக்கு ஆத்திரத்துடன் புறப்பட்டுச் சென்றார்.

ஃ

பொட்டப்பாளையம் விஸ்வநாத ஐயரின் நிலைமையோ பெரிய தர்ம சங்கடமா யிருந்தது. அவர் ஒரு பழய நூற்றாண்டின் பரமாத்மா. வேத சாஸ்திரங்களை மனஸ்பூர்வமாக நம்பி நடப்பவர். அவருக்கு 4-6-8-10-12-

---

ஒரு முக்கிய விஷயத்திற்குக் கடிதத்தை எதிர்பார்க்கையில் வரும் கடிதமோ முக்கால் பாகம் வீண் சங்கதிகளா யிருக்கின்றன. கடைசி நாலு வரியோ—அதில் உப்புமில்லை, புளியுமில்லை, எதிர்பார்த்த சங்கதியுமில்லை.

வயதில் ... களுண்டு. சட்டம் வந்துவிட்டால் ருதுமதி விவாகம் செய்ய ... என்று பயந்து முறையே 18-30-49-50½-64-வயதுள்ளவர்களு... ண்டிய வரதக்ஷிணைகள் கொடுத்துத் தமது ஐந்து பெண்களையும்



விவாகம் செய்துகொடுத்துவிட்டார். பணத்துக்கு மிக்க கஷ்டம். தமது குமாரனுக்கு எவராவது 600-ரூபாய் வரதக்ஷிணை தந்தாலும் அவர்களுக்கு விற்றுவிடத் தயாராக இருந்தார். நாணு சாஸ்திரி இவற்றையெல்லாம் முன்பே அறிந்திருந்தாரானதால் 500-ரூபாய் வரதக்ஷிணை பேசித் தமது பெண்ணுக்கு முடித்துப் பங்குனிமாதம் 3-ம்தேதி முகூர்த்தம் நடத்த நிச்சயித்துவிட்டார். பொட்டபாளையத்தார் வட்டபாளையத்துக்கு வருகிறதென்றும், அந்தக் கல்யாணத்தைப்பார்க்க அழைத்துவருவதுபோல் ஜெயகல்யாணியை இட்டுவந்து திடீரென மாங்கல்யத்தைக் கட்டிவிடுவதென்றும் ரகசியத் தீர்மானங்கள் நடந்தேறின. விவாகத்திற்கான ஏற்பாடுகளையெல்லாம் வட்டபாளையத்தில் செய்துவிட்டுப் பங்குனிமாசப் பிறப்பன்று சாஸ்திரிகள் தமது வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

ஃ

வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. சாஸ்திரிகள் எங்கேயாவது போயிருப்பார்களென்று திண்ணையில் உட்கார்ந்தார். பக்கத்து வீட்டு அம்மாள் சாஸ்திரிகளிடம் வந்து வீட்டுச் சாவியைக் கொடுத்து, உங்கள் குமாரன் வந்து விசாலாக்ஷியையும் கல்யாணியையும் இட்டுக்கொண்டு சென்னைக்குச் சென்றான் என்று தெரிவித்தாள். சாஸ்திரியார் எப்படிப் போகலாம் என்று துள்ளினார். அன்றிரவு மெயில் சென்னைக்குச் சென்று கல்யாணியை அழைத்து வந்துவிடுவதென்று தீர்மானித்தார். அப்பொழுது தபாற்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்துதர, அதைப் பிரித்துப் பார்க்கையில் பின்வருமாறு இருந்தது.

பம்பாய், 11-3-1930.

அன்புள்ள தந்தையவர்களின் பாதபத்மங்கட்கு ஜெயராமன் சாஷ்டாங்க நமஸ்காரங்கள். அம்மாவும் தங்கையும் இங்கு சுகமே. தாங்கள் கல்யாணிக்கு விவாகத்தை நடத்தாதிருக்கவே தங்கள் கண்கட்கு எட்டாத இவ்விடத்திற்கு அழைத்துவந்துவிட்டேன். எம். ஏ. பரீக்ஷையில் தேறிய என்

---

"மிக்க களைப்பு, வரும் வழியிலேயே வயிற்றுப் போக்கு, கவனிப்போரில்லை. தத்தளித்து வெயிலால் தபித்துப் பாதிப் பிராணனோடு வர, வீட்டிலோ சிடுசிடுப்பு. அநாதையாய் கிடக்கின்றேன். தெய்வமே துணை."

நண்பனுக்கு அவளைப் பேசியிருக்கிறேன். அவன் ஸிவில் ... ீக்ஷைக்காக லண்டனுக்கு நேற்றுப் புறப்பட்டுச் சென்றான். த... திவரும் வரையில் கல்யாணி பாடசாலையில் வாசித்தபடியே இருக்கட்டு... வற்புறுத்திவிட்டுச் சென்றான். அவன் பெற்றோர்கள் இப்பொழுதே ...யாணிக்கு இரண்டாயிரம் ரூபாய் நகைகள் போட்டுத் தங்களிடமே வைத்துக்கொள்ளப் பிரியமாயிருக்கிறார்கள். ஏப்பிரல் மாதம் பிறந்தபிறகு நாங்கள் சென்னைக்கு வந்து எங்கள் விலாஸத்தைத் தெரிவிக்கிறோம். அப்போது தாங்களும் வரலாம். தாங்கள் பார்க்கப்போன பொட்டபாளையத்தைவிட, நான் பார்த்த இடம் எவ்வளவோ உயர்வானதாகும். அம்மாமீது தப்பிதமில்லை. எல்லாம் நான் செய்த ஏற்பாடுதான். என் மீதே கோபியுங்கள். நீங்கள் பொட்டபாளையம் போனதும், நான் அன்றுமாலை வீட்டிற்கு வர, கல்யாணி என்னைக் கட்டிக்கொண்டு கதறினாள். பொட்டபாளையம் வேண்டாம் அண்ணா என்றாள். அம்மாவும் அழுதாள். அந்தக் காக்ஷி உங்கள் கல்மனத்தை உருக்காவிட்டாலும் என் மனத்தை உருக்கிவிட்டது. அதன்பிறகு நான் செய்த காரியங்கள் தப்பா?—சரியா?—என்பதை நீங்களே யோசித்துப் பார்க்கலாம். பம்பாய்க்கு வந்து நீங்கள் எங்களைக் கண்டுபிடிக்க முடியாது. மன்னிக்கப் பிரார்த்தனை.

அன்புள்ள குமாரன்,

**ஜெயராமன்.**

ஃ

சாஸ்திரிகள் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தார். எத்தனை முறை வாசித்தாலும் முன்பு படித்த சங்கதிகள்தான் கடிதத்தில் இருந்தன. இந்தப் பயலுக்கு எவ்வளவு திமிர்! என்னை எவ்வளவு அவமானம் செய்து விட்டான்! என்று குதித்தார். யாரிடம் குதிக்கிறது?—எவரைத் திட்டுகிறது? —எங்கே கோபிக்கிறது? எல்லாம் தன் மனுஷ்யர்கள் பக்கத்தில் இருந்தால் தானே முடியும்? அவர்கள் தூரப்போன பிறகு ஒண்டி மனிதனால் என்ன முடியும்? அவன் ஒடுங்கி அடங்கிப் போன நொண்டி மனிதன் தானே! சாஸ்திரியார் கன்னத்தில் கை வைத்தபடி தெருத் திண்ணையில் சிவனே என்று உட்கார்ந்திருக்கிறார். அவரைத் தேற்றிச் சமாதானப் படுத்த எல்லோரும் வாருங்கள், அவரிடம் போகலாம்.

தெய்வம்

அந்தந்த மதத்தினருக்கேற்பப் பல்வேறு வடிவுகளையுடையதாகும். இவ்வாறு வடிவுகள் மல்கிக் கிடப்பது அத்தெய்வத்தின் அருட்செயல். அவ்வாறு உள்ள உருவ பேதங்களுள் கற்புடைய பெண்டிர் தம்கொழுநனைத் தெய்வ வடிவிலே கண்டு, தெய்வமும் தன் நாதனும் ஓர் உருவாக விளங்குவதை உணரும் அறிவுபெறவேண்டும். தெய்வம் வேறு தன் கணவன் வேறுஎன்று கொள்ளாத மனோபக்குவஞ் உறுதியேற்ற மகளீர் உத்தம பத்தினிக் கடவுளாவர்.

## ...ப்பை பள்ளியெழுச்சி!

...ழுது புலர்ந்தது ; எழுந்தது பசியும்
பொன்னெனக் கலங்களும் துலக்கப்பட்டனவே;
அழுவன குழந்தைகள் பசிபசி யெனவே;
அரிவை என் முகத்தினை நோக்குகின்றனளால்;
குழுமினர் உறவினர் ; சிலவுகள் பலவாய்க்
கூடின ; இனிநினைத் தொடகில னெனவே
பழு(து)அறு பெட்டியில் தொழுதுயான் வைத்த
பணப்பையே! பள்ளியெழுந்தருளாயே!

**2**

புளி இலை ; விறகு இலை ; சீரகம் இலையே ;
புல்லிய கடுகுமே இல்லையிம் மனையில்,
தளிகைக்கு(ம்) அரிசி இங்கில்லையே முதலில் :
சமைய(ல்) இங்(கு) எவ்வகை நடப்பதிந்தினமே!
வெளியில் வாங்கிய கட(ன்) அளித்திடு மெனவே
வேறுபல் குறைகளும் கூறுவள் மனைவி ;
பளிங்கெனத் துலங்கிடும் பணம் பலநிறைந்த
பணப்பையே ! பள்ளியெழுந்தருளாயே !

**3**

நேருநல் கடன் தந்த ஒருவர் வந்(து) இன்றே
நெருக்குகின்றார் அதைப் பொறுக்கில(ன்) இன்றே
'தெருவினில் கூவிச்சென் றிடுகின்ற(ன்) ஒருவன்
செல்வதை வாங்கித் தந்திடுகெ'ன சிறுவர்
பெருவியப்புட(ன்) எனை வருத்துகின்றனரால் :
பேதையேன் உறுதியும் தளர்ந்த(து) இங்கின்றே
பருமையில் குறைந்திடும் பருவம் வந்ததுவே!
பணப்பையே! பள்ளியெழுந்தருளாயே!

**4**

அரியசி(ல்) அன்பர்கள் அடைந்தனர் இன்றே,
அவ(ர்) அகங்களி(ல்) உப சரிக்கப்பெற்றனன் யான்
பெரிதும் பன்முறைகளில் : அதை நினைந்திடவே
பெருகிடு(ம்) அன்பெனக்(கு) அவரிடம் மிகவே!
பிரிதியோ எனைவிட்டு அருமைகொள் பொருளே
பின்னு(ம்) என் சிலவுகள் ? இனி இலையெனவே
பரிவுடன் நேற்றிரா பள்ளியிற் படுத்த
பணப்பையே! பள்ளியெழுந்தருளாயே!

---

*அது வேண்டாமென்று விலகிப்போவோரிடம், அதைக் கொடுக்க மாட்டேனென்று சொல்லுகிறவர்கள் நீடித்துச் சண்டைசெய்ய இயலாது.*

## 5

அருளிலார்க்(கு) அவ்வுல(கு) இல்லாத விதம்போ...
அரும்பொருள் பெறுகிலார்க்(கு) இவ்வுலகிலையே
பெருமைஉன் கருணையால் பெறுமதே அலவோ!
பேரன்பே! பிரிகின்ற காலம் வந்ததுவே!
பெருகின துறைகளும் முறையீடும் பலவாய்
பே(சு)அவை துறையா நீ பெயர்கிலை எனிலே;
பருமையிற் குறைந்திடும் பருவம் வந்ததுவே!
பணப்பையே! பள்ளியெழுந்தருளாயே!

## 6

எதுவும் பலபல இலையென் றிடுமொலி எழுகின்றது நிதமே!
பதுமம் புரைமுகம் துவியும்படி உளள் பணிநின்றிடு மவளே!
அதுவன் றுயர்தா அக(ம்) நொந்திடுமதை அறைகின்ற தெவ்விதமே!
ஏதுமன் றயவினி(ல்) இனிதிங்கமைவுறு(ம்) எழு(ம்) எம் பணமுடியே!

ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை.


## நித்த நித்தம் அரைக்காசு 0—0—½

தினம்விட்டு தினம் ஒரு காசு எடுத்துவைப்பினும் அது வருஷத்தில் ஒரு ரூபாயாகிவிடும். 182-காசு ஆகிவிடும். பத்து காசு அத்துடன் சேர்த்து "அமிர்த குணபோதினி" யை வாங்கி ஆநந்தப்படுங்கள். மூக்குப்பொடி, சுருட்டு, வெற்றிலை, காபி இவைகளுக்குத் தினமும் எவ்வளவோ செலவிடுகிறீர்களே! "அமிர்த குணபோதினி"க்கு தினம் அரை தம்மிடி (0-0-½) கொடுக்கக்கூடாதா? அரை தம்மிடி தந்தால் உங்கள் குடும்பமும் வீடும் ஞானஜோதிமயமாக ஆகிவிடுமே. "அமிர்த குணபோதினி"யை வாசிப்பவரைப் பேச்சில் வெல்ல முடியுமோ? அவர்கள் பேசுவதும் அழகாய் இருக்குமே! அது தரும் பக்குவம் பகரவுங் கூடுமோ?

அமிர்தத்தை ஆவலுடன் பெற்றிடுக.


நண்பர்களாயுள்ளோர் பரஸ்பரம் கடிதங்கள் எழுதுவதை நிறுத்திக்கொள்ளப் பழகுவதும், எப்பொழுதோ நூறு கடிதத்திற்கு ஒரு கடிதம் பதில் தருவதும் வழக்கமாகிவிடின், அதுபோழ்து, தாய்வீட்டுப் பிரிவை மறந்துவிட்ட ஒரு பெண்ணின் நிலைக்கு அவர்கள் வந்துவிட்டனரென்பது கருத்து. ஆனால் அன்பு விட்டவரில்லை யென்றும் சொல்லப்படுகிறது. அது உண்மையா?

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

REGISTERED TRADE MARK

# டக்கு, டமாரம், காக்கா பிடிக்கிற வித்தைகள்!



**வா**ங்கோ, வாங்கோ? எப்போ வந்தாற்போலே! எங்கே இருக்கிறாப்போலே! எவனுக்கு சுண்ணாம்பு தடவுகிறாப்போலே! கண்டு நெடு நாட்களானாற்போலே! அத்தி பூத்தாற்போலே! ஆலமரம் காய்த்தாற்போலே! அப்படியாக எதிர் பட்டாப்போலே! ஆ! ஆ! ஆ! ஊ ஹூ! ஹூ! ஹூ! ஊரிலே, தெருவிலே, வீட்டிலே, உள்ளறையிலே, கட்டிலிலே—எல்லாரும் க்ஷேமமா? அவங்க க்ஷேமமா?—இவங்க க்ஷேமமா?—அந்த வைத்த செடி கொடி க்ஷேமமா? ஆ! அந்த சங்கதி நினைவிலிருக்கா—அதை நான் மறக்கவே யில்லை! எத்தனையோ தடவை கடிதம் எழுதப் பார்த்தேன்—எங்கே பல தொல்லையிலே பொழுது சாயவில்லை! உங்க அம்மாஞ்சிக்கு என்னவேலை? உங்க அத்தாஞ்சிக்குச் சம்பளம் உயர்ந்ததாமே? சம்பளம் எவ்வளவு?—மேல் வரும்படி என்ன இருக்கும்? ரொம்ப சந்தோஷம்! உங்களைக் கண்டதும் உடம்பெல்லாம் குளிர்ந்து போச்சுது! ரொம்ப நாளாய் பார்க்கணுமே என்று எவ்வளவோ ஆசை! சாமியே இப்படி நம்மை இந்த முச்சந்தியிலே முடக்கிலே சந்திக்க வைச்சுது! ஆஹா ஹா ஹா! என்று இழிக்கிற தென்னாலிராமர்கள் 'டக்கு' பள்ளிக்கூடத்தில் நன்றாகத் தேறிய புள்ளிகள்! இவர்கள் பேச்சுகளில் இனிப்பே தவிர காரியத்துக்கு உதவார்கள்! செய்யக்கூடிய உதவியும் காசு காட்டாவிட்டால் செய்யார்கள்! மெத்த மெத்தப்பிரியம்போலப் பசப்புகிறது! ஆண்டவனே! இந்த டக்கு பேர்வழிகளிடத்தில் உலகம் மயங்கிப்போகிறதே!

ஃ

வெகு வெகு வெகு மிகு மிகு மிகு அன்போடும் வாருங்கள் வாருங்

---

தன் கைச்செலவின்றிப் பிறர் வீட்டில் உண்ணுகையில் தன் பணம் மிச்சமாகவேண்டுமன்றோ? மிச்சமாவதற்குப் புதிதாகப் பணமே—வரவே கிடைப்பதில்லை. மிச்சப்படினும் அதற்கு ஒரு செலவு நேர்ந்துகொள்கிறது.

கள் என்கிறது! உடனே நாற்காலி யென்ன, சோபா என்ன, விசிறி என்ன, புன்னகை தவிழ்ந்த முக மென்ன, சுடச்சுடக் காப்பி என்ன, பத்து வகைக் கறியென்ன, பாங்கான சுமையல் என்ன, வெண்ணெய் காய்ச்சிய நெய் என்ன, வெகு பிரமாத மான ஆரவாரம்! அதில் மயங்கியவன் வேண்டிக் கொள்கிறார்களே என்று அந்த நாள் முழுதும் அங்கு தங்கி விடுகிறது. மறுநாளும் வருகிறது! அவ்வளவுக்கு நேற்று உபசரித்த மூஞ்சி இன்றைக்கு வேறு மாதிரியில் திரும்பிக் கொள்ளுகிறது! இதென்ன இன்னும் போகாமல் இருக்கிறானே! இன்றைக்கும் குந்தி விடுவான்போ லிருக்கிறதே! தொலைகிறது போறக் காணோமே! இவனுக்குக் கொட்டி யளக்க யாராலிருக்கிறது என்று வெளியில் முணுமுணுக்கிறது, கனைக்கிறது. அதே நிமிஷம் அவனிடம் வந்து வெகு இனிப்பாய் பாக்கு வெற்றிலை சுண்ணும்பு போட்டுக்கொள்ளுங்கள் என்கிறது! எனக்கு இன்றைக்கு ரொம்ப ரொம்ப(?) வேலை! நான் உங்களிடம் இன்றைக்குப் பேச நேரமில்லை என்கிறது? இதை வந்தவன் தெரிந்துகொள்வதில்லை! நீங்கள் போய் வாருங்கள் நான் இங்கேயே இருக்கிறேன் என்கிறான். பிறகு வெளியில் வந்து இதேதடா சனியன் கிளம்புகிறதாக யில்லையே என்று முக்கிவிட்டு மறுபடியும் அந்த மனிதனிடம் நெருங்கி, இன்றைக்கு எங்களுக்கு இன்னொரு இடத்திலே விருந்தழைப்பு; எல்லோரும் போகிறோம். நீங்கள் இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டுப் போகவேண்டி யிருக்கே என்ற துக்கம் நெஞ்சை அடைக்குது! இன்னொரு சமய... அவசியம் சிலநாள் இருக்கணு... சொல்லி விட்டுப் புறப்படுவ... சாக்கா கோட்டு துணிமணி தொ...மாட்டிக் கொள்கிறது; அவன் இருந்த அறையைப் பூட்டப் பூட்டும் எடுத்துக் கொள்கிறது! இதற்குமேல் வந்த மனுஷ்யனும் இவ்வளவும் உண்மை யென்று எண்ணிக்கொண்டே தானும் போய்வருவதாய்ச் சொல்லிப் புறப் பட்டுவிடுகிறான். அப்பாடா! எழுந்தாண்டா! என்று இந்த டக்குகாரனின் மனம் பரவசந் துள்ளுகிறது. வந்தவனும் போய்விடுகிறான்! டக்குக் காரனும் தான் போட்டுக்கொண்ட சொக்காய் துணிகளைக் கழற்றிவிட்டு, இதென்ன ஏழரை நாட்டுச் சனியன், எவ்வளவு செலவு, எத்தனை கைச் செலவு, நல்ல பொழுதாய்த் தொலைந்தான். நல்ல தந்திரம் செய்தேன், அப்படிச் செய்யாவிட்டால் போவானா என்று தன் களைப்பு ஆறுகிறான்! முதலில் உபசரித்ததென்ன, பிறகு நடந்த தென்ன? ஆகவே, விகடன் இங்கு ஒரு புத்தி சொல்லுகிறேன். இடம் மட்டும் தங்குதற்குத் தரும் படி கேட்டுக்கொண்டு, புசிப்பை மறுத்து, அதை ஹோட்டலில் உண்டு விட்டால் எப்போதுமே குளிர்ந்த உபசாரம் என்றைக்கும் குறையாது.

ஃ

இன்னும் சில டக்குகளைக் கேட்கிறீர்களா? ஆகட்டும் வாங்கித் தருகிறேன், ஊர்போகும்போது கொண்டு போகலாம் என்று டக்கு செய்கிறது. கடைசியில் வாங்கித்தருவதே யில்லை. அதை வேண்டியவனும் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போகிறது! எல்லாம் உனக்குத்தான், என் கண்ணே!

---

ஒரு சிறு அறையும், அருகில் கொஞ்சம் இடமும் சேர்ந்து ஐந்து ரூபாய்க்குக் குறைந்து வீடு வாடகைக்கு அகப்படுவதில்லை. ஆனால், தன் சம்பளம் ஐந்து ரூபாய்க்கு உயருவதோ பிரம்மப் பிரயத்தனமாகிறது.

என் [illegible]தை இனிமேல் பார்ப்பா[illegible]பத்துக்கெல்லாம் நானே[illegible]. வேண்டியது கொடுக்[illegible], நகை செய்து போடு கிறேன் என்று கள்ளநாயகன் செய்கிற டக்கிலே அந்தக் கற்புகெட்ட மடந்தை மயங்கி மண்ணுகிருள். இந்த இருவரும் கொஞ்சிக் குலாவுகிற வேளையில் சொந்தநாயகன் வந்து விடுகிருன்! ஆனல் அவன் இவர்கள் இருக்குமிடம் வராமல் பல் துலக்கப் போய்விட, இவர்களும் அவன் கண் முன்பு படாமல் தப்பித்துக்கொள்ளுகிருர்கள்! இந்த டக்குக்காரன் உதவுவானென்று எண்ணிப்பார்ப்பதில்லை. இவ்விதமே நம்ம நித்திய சுமங்கலிகள் பசப்புகிற பசப்பும், பேசுகிற டக்கும் உலகமறிந்ததானதால் அதை இரண்டுவரியுடன் சுருக்கிவிடுகிறேன்.

ஃ

இன்னெரு டக்கு! அது உடுப்புகளின் ஆரவார டக்கு! சட்டையென்ன, தலைப்பாகை என்ன, பூட்ஸ் என்ன, சராய் என்ன——இவ்வளவு ஆடம்பரமாய் ஊரிலிருந்து வருகிறது! தான் பிறந்த தெருவிலேயே ஒய்யாரநடை போடுகிறது! பெரிய பணக்காரனைப் பசப்புகிறது! இதில் பலர் மயங்கி பெத்த ஐயாவாக அவனை எண்ணிவிடுகிறது! உள்ளே பார்த்தாலோ எங்குமுள்ள ஒட்டைதான். இனி, வியாதியஸ்தனைக் காணவருகிற டக்கோ ரொம்ப பேர்போனது! அதை எல்லோருமே செய்து வருவதால் விகடன் அதை விவரிக்க வேண்டாம்!

ஃ

வேறொரு டக்கு! ஒரு வேலைக் குத்தன்னை ஒருவர் நம்பினல், ஆஹா நானே அந்த வேலையைச் செய்கிறேன் என்று உடனே அந்த வேலையை வாங்கிக்கொள்கிறது. முதலில் வெகு சுறுசுறுப்பு காட்டிச் செய்வது. பிறகு அதைக் கால்வாசியில் விட்டுவிட்டு வேறெந்த காரியமாகவாவது போய்விடுவது; அல்லது உட்கார்ந்து கொண்டு ஏதேனும் ஒரு வெட்டிப் பேச்சை வளர்க்க ஆரம்பித்துக்கொள்வது! என்ன, வேலை ஆயிற்ற என்றல் இதோ அதோ என்று பொழுதையல்ல, பல நாட்களைக் கழித்து விடுவது! பிறகு தன்னல் அந்த வேலை முடியாதென்று அதை ஏவியவர்கள் கண்டுகொண்டு சலிப்புடன் அவர்களே செய்ய முற்படும்போது, அந்த சமயம் நான் செய்துவிடுகிறேன்—நீங்கள் சும்மா இருங்கள் என்று முன் வந்து தடுத்துத் தடபுடலாய்ச் சொல்வது! இப்படியே வாய்ப்பேச்சிலேயே ஏமாற்றிக்கொண்டு, தனக்கு அதிக கஷ்டம் உண்டாகாத வழியில் நழுவிக்கொள்வது! அத்துடன் மற்றவர்களின் பணத்திலேயே தன் செலவுகளையும் பார்த்துக்கொள்கிறது! ஒருவனுக்கு ஒரு பாதரக்ஷையோ உடுப்போ வேண்டியிருக்கையில் அத்துடன் தனக்கும் சேர்த்து வாங்கிக்கொண்டு, அவன் கையில் நாலணு ஐந்தணு தந்து மற்றது பிறகு தருகிறேனென்பது! இவனல் தனக்கு ஆகவேண்டிய காரியம் இருப்பதை எண்ணி அவன் அந்த நாலணு காசை வேண்டாமென்று மறுத்துத் தானே முழு விலையையும் கடைக்காரனுக்குக் கொடுத்துவிடுகிறது. இந்த சமயம் இந்த டக்கு ஆசாமி அந்த ஏமாறியவனை ஆகாசத்தில் தூக்கிவைத்துப் புகழுகிறது! கதை எப்படி இருக்கிறது பாருங்கள்! கேட்பதற்கெல்லாம் இதோ தருகிறேன்—கொண்டுவந்து விடுகிறே

---

எல்லாம் அந்த ஒருவனைப் பொறுத்து அந்தக் குடும்பம் நிலைபெற்றிருக்கிறது. அவன் காலத்திலேயே ஒவ்வொன்றுக்கும் ஒரு ஏற்பாடானல் நலமே. தெய்வசித்தம் எவ்வாறே? அவனுடைய குடும்ப அதிர்ஷ்டம் எப்படியோ?

னென்பது. பிறகு கொண்டுவருவது மில்லை· தருவதுமில்லை. இது ஒரு தினுசு டக்கு.

ஃ

ஒரு நிமிஷத்துக்கு முன் ஒரு வார்த்தை! மறு நிமிஷம் வேறொரு பேச்சு! நாலு தினத்தில் ஊருக்குப் போகவேண்டி யிருக்கிறது; உங்களுக்காகவே பார்க்கிறேன்; நான் போய் விட்டால் உங்களுக்குப் பல காரியங்கள் ஆகவேண்டுமே என்று யோசிக்கிறேன் என்பது. இந்த டக்கு ஆசாமியின் உளறுதலைத் தெரிந்துகொண்டவன், அவன் போய்விட்டால் தனக்கு சகாயத்துக்கு என்ன செய்கிறதென்ற கவலை ஒருபக்கம் இருப்பினும், அதைக் காண்பித்துக் கொள்ளாமல்—"உன் மனம்போலவே செய்—சுகமே போய் வா—என்னைப்பற்றிக் கவலை வேண்டாம்" என்றுசொல்ல ஆரம்பித்து விடுவானானல், அப்பொழுது பேச வாயின்றி மெதுவாக நழுவிவிடுகிறது! இனி கடன்காரனையும், பாக்கிக்காரனையும் ஏமாற்றுகிற டக்கு என் நஞ்சான் குஞ்சான்கள் நன்ருகத் தெரிந்ததே!

ஃ

இந்த இடத்துக்கும் வேண்டியவனாய் வேலை செய்வது! அந்த இடத்துக்கும் இவனைப்பற்றிக் கோள் குண்டுணிகள் சொல்வது—எழுதுவது! இரண்டு பக்கத்துக்கும் நல்ல பிள்ளையாகக் காண்பித்துக்கொண்டு இங்கு அந்த இடத்தை இகழ்ந்து, அங்கு இந்த இடத்தை இகழ்ந்து இரு பக்கமும் மேளம் கொட்டித் தனக்கு வரவு லாபம் கவனித்துக்கொள்வது! வயிற்றையும் தடவிக்கொள்வது?

ஃ

எந்தஇடத்தி[illegible] —புசிப்பு சந்தர்ப்[illegible] தின் சார்பாய்[illegible] கொக்கரிக்கிறது! மற[illegible]க் கடை டிக்கிறது! அந்த அறுப்பும் புசிப்பும் தீர்ந்ததும் அவர்கள்மீதே பிறகு குதிரையை யோட்டிச் சவுக்காலடித்து மற்றவர் பக்கம் சேர்ந்துகொள்வது! இது பலே பக்கா டக்கு!

ஃ

ஒரு வீட்டிற்குள்ளேயே இன்னொருவரைப் பார்க்க வருகிறதுபோல் வந்து வெகு விசுவாசமாய் நடந்து பேசி சொந்தம் உறவு நீட்டிவிட்டு, அந்த வீட்டிலிருக்கிற அந்த வேறொருவரிடமும் இனிக்கப் பேசிப் புசித்தும் விட்டு வந்த காரியமானதும் கம்பி காட்டிவிடுவது! இது மகா சாமர்த்திய நயவஞ்சக டக்கு!

ஃ

ஒரு குடும்பத்தைப் பிரித்து வைப்பதற்கு எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவு மித்திரபேதம் செய்து நடுவில் தனக்கு லாபமும் பார்த்துச் சுரண்டிக்கொள்வது! இது அந்தந்தக் குடும்பங்களில் இன்றைக்கும் நாளைக்கும் நடந்தேறுகிற டக்கு!

ஃ

இதோ டாக்டர், அதோ டாக்டர் என்று பேசுகிறது! டாக்டரும் வரவில்லை! எந்த ஆக்டரும் வரவில்லை! எல்லாம் டக்கு! எல்லாம் மயக்கு! எல்லாம் வாயடிவித்தை! எல்லாம் வீண்பசப்பு! நோயாளி தன் வேதனையை அவனது அன்பனிடம் சொல்லுகிறன். அந்த அன்பனே இதோ டாக்டரை அழைக்க ஆள் போய் இருக்கி

---

என்கையில் இப்பொழுது பணமில்லை, வெகு கஷ்டம் என்று சொல்பவன் உழைப்பாளியாயும், மாத சம்பளம் வாங்குபவனுயுமிருப்பின், மெதுவாகக் கொடுங்கள் என்று பின்னும் கடன்கூடத் தருவார். சோம்பேரிக்கும், தொழிலற்றவனுக்குமோ எவரும் தரார். தரினும் திரும்ப வராது.

...னே நோயாளி ..., அவருக்குப் பீஸ் த... ...வளவு ஆஸ்பத்திரி மருந்து... போதும் என்கிறான். உடனே அன்பன் டாக்டர் பீஸ் நீ தர வேண்டியதில்லை. எல்லாம் நாங்கள் பார்ப்போம் என்கிறான். இதை நோயாளி நம்புகிறான். டாக்டரையும் காணோம், எவரையும் காணோம்! என்ன அப்பா என்று அன்பனை விசாரிக்கிறான். அதற்கு அன்பன் நீங்கள் டாக்டர் வேண்டாமென்றதால் ஆஸ்பத்திரிக்கு மருந்துக்கு ஆள் போயிருக்கிறது என்கிறான். ஆஸ்பத்திரி மருந்தையும் பிறகு காணோம். அதற்கு அன்பனோ ஆஸ்பத்திரி மருந்து வேண்டாம்; வீட்டில் கைப்பக்குவமாய் மருந்து கொடுப்பார்கள்; அதையுண்டால் குணமாய்விடும் என்கிறான். அதையும் காணோம்! என்ன அப்பா! மருந்து எதையும் காணோமே என்றால், "மருந்துவேண்டாம், தானே குணமாய்விடும்" என்கிறான் அன்பன்! அப்பா! மூன்று நாளாய் மிக்க பாடு; இராவுத் தூக்கமே யில்லை; இப்படி வாயடியடிக்கலாமா, என்றால், அதற்கு அன்பன், "நாங்கள் என்ன செய்வோம், எங்களாலானவரையிலும் தான் பார்த்தோம்" என்கிறான். ஐயோ! என் இப்படி நிமிஷத்துக்கு ஒரு பேச்சோ! என் இப்படி வார்த்தை மாற்றமோ! உண்மைச்சொல் எதுவும் காணோமே! எல்லாம் பொய்! மனதிலொன்று, வாயில் ஒன்று. இதை அங்கு ஒரு சாமர்த்தியமாகப் பேசிய தாயும் எண்ணிக்கொள்கிறார்கள். தங்களுடைய எத்தனை பொய் மூட்டைகளை எதிரிலுள்ள மனுஷ்யன் எண்ணிச் சோர்ந்துபோனான் என்பதை நினைத்துப் பார்ப்பதேயில்லை. இத்தகையோரைத் திருத்தவும்முடியாது. இவர்களை நம்புவதிலும் தற்கொலை மேல் அய்யனே! ஃ

டக்கு சங்கதி இவ்வளவு போதும்! இனி, விகடன் டமாரம் சங்கதியை எடுத்துக்கொள்கிறேன். ஒரு வீட்டிற்கு வருகிறது! ஒரு சங்கதியை அங்கிருந்து தெரிந்துகொள்கிறது, அத்துடன் கொஞ்சம் சரக்கு சேர்த்து கண் காது மூக்கு வைத்து அதை ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று டமாரம் அடிக்கிறது. மாப்பிள்ளை வீட்டாரிடம் பெண்வீட்டாரைப்பற்றி டமாரம் அடித்து, அவளுடைய அப்பன் மூசுண்டை மொச்சக்கொட்டை வேகவைத்து விற்றுக்கொண்டிருந்தவன், அவள் வீட்டுக்குவீடு கூலிவேலை செய்து வயிறு வளர்த்த குட்டி—எல்லாம் எனக்குத் தெரியாததா?—இங்கே வந்தல்லவா இவ்வளவு மகிமைப்பட்டுப்போனது! அதற்கு முந்தி இவ்வளவு எண்ணெயை அவளுடைய உச்சந்தலை யறிந்திருக்குமா? என்று கதைகள் பேசுகிறது. இனி பெண் வீட்டாரிடம் போய், ஐயோ! அம்மா பார்த்தாலும் பார்த்தேன், உங்கள் பெண்ணு அங்கு படுகிறபாடு பெரிய கண்ராவியாக இருக்கிறது; வீடு முழுதுக்கும் கனத்த கூட்டம், இத்தனை பேருக்கும் அவள் ஒருத்தியே ஆக்க வேண்டும், படைக்கவேண்டும்; இதில் சொட்டுச்சொல், சிடுசிடுப்பு, அடிகள் எத்தனை எத்தனையோ? அவர் இருக்கிறாரே மாப்பிள்ளை, அவர் எதையும் காதில் போட்டுக்கொள்கிறதில்லை, போதாக்குறைக்கு அவர் இடிப்பும் வேறே! உட்கார நேரமில்லையம்மா,

---

"அமிர்த குணபோதினி"யின் விஷயத்தில் சிக்கனத்தின் அவசியத்தை நாம் மனதில் கொண்டிருக்கவில்லை. திறமையையே அதைவிட அவசியமாகக் கருதி நடத்துகிறோம். அத்துடன் வரவுக்குள் அடங்கிய செலவில் நடத்தவும் விரும்புகிறோம். நீடித்துத் தொடர்ந்து நடைபெற இவ்வழியே தகுந்தது.

உடம்பு துரும்பாய்ப் போச்சுதம்மா, கிளியை வளர்த்து இப்படிப் பூனை கையில் தரலாமா? அந்தப் பிச்சைக் காரக் குடும்பத்திலா தள்ளுகிறது. அவர்கள் பவிசை நான் அறியேனு? என் பாட்டனிடம் ஒருவேளை சோற்றுக்குக் காத்துக்கிடந்த பஞ்சம் பஞனைதகள்தானே! என்று டமாரம் அடித்து அந்தவகையிலே நன்ருக உண்டுவிட்டுக் கைகழுவிக் கொள்கிறது! அரிசி இரண்டு படி கடன் வாங்கிக்கொள்கிறது, பிறகு மாமியிடம் சென்று உன் மருமகள் இரண்டுபடியரிசி எனக்கு விலைக்கு விற்றுப் பணம் கேட்டாள் என்று டமாரம் அடித்து அந்தப் பணத்தை உன்னிடமே பிறகு கொடுக்கிறேன், அவளிடம் தரமாட்டேன் என்கிறது! இதில் மாமி பூரித்துப்போய், பணம் தர வேண்டாம், இன்னும் அவளுடைய சங்கதிகளை வந்து சொல்லு என்று தட்டிக்கொடுக்கிறது! பிறகு மருமகள் கடன்தந்த அரிசியைக் கேட்டால் மாமி கொடுக்கவேண்டாமென்றுவிட்டாள் என்கிறது: மாமியிடம் மருகி இதைப்பற்றி விசாரிக்கப்போனுலோ, அதற்கு மாமி முறைத்துக்கொண்டு: அவளுக்கு நீ அரிசி விற்றது எனக்கு தெரியாதா திருட்டுக்கள்ளி என்று ராமாயணத்தை ஆரம்பித்துக் கொள்கிருள்! இந்தமாதிரி டமாரங்கள் எவ்வளவோ தினுசுகள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதுமோஸ்தராகவே இருக்கும்! அவற்றை விவரிக்க இந்த மாதம் இடமில்லை.

ஃ

இனி, காக்கா பிடிக்கிற வித்தையைக் கொஞ்சம் சொல்லி முடிக்கிறேன். தனக்கு அவனுல் ஒரு காரியம் ஆகவேண் ... னக் காக்கா பிடிக்கிற ... மனும் ஒரு ஜாமீன் கை ... னிடம் வாங்கப் பார்க்கிறது. ... ருவரிடம் ஒரு வேலைக்கோ, ஒரு பெண்ணைக் கட்டிக்கொள்வதற்கோ அவரைக் காக்கா பிடித்து அலைகிறது! கள்ளு, சாராயக்குடி, கடன் இவைகளுக்காகக் காக்கா பிடிக்கிறது! மைனர்களைக் காக்கா பிடித்துக்கொண்டு சுற்றித் தன் தொப்பையை நிறைத்துக்கொள்ளப் பார்க்கிறது! ஒருவனிடமுள்ள நங்கையை மெதுவாக அப்பிக்கொண்டு போக அதற்காகக் காக்கா பிடித்துக் கண் போட்டபடியே இருப்பது! இலவசத்தில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளக் காக்கா பிடிப்பது! இப்படியாக, இந்தக் காக்கா வித்தைகளும் வெகு பேர்போனவைகள் தாம்.

ஃ

ஆனுல், கடைசியாக, இந்த டக்கு—டமாரம்—காக்கா பிடிக்கிற வித்தைகளைக் கற்ருேர் என்னதான் வாரிக்கொள்ளப் போகிருர்களோ—அதுதான் விகடனுக்குத் தெரியவில்லை! இவர்கள் ஏமாற்றிப் பறிக்கிறதும் அடுத்த தலைமுறைக்கு நிற்பதில்லை! அத்தோடு போயிற்ரு? இவர்களைத் தரித்திரமும் விடுவதில்லை! இவர்களின் தரித்திரமும் பித்தலாட்டங்களும் மோசங்களும் வெளிக்கு வராமலில்லை! இவர்கள் திருந்துவதோ அப்பப்பா இந்த ஜென்மத்திலில்லை! அடுத்த ஜென்மத்திலுமில்லை! இவர்கள் வீசும் வலையில் எவ்விதமும் சிக்கிக் கொள்ளாதிருக்கப் பார்ப்பதே புத்தியென்றுவிகடனுக்குத் தோன்றுகிறது அப்பால் அவரவர்கள் பாடு! டுடுடு! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

தாம் நீதி தப்பியபோதிலும் தமது முறட்டுத்தனமும் சரீரபலமும் ஜெயத்தை யளிக்குமென்று திமிர்பிடித்த சில மூடர்கள் நினைக்கிருர்கள். கடவுள் ஒருவர் இருப்பதை மறந்துவிடுகிருர்கள். பிறகு தெரியும் ஈசன் சங்கதி.



மருந்தில் குணமோ சிலாக்கியமோ தேவையில்லை யென்றும், விளம்பரம் பலமாக இருந்தால் மண்ணுங்கட்டியும் விலையாய்விடுமென்றும் கேட்லாக்குக் கம்பெனிகள் சொல்லுகின்றனவாம்! ∴

ஒரு சுப சந்தோஷச் செய்தியைத் தெரிவித்தவர்கட்குப் பதில் கொடாதிருந்துவிடுவதே வெகு வெகு விஸ்வாசம் காட்டும் நாகரீக வழியாம்!

∴

வேறு குடும்பமாகப் பிரிந்து வேறிடத்தில் குடிபோய்விட்டவர்களிடம் எத்தனைச் சண்டையிட்டவர்களும் பிறகு உறவாய்விடுவார்களாம்!

∴

ஒருவனுக்குப் பணமும் சொத்தும் கூடிவிட்ட சங்கதியும், அது செலவழிந்து பை காலியாய்விட்ட சங்கதியும் வெளிக்கு எப்படியோ தெரிந்துபோகுமாம்!

∴

எப்போதோ நினைத்துக்கொண்டு கடிதம் எழுத இங்கிபுட்டி பேனா தேடுகிறவர்களுக்கு, அப்போது அவர்களுக்கு ஆகவேண்டிய கனத்த காரியமும் ஒன்றிருக்குமாம்!

∴

எத்தனைக் குடிகளைக் கெடுத்தாலும், மோசம் செய்தாலும் தனது ஆரவாரப் பிரதாபப் பெயர் அத்தனை தூற்றல்களையும் மறைத்துவிடுமாம்!

∴

செய்த கலியாணங்கள் சரிதானப்பா, யார் யார் செழித்து வாழ்கிறார்களென்று விகடசித்தர் வினவுகிறார்.

∴

குழந்தைக் கல்யாணம் கூடாதென்று எழுதிய நூல்களும், அவ்விதமான வியாசங்களும் வருகிற ஏப்ரில்மாதம் முதல்தேதிமுதல் பயன்படாவாம்!

∴

சிறுவயதில் தாலிகட்டும் விவாகம் கூடாதென்று சட்டம் வருவதால், இனி ஒருவரையொருவர் முத்தமிட்டு அதையே ஒரு விவாகம்போல் பாவித்துக்கொள்ளலாமென விகடவியாசமுனிவர் தெரிவிக்கிறார்!

∴

கால் நீட்ட முடியாத இடத்தில் குடியிருந்தால் தான் விருந்துச் செலவுகள் வராமல் பணம் மிச்சப்படுமாம்!

∴

ரஸ்தாவில் பயமின்றிக் கை வீசி நடப்பதற்கு இன்னும் பல தினுசான மோட்டார்கள் வரவேண்டுமாம்!

∴

ருஷியாவிலே சாமி பயம் தொலைந்துபோய், இதற்கு முந்திய ஐந்து வருஷங்களில் 364-மாதா கோவில்கள் மூடப்பட்டு, இப்போது ஐந்துமாதத்துக்குள் 202-கோவில்களும் வேறே மூடப்பட்டு, கோவிலிருந்த இடங்களைப் பள்ளிக்கூடங்களாகவும், விளையாட்டு ஸ்தலங்களாகவும் ஆக்கிவிட்டதையறிந்த விகடன், என் ஊர் சுயமரியாதை திரு ராமசாமி நாயக்கப் பெரியாரின் நோக்கமும் இவ்விதம் ஆகவேண்டுமென்பதுதானா என்று கேட்கிறானாம்!

---

கணவன் விரும்புவதை மட்டும் அந்த சமயத்திற்கு ஒப்பிநிறைவேற்றிக் கொடுத்துவிட்டால்—அதைவிட வசிய மருந்து வேறொன்றுமில்லையாம்.



நமது பிர…

# என் கவலை எனக்கே.

துணிகின்றேன். "என் கவலை எனக்கே" யாதலின் துணிகின்றேன். அக்கிரமத்திற்குத் துணியவில்லை. தர்மம் தவறி நடப்பதற்குத் துணியவில்லை. சத்தியத்தின் பாதையிலே துணிகின்றேன். ஏன் துணியக் கூடாது? "துணியக்கடவாயாக" என்று கீதை சொல்லுகிறது. தெய்வத்தை நம்புகிறேன்; சாஸ்திரங்களை நம்புகிறேன். கற்பைத் துதிக்கின்றேன். ஆனால், வெளிப்புறத்தே நிகழும் கொடிய ஹிம்ஸைகளையும், மானபங்கங்களையும், சிரமுண்டிதத்தையும் வெறுக்கின்றேன். நாளையதினம் இவ்வுலகசுகமே இன்னதென்று உணராத, பன்னிரு வயது இன்னமும் வராத என்னை நாவிதன் முன்பு வைத்து அலங்கோலம் செய்துவிடுவார்கள். அத்துடன் போகாது; அங்கே நின்றாள், இங்கே நின்றாள், பேசினாள் என்று ஸந்தேகாஸ்பதமான கடூர பதங்களையும் வருஷிப்பார்கள். இவற்றைக் கேட்க எனக்கு சக்தியில்லை. என் பர்த்தா பம்பாயில் இஞ்ஜினீரிங் பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தவர். அதில் தேறாது போகவே தற்கொலை செய்துகொண்டாரென்று என் தந்தைக்குத் தந்தி வந்தது. பர்த்தாவின் வீட்டிற்குத் தந்தி யடித்துக் கேட்டதற்குத் தங்களுக்கும் அப்படியே ஒரு தந்தி வந்திருக்கிறதென்று பதில் தந்தி தெரிவித்தார்கள். புலம்பியாயிற்று. அவ்வளவுடன் மற்றவர்களின் துக்கம் தீர்ந்தது. என் துக்கமோ?— அதற்கு முடிவு ஏது?

ஃ

நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்? இந்தப் பெண் ஜென்மம் எதற்காக? பர்த்தாவுக்குப் பணிவிடை செய்து அவரையே யாவுமாய்க் கருதி வணங்குதற்கன்றோ மிருதுமயமான இந்தக் கோமள சரீரத்தைப் பகவான் படைத்தார். பர்த்தா போனபின்பு இந்த சரீரம் எவருக்கு உதவுவது? வீட்டிலுள்ளவர்களுக்குக் கால முழுதுக்கும் உழைத்த கட்டையாய்க் கிடக்கும்படி உபயோகப்படுத்துவதா? அப்படியே செய்யலாம். அதில் நன்றி விசுவாசங்கள் ஏதேனும் காட்டப்படுமா? ஒருபோதுமில்லை. சதா பழிப்பும்—அபசகுனமாக எதிரில் வந்தாள் என்ற நிந்தையுமே ஆஸ்தியாகக் கிடைக்கும். வீணுக்கு உட்கார வைத்துக்கொண்டு அன்னம் கொட்ட வேண்டி யிருக்கிறதென்றும் சொல்லிக்காட்டுவர். அவள் உழைத்த

---

வாய்க்குப் புகையிலையும், மூக்குக்குப் பொடியும் போடுவது வைதீகத்தைக் கெடுக்காதென்றால், சுருட்டும் சிகரெட்டும் விஸ்கியும் அத்துடன் சேர்த்துக் கொள்ளலாமே யென்கிறார்—விகட கவியான ஒருவர்.

...கஞ்சி வார்க்கி
...ஞர்கள். ரமணியா
...சரி, வயோதிக
மடை...லத்துஞ் சரி, என்றும் ஒரே அன்பாய்க் காக்கக் கூடியவர் பர்த்தா ஒருவரே. மக்களுண்டானுல் மாதாவை எந்த நாளும் அலக்ஷியம் செய்யார். எனக்கோ பர்த்தா மறைந்தார். மக்களாசையும் போயது. இனி வீட்டிற்கு நாய்போல் உழைத்துக்கொண்டு கிடக்கவும் எனக்கு மனமில்லை. ஆதலின் துணிகின்றேன். என் அருள் விளக்கே! அருள் அமுதே! அருள் நிறைவே! குளிர்ந்த தருவே! பூங்காற்றே! நற்றுணையே! நாயகமே! இச்சையுற்றபடியெல்லாம் பொம்மைகளும் நூல்களும் எனக்கருளும் துரையே! என் தவராஜ சிங்கமே! காண்பதென்றேயோ? ஹா! இனி ஏது அது? "என் கவலை எனக்கே!"

ஃ

மறுநாள் பாரிஜாதத்தை வீட்டில் காணவில்லை. அன்றையதினம் அவளை மொட்டையடித்து வெள்ளைத் துணி தந்து மூலையிற் கிடத்தவேண்டிய நாள். அந்த மங்கள வரிசைகளை வைபவமாய்ப் பெற்றுக்கொள்ளாமல் எங்கோ சென்றுவிட்டாளே என்று வெகு இரக்கமாய்த் தாய் தந்தையர் தேடியலைந்தார்கள். ஜலத்தில் விழுந்து உயிரை விட்டாளா என்றும் பரிதபித்தார்கள். இவர்கள் செய்யப்போகிற மரியாதைகளைவிட குளம் குட்டைகளில் வீழ்ந்து மாள்வது எவ்வளவோ மேலானது. பாரிஜாதம் அகப்படவேயில்லை. இன்னும் பக்குவமடையாதவளாதலின் எவருடனோ ஓடிவிட்டாளென்று நிந்தனை கூறவும் ஹேதுவில்லை. நான்கு மாதங்களும் சென்றுவிட்டன.

ஃ

ஐந்தாம் மாதத்தின் ஒருநாட் காலையில் எவரோ ஒருவர் பாரிஜாதத்தின் தந்தையாரது வீட்டுக் கதவைத் தட்டினார். பாரிஜாதத்தின் தந்தை பத்மநாப ஐயரும் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து, சங்கரய்யரா வாருங்கள் என்றார். இருவரும் உட் சென்றனர்.

சங்கரய்யர்:—எனக்குத் தாங்கள் இந்தசமயம் ஒருவாக்குசகாயம் செய்ய வேண்டும். என்னை மனஸ்பூர்வமாக மன்னிக்கவேண்டும்.

பத்மநாபய்யர்:—மாப்பிள்ளை கோபாலனின் முகத்திற்காக அவனை வளர்த்த சிறிய தந்தையாயிற்றே யென்று கேட்டமாத்திரத்தில் இருநூறு ரூபாய் ரொக்கமாகக் கொடுத்தேன். உமக்காக ஜாமீன் கையெழுத்திட்டு, நீர் மறைந்துகொள்ள அதில் எழுநூறு ரூபாய்வரையில் அழுதிருக்கிறேன். இவ்வளவும் போக, மேலும் ஒரு நூறு கடன் கேட்க வந்தீர். நான் கண்டிதமாய் மறுத்து, முந்திய 200-க்கும், 700-க்கும் வழியென்ன என்றதற்கு வீட்டில் புசிக்காமலே புறப்பட்டுப் போய்விட்டீர்கள். மாப்பிள்ளை காலமானதற்குக் கூடத் துக்கம் விசாரிக்க வரவில்லை. அத்துடன் என் பெண்ணும் மறைந்தாள். "என் கவலை எனக்கே." இன்னும் எவரிடமாவது பணம் கேட்க என் வாக்கு சகாயம் தேடி வந்தீர்களா? சும்மா வரமாட்டீரே.

சங்கரய்யர்:—நீங்கள் எனக்குக் கடன் கொடுக்கக் கண்டிப்பாய் மறுத்துவிட்டதில் என்னையே மறந்த ஆத்திரத்தில் தங்களுக்குப் பெரிய அபசாரத்தைச் செய்துவிட்டேன்.

---

ஒரு மனிதன் நாள் ஒன்றுக்கு ஆறுமணி நேரம் உழைத்தால் இரண்டு வருஷ காலத்தில் அவன் ஒரு பாஷையில் தேர்ச்சியடைந்துவிடலாமென்பது மேதாவிகளின் அபிப்பிராயம். பீரோவில் அடுக்காமல் படித்தால் பலனுண்டு.

அதற்காக இப்பொழுது என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பச் சித்தமாயிருக்கிறார்கள். எவ்விதமேனும் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

பத்மனாபய்யர்:—தாங்கள் எனக்குச் செய்த அபகாரமென்ன? என்னாலானவரையில் மன்னிக்கிறேன். சிறைக்குச் செல்லக்கூடிய அவ்வளவு பெரிதா அது?

சங்கரய்யர்:—தங்களுக்கு இரண்டு வாரங்களுக்குமுன் ஏதேனும் கடிதம் வந்ததா?

பத்மனாபய்யர்:—கடிதமல்ல, தந்திகள் வந்தன. "தங்கள் மாப்பிள்ளையும் பெண்ணும் சௌக்கியமா?" யென்று முதலில் பதிலுக்குப் பணம் கட்டித் தந்தி வந்தது. நான் விவரமாக "மாப்பிள்ளை மரித்ததால், என் பெண்ணும் எங்கோ சென்று மடிந்தாள்" என்று தந்தி யனுப்பினேன். பெண் இறந்ததை விவரமாய்த் தெரிவிக்கும்படி மறுபடியும் அதிக பணம் கட்டித் தந்திவர, சகலமும் தெளிவாகத் தெரிவித்துவிட்டேன். அதற்கென்ன இப்போது?

சங்கரய்யர்:—தங்களுக்குக் கடிதம் எழுதி சகலமும் தெரிந்துகொண்டதாகவும், பொய்த்தந்தி யடித்ததற்காக என்னைச் சிறைக்கு அனுப்ப ஏற்பாடுகள் நடக்கிறதென்றும், நான் பொய்த் தந்தி யடிப்பதற்கு எழுதிக்கொடுத்த கடிதம் தபாலாபீசில் கண்டுபிடிக்கப் பட்டானதென்றும் எனக்கு வக்கீலின் மூலம் ரிஜிஸ்தர் கடிதம் வந்தது. அதனால் நடுநடுங்கித் தங்களிடம் ஓடி வந்தேன். "என் கவலை எனக்கே".

பத்மனாபய்யர்:—கடிதம் யார் எழுதியது? அப்படி என்ன பொய்த் தந்தியை எனக்கு அனுப்பினீர்கள்?

சங்கரய்யர்:— [...] முடியவில்லை. ப[...] உங்களுக்கு அனு[...]

பத்மனாபய்யர்:—அ[...]ப்பொய்த் தந்தியா? கோபாலன் பிழைத்திருக்கிறானா?

சங்கரய்யர்:—ஆம்.

பத்மனாபய்யர்:—அடசண்டாளா! ஆயிரங்காலத்துப் பயிரான ஒரு குடும்பத்தைக் கெடுத்தாயே பாவி! நீ ஜெயிலுக்குப் போனாலென்ன? உன்னைத் தூக்கில் போட்டாலென்ன? ஐயோ! பாரிஜாதமே! நீ உயிரோடிருந்தால் உனக்கு இது புனர்ஜன்மமாய் எவ்வளவோ சந்தோஷச் செய்தியாயிற்றே! பெற்ற வயிறு பற்றி எரிகிறதே! கேட்ட பணம் தரவில்லையென்று பொய்த் தந்தியனுப்பினாயே துரோகி. "என் கவலை எனக்கே!"

ஃ

சங்கரய்யர் இது சமயமல்லவென்று எழுந்து வெளியிற் சென்றுவிட்டார். அடுதத நிமிஷத்தில் கோபாலன் உள்ளே வந்து நுழைந்தான். பத்மநாபய்யர் அவனைக் கண்டதும் அலறினார். கோபாலன் அவர் பாதங்களில் விழுந்து கதறினான். பாரிஜாதத்தின் தாயைக் கண்டு அவள் காலில் போய் விழுந்தான். தேறுதல் சொல்லி சாந்தப்படுத்த மனிதர்கள் புறப்பட்டனர். கோபாலன் ஆத்திரத்துடன் கண்ணீரோடும் பாரிஜாதத்தின் தாயை நோக்கி, என் மாமி! நீங்கள் அறிய, என் மாமா அறிய, எரியும் இந்த என் வயிறு அறிய, எங்கும் நிறைந்த அந்தக் கடவுள் அறிய பாரிஜாதத்தை நான் என்றும் மறவாதிருப்பதற்காக இன்றுமுதல் துறவி போல் வாழ்வதற்குத் தயாராய் விட்டேன். என் நிமித்தம் அவள் துறவி

---

காலவேறுபாடுகளோடு எதிர்த்துப் போராடிப் பழைய அனுஷ்டானங்களைப் புகுத்துவது சாத்தியமல்ல. ஆனால் முற்றிலும் கைவிடல் ஆகாது.

...தம் நான் இன்று ...கிறேன். "என் ...!" என்று சொல் லிக ... இது விதியின் பிழை.

**பத்மநாபய்யர் :**—உன் படுபாவிச் சிற்றப்பன் பொய்த்தந்தி யடித்ததை நீ எவ்வாறு கண்டுபிடித்தாய்?

**கோபாலன் :**—ஒருநாள் மாலையில் பம்பாய் கல்பதேவி ரோட்டில் என் பால்ய சிநேகிதனான ராஜத்தைக் கண்டேன். அவன் என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டு, "நீ இறந்துவிட்டதாக ஐந்துமாதங்களுக்குமுன் உன் சிறிய தந்தை உன் வீட்டிற்கும், பத்மநாபய்யர் என்பவருக்கும் தந்தியடித்தாரே. நான் தபாலாபீசில் தந்திகுமாஸ்தாவானதால் அத்தந்தியை நானேபெற்று அனுப்பிவிட்டுக் கண்ணீரானேன். உன் சிறிய தந்தையையும் துக்கம் விசாரித்தேன். பத்மநாபய்யர் உனக்குப் பெண் தந்த மாமனார் என்று சொன்னா" ரென்றான். உடனே திகைத்து அவனைக்கொண்டு உங்களுக்குத் தந்தியனுப்பி சகலமும் தெரிந்த பிறகு, என் தாய் தந்தையர் எனக்கு வைத்துப்போன சொத்துக்களையெல்லாம் அபகரித்துக்கொண்ட என் சிற்றப்பாவுக்கு, பொய்த் தந்திக்குச் சிறைவீடு கிடைக்குமென்று வக்கீல் நோட்டீஸ் அனுப்பினேன்.

ஃ

வருடங்கள் நான்காகி விட்டன. கோபாலன் சென்னையில் மூன்னூறு ரூபாய்உத்தியோகத்தில் இருக்கிறான். தனக்காகத் தன் ஒரே பெண்ணைப் பலி கொடுத்த தன் மாமனாருக்கு மிகுதிப்பட்ட ரூபாய்களை யனுப்பி விடுகிறான். தயாளுவாய் தான தர்மங்களில் செலவிட்டபடி இருக்கிறான். அவ்வருஷம் சென்னையில் காங்கிரஸை யொட்டி நடந்த ஆசாரத் திருத்த மஹாநாட்டில் கோபாலன், கணவனை இழந்ததும் பெண்களின் கேசங்களைக் களைந்து அலங்கோலம் செய்வதைக் கண்டித்துப் பேசி, இந்த அலங்கோலத்தைத் தாங்க முடியாமலே என் மனைவியும், பத்பநாபய்யரின் குமார்த்தியுமான பாரிஜாதம் தன் சவம் எவருக்குமே அகப்படாதநிலையில் எங்கோ சென்று மடிந்து இந்த அக்கிரமத்திற்குப் பலியானாள் என்று தன் சிற்றப்பனின் பொய்த் தந்திக் கதைகளையெல்லாம் விரிவாகக் கூறி முடித்தான். அதைத்தழுவிப் பலர் பேசினர்.

ஃ

இது நடந்த இரண்டாம் நாள் "ஹிந்து"ப் பத்திரிகையில் தந்திச் செய்தியாகப் பின் வரும் குறிப்பு காணப்பட்டது.

> "ஆசார சீர்திருத்த நாட்டில் ஸ்ரீமான் கோபாலன் பிரஸ்தாபித்த பாரிஜாதம் கல்கத்தா நரேந்திரர் தெருவிலுள்ள பாரத மகிளா வித்யாலயத்தில் ஐந்து வருடங்களாகத் துறவற வாழ்வில் இருந்து வருகிறாள். தன் பர்த்தாவின் பாத பத்மங்களைத் தன் கண்ணீரால் கழுவி புனிதமான மலர்கள் கொண்டு அர்ச்சிக்க விரும்புகிறாள். ஸ்ரீமான் கோபாலன் என்பவர் உடனே வருவது நலம்."

இதைக் கோபாலன் "ஹிந்து" பத்திரிகையில் வாசித்ததும் தன்னையே மறந்து நின்றான். என் பாரிஜாதம் ஜீவனுடன் இன்னும் இருக்கிறாளா என்று தன்னையே கேட்டுக் கொண்டான். "என் கவலை எனக்கே" என்று கூறிவிட்டு அன்றிரவே கல்கத்தாவுக்குப் புறப்பட்டான்.

---

தன் கணவன் மற்றவர்களால் கேவலப்படுத்தப்பட்டால், அவனுக்கு ஆறுதல் கூறாமல் தானும் அவனைக் கேவலம் செய்தல் கற்புடைமையாகுமா?

கல்கத்தா பாரத மகிளா வித்யா யத்தின் தலைவியான ஸ்ரீமதி நிர்மலா தவி கோபாலனிடம் அன்புடன் பசினர். "பாரிஜாதம் அனுதைப் பண்ணுய் என் காலில் விழுந்து பிர ாபித்தாள். இந்த சமாஜத்தைப் ற்றி அவள் "சுதேசமித்திரன்" ன்ற தினசரிப் பத்திரிகை மூலம் அறிந்திருந்ததாகச் சொன்னுள். அவ ளும் பெண், நானும் பெண். பெண் ளின் துயரத்தைப் பெண்களே அறியவல்லார். அன்று முதல் என் யிற்றுப் பெண்ணுக வைத்து ித்தைகற்பித்து வருகிறேன். கணவ ளுடு வாழமுடியாமற் போன அவ நடைய விருதா ஜென்மத்தைக் றித்து எத்தனையோ இரவு பகல் ளில் கண்ணீர் விட்டிருப்பேன். என் கவலை எனக்கே" யாதலால் ன் குழந்தையாகிய பாரிஜாதத்திற்கு ந்த வித்யால[illegible]த்தில் ஒரு கௌரவ ான ஜீவனம் தந்து ஆதரித்து வரு றேன். "பார்வர்ட்" பத்திரிகையில் சன்னை ஆசார திருத்த நாட்டுப் பிர சங்கத்தின் தந்[illegible] ஜாதம் வாசித்தது[illegible] குக் காண்பித்தா[illegible] படி உடனே "ஹிந்து [illegible] குத் தந்தி யனுப்பினேன். உங்க[illegible] சொத்தை ஒப்புக் கொள்ளுங்கள். அதோ அந்த அறைக்குள் போகலாம்" என்றார் ஸ்ரீமதி நிர்மலா தேவி.

ஃ

பாக்கியவதியான பாரிஜாதம் பதியை வணங்கி ஆநந்தக் கண்ணீருடனும் பாத பூஜை செய்தாள். நிர்மலாதேவி இருவரையும் ஆசீர்வதித்துப் பிரயாணப்படுத்தி யனுப்பினர்.

ஃ

பத்மநாப ஐயர் தன் குமார்த்தியைக் கண்டு ஆவலுடன் அணைத்துக் கொண்டார். சாந்தியும் நடந்தது. சிற்றப்பனைத் தெய்வம் கேட்கட்டுமென்று கோபாலன் விட்டு விட்டான். பம்பாயிலிருந்து பால்ய நண்பன் ராஜமும் ஓடிவந்து இவர்களின் பூரிப்பில் பங்கு கொண்டான். யாவும் பகவத் ஸங்கல்பம். அவன் அருள்!


காலை மாலை வேளைகளில்

— இரவிலுங்கூட —

தினம் ஒரு டம்ளர் நிறைய "அமிர்த குணபோதினி"யை ஊற்றி ஆநந்தமாய்ப் பருகுங்கள்.

அது தினமும் அருந்தத்தகுந்த அறிவு விர்த்திக்கான உயர்ந்த அமிர்த "டானிக்" ஆகும்.

"அமிர்தம்" விரும்பாதாரும் உலகில் உளரோ?

ஐந்தாம் வருட 'அமிர்த' டானிக்கைப் பெற்று அன்பர்காள்! ஆநந்தியுங்கள்.

பஞ்சதரிசன



## அக்பர் சமஸ்தானத்தின் உன்னதம்.

## VIII



மொகலாய ஜாதியாருள் அக்பர் ஒரு மாணிக்கம் போன்றவர். இந்து தேச சரித்திரத்தில் அவருக்கு ஒப்பானவரில்லை. அவர் நெடுநாள் அரசாண்டதினுலும், அவருடைய சமஸ்தானம் ஆச்சரியப்படத்தக்க பெருமையடைந்திருந்ததினுலும், அவருடைய குடும்ப ஸம்ரக்ஷணை திருத்தமான முறையிலிருந்ததினுலும், புறத்தேசாதிபதிகளோடு கௌரவமாகப் பழகி வந்தபடியாலும் இந்து தேசத்து ஜனங்களுக்கு இனி இல்லை யென்ற சௌக்கியமும், நாகரிகமும், செல்வமும் உண்டாயிற்று. சிம்மாசனமேறிய அரசர்களுள் அக்பர் பாதுஷாவுக்கு நிகர் இந்து தேசத்திலுமில்லை. வேறெந்தத் தேசத்திலும் இல்லை; அவருடைய தயையும் தயாளமும், நிஷ்பக்ஷபாதமும், தைரியமும், மிதபோஜனமும் இன்னும் பற்பல குணங்களும் வேறெந்த அரசரிடத்திலும் காணப்படா. அவரவருக்

குத் தக்கபடி ஒரு நியாயம் சொல்லு
தில்லை. அவருடைய உதாரண குண
துக்குக் கரையில்லை, குடிகளுடை
நன்மைக்கு இரவும் பகலும் வி
முயற்சி செய்பவராதலால் நாடோ
நான்கு மணி நேரத்துக்கு அ
மாகத் தூங்கமாட்டார். அவரோ
பழகியவரை ஒருபொழுதும் மற
விடார். அவருடைய பாட்டனார்
பேபர் சக்ரவர்த்தியைப் போ
தைரியமுடையவர். [illegible] தாரண ஜ
கள் பயந்து பின்னடையும்படியா
காரியங்களில் தாம் தைரியமா
பிரவேசிப்பார். விநோதத்தி
பொருட்டு இருநூறு மைல் தூ
இரண்டு நாளில் சவாரி போவ
யானைகளைப் பழக்கிச் சண்டை
வதில் அவருக்கு அதிகமான பி
மிருந்தது. ஒரு யானையின் மே
நந்து மற்றொரு துஷ்ட யானையி
முதுகில் குதிப்பார். மதம் பிடித்
ஓடும்போது அவற்றின் மேலிருந்
திடீரென்று அதின் முதுகில் ப
வார். புலியினிடத்திலும் பயமில்
யாதொரு உதவியுமின்றிப் புலி
எதிர்த்துக் கொன்றிருக்கிறார்.
சமயத்தில் குதிரை சவாரி செய்
பொழுது எதிரில் ஒரு புலியைப்

---

எல்லாம் தானே வாரிக்கொள்ள நினைப்போன் சீக்கிரம் நோய்வாய்ப் பட்டுவிட, அவனால் வஞ்சிக்கப்பட்டோனின் கை உயர்ந்து போய்விடுகிற ஏமாற்றிவிட நினைத்தோன் வஞ்சிக்கப்பட்டவனின் கையை எதிர்பார்க்கும் படியாகவும் காலம் வந்துவிடுகிறது. கெடுநினைக்குக் கெடுதியே முடிவு.

புலிக்குட்டிகளையும் கண்டு ...ன்று பாய்ந்து ஒரு குத்திலே ...யைக் கீழே விழுந்து சாகும்படி ...ஹர். ஹா! என்ன வீரம்!

ஃ

இந்தத் தைரியத்தோடு அரச... வேண்டிய புத்தியும், தளகர்த்... வேண்டிய யோக்கியதையும் ...தன. ஒரு சமயத்தில் ஒரு ...டையை எதிர்த்து உள்ளே பிர...க்கும்போது அவருடைய தள...தன் ஒருவன் தனக்குப் பாதுஷா ...மானம் செய்ததாக எண்ணிக் ...ண்டு ஆயுதங்களை எறிந்துவிட்டு ...தபாணியாக சண்டைக்குப் ...வதாகச் சொன்னன். உடனே ...டைய தளகர்த்தருக்கு உண்டா... அபாயம் தமக்கும் வரக்கடவ...று தம்முடைய ஆயுதங்களையும் ...துவிட்டார். மற்றொரு சமயத்... ஒரு கோட்டையை முற்றுகை ...ட்டார். ...நாளாகியும் கோட்... பிடிபடவில்லை. அதனல் சவிப்... எதிரி அரசனைத் தம்மோடு ...ச் சண்டைக்கு அழைத்தார். தமக்குச் ... அவர்களுடை... விட தாமிருக்கும் ... ஜெயித்தவர் கோட்டை... கொள்வோமென்று சொன்னர்.

ஃ

அக்பர் பாதுஷா உன்னத வடிவமுள்ளவர். நிறம் பழுப்பு. கண்ணும் புருவமும் கருப்பு. புருவம் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும். அவர் அழகுள்ள புருஷர். பலத்திலே சிங்கத்துக்கு ஒப்பானவர். அவருடைய மார்பு விசாலமானது. அவர் ஆஜானுபாகு. அவர் தேகம் முழுமையும் பார்க்கப் பிரியமாயிருக்கும். அவர் மூக்கின்மேல் ஒரு மறு இருந்தது. சாமுத்திரிகா லக்ஷணம் தெரிந்தவர்கள் அதைப் பார்த்து அவர் மஹா அதிர்ஷ்டவானென்று சொல்லியிருந்தார்கள். ஐம்பது வருஷம் ஏக சக்ராதிபதியாய் இந்து தேசத்தை ஆண்ட அவருடைய அதிர்ஷ்டம் விசேஷித்ததென்பதற்குச் சந்தேகமில்லையே!

முற்றிற்று.

## பிரமோதூத வருஷக் காலெண்டர்.

இந்த ஸஞ்சிகையுடன் நமது கையொப்பநேயர்கள் அனைவருக்கும் பிரமோதூத வருஷ ஷீட் காலெண்டர் ஒன்று அனுப்பியிருக்கின்றோம். அதனை "அமிர்த குணபோதினி"யின் புது வருஷத்திய ஞாபகமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். பத்திராசிரியர்.

THE MADURA TAMIL SANGAM

உண்மையான தலைவர்களுடையவும், மத ஸ்தாபகர்களுடையவும் லக்ஷ...ள் ஒருநாளும் மாறுவதில்லை. காலக்கிரமத்தில் தேய்வடைந்துபோவது ...லை. என்றென்றைக்கும் அவர்களுக்கு ஒரே முடிவான லக்ஷ்யமே.

மனிதன் ஸமுத்திரத்தைக் கடக்கக் கப்பல் ஏறுவது என்? பிறகு அதை ...டுப் பிரிவதும் என்? கப்பல் ஏறின காரியம் முடிந்து அதை விட்டுப் ...வதும், அல்லது முடி...ல் நடுக்கடலில் திசைதப்பிப் பிரிவதும்—அவன் ...த்தையும் முயற்சியையும் அதிர்ஷ்டத்தையும் பொறுத்துள்ளன.

## ... ரகசியங்கள்.

### ...லிங் சால்ட் (Smelling Salt)

நவாச்சாரம் 2-அவுன்ஸ், லவெண்டர் எண்ணெய் (Oil of Lavender) ¼ அவுன்ஸ், லவங்கத் தைலம் 10-துளிகள், ஒலியம் பர்க்கமெட் 1-அவுன்ஸ் ஆக இவைகளை ஒரு சீசா (போத்தல்) வில் போட்டுக் காற்று புகாதபடி கார்க் போட்டு வைத்துக் கொள்ளவும். ஜலதோஷம், தலைவலி, மயக்கம், பற்கிட்டல், ஸ்மரணையில்லாதிருத்தல், கிருகிருப்பு முதலியவைகளுக்கு அடிக்கடி கார்க்கைத் திறந்து மூகர்ந்து பார்த்து வந்தால் வெகு சீக்கிரம் சுகமாகும். ஸ்மரணையில்லாமல் கிடப்பவரின் மூக்கில் முகர வைத்தால் வெகு சீக்கிரம் ஸ்மரணையுண்டாகும். வியாபாரத்திற்கென்று செய்து விற்கப் பிரியப்படுவோர், கல் கார்க் போட்ட பச்சை போத்தல்கள் இதற்கென்றே தயாராகி ஒரு அவுன்ஸ் அளவில் கிடைப்பதை வாங்கி அவைகளில் மேலே குறித்த அளவில் பகுதி அளவாகக் கூட்டி நிறைத்து அழகான லேபில்களொட்டி விற்கவும். சீர்மையிலிருந்து வரும் Smelling Salt என்னும் மூக்கும் உப்பு வகைக்கு இது எவ்வகையாலும் குறைந்ததல்ல. சீர்மைச் சரக்கைப் போன்ற குணமும், விலையில் நயமும் உள்ளது.

### உயர்ந்த பவுண்டன் பேனா இங்கி செய்யும் முறைகள் :—

1. தூளாக்கிய ப்ரஷ்ஷியன் புளூ (Powdered Prussian Blue) 1-அவுன்ஸ், ஹைட்ரோ க்ளோரிக் ஆசிட் வடிகட்டி சுத்தப்படுத்தியது (ஜல ரூபமாயுள்ளது) (Hydrochlorid acid Consentrated Fluid) 1½ அவுன்ஸ், இவ்விரண்டையும் ஒரு சுத்தமான சீசா (போத்தல்) வில் இட்டு கார்க் போட்டு காற்றுப் புகாமல் 1... நாள் வைத்திருந்து பின்பு தேவையுள்ள நிறம் வரும் வரை தெளிவான தண்ணீரை விட்டுக் கலந்து வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம். சீசாக்களில் நிறைத்து அழகான லேபில்கள் ஒட்டி விற்பனையும் செய்யலாம். நல்ல லாபமுண்டு.

2. நீக்ரோஸன் (Nigrosine) 20 கிரெயின்கள், (Grains) ஆல்கஹால் (Alcohol) 4-டிரேம்கள் (Drams) தெளிவான தண்ணீர் (Pure Water) 3-டிரேம்கள் (Drams) இவைகளை ஒன்றாகக் கூட்டி சுத்தமான சீசாவில் நிறைத்து உபயோகித்துக் கொள்ளலாம். காற்றுப்பட்டால் இங்கி கெட்டுப் போவதுடன் குறைந்தும் போகும். ஆனதால் காற்றுப் புகாமல் கார்க் இட வேண்டியது அவசியம்.

B. வேணுகோபாலசாமி நாயுடு.

அமிர்த குணபோதினி
**நான்காம் வால்யம்**
ஸம்பூர்ணம்.

இனி, ஐந்தாம் வால்யத்தைப் பெற்று ...ந்திப்போமாக.

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை. 1930

THE MADURA TAMIL SANGAM

5821